# ராஜா சர் அண்ணாமலை வள்ளல்
# பிறந்தநாள்
# வாழ்த்துப் பாக்கள்

1933–55

முதற் பதிப்பு—1951
இரண்டாம் பதிப்பு—1955

பதிப்பித்தோர் :—கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,
46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை—1.



அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல்

**டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்**

# முன்னுரை

## டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

(தமிழ்க் கலைத்துறைப் பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்)

எழுதியது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ருர் திருவள்ளுவர். இதனுல், பிறக்கும் பொழுதே புகழொடு பிறக்க என்பது கருத்து அன்று. ஒருவர் பிறந்து வாழ்ந்து முடிவெய்தியவுடன், இவர் புகழுடையவராய் வாழ்ந்தாரா அல்லரா என்பது கருதப்பட்டு, இவர் பிறந்ததால் உலகிற்கு ஏதாவது நன்மை உண்டா என்பது சிந்திக்கப்பட்டு, நன்மை உண்டெனின், அவர் தோற்றம் நல்லது என முடிவு செய்யப்படும். காலஞ்சென்ற டாக்டர் இராஜா சர் மு. அண்ணுமலைச் செட்டியாரவர்களோ புகழுள்ள குடியில் தோன்றியதாலும், மிக்க புகழினை இவ்வுலகில் நிறுவிச் சென்றதாலும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் எழுத்திற்கும், கருத்திற்கும் உகந்த உதாரணம் ஆயினுர்.

பொருள் உண்டாக்கக்கூடிய வழிகளை நிரம்ப ஆக்குதலும், வந்த பொருள்களைத் தக்க இடத்தில் சேர்த்து வைத்தலும், அவ்வாறு சேர்க்கப்பட்ட பொருளைப் பிறர் கவர்ந்து கொள்ளாமற் பாதுகாத்தலும், அங்ஙனம் பாதுகாக்கப்பட்ட பொருள்களிலிருந்து தனக்கென்றும் பிறர்க்கென்றும் இன்பத்திற்கு என்றும் அறத்திற்கென்றும் வகுத்தலும் வல்லவர் அரசர் என்று திருவள்ளுவர் மொழிந்தார். இதற்கு முழுதும் பொருத்தமானவராய்ச் செட்டி நாட்டரசர் அவர்கள் துலங்கினுர்கள். 'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு' என்ற திருக்குறளுக்கேற்ப, 'முயன்று ஈட்டுக, சேமித்துக் காக்க, தொண்டு ஆற்றுக' என்ற குறிக்கோளினை உடையவராய் அரசர் அண்ணுமலையார் வாழ்ந்தார் என்பது யாவரும் அறிந்த செய்தி.

அவர்கள் அயராத உழைப்பு உடையவராய்த் தாளாற்றித் தந்த பொருளை வேளாண்மை செய்பவராய் வாழ்ந்தார்கள். அவர்களது உழைப்பினை மாண்பு மிக்க கவர்னர் கோஷன் 1929 இலேயே பாராட்டினுர். பொருளை வணிகர் யாவரும் ஈட்டுகிருர்கள். ஆனுல், பிறர்க்குக் கொடுக்கும் எண்ணம் சிலருக்கே உண்டாகும். அச்சிலருள் உறுதியாகக் கொடுத்து விடுகிறவர்கள் தொகை இன்னும் சுருக்கம். அதற்குமேல், கொடுத்துவிட்டு மகிழ்கிறவர்கள் மிக மிகக் குறைவு, பிறர்க்கு ஈந்து, அதனுல் வரும் இன்பத்தைக் குடும்பத்தார் அனைவரும் பெற்று உவப்பது என்பது அருமையினும் அருமை. தாம் அரிதில் முயன்று ஈட்டிய பொருளிலிருந்து பிறர்நலத்திற்கென ஒரு கோடி ரூபாய் வழங்கிய வள்ளல் தமிழ் நாட்டில் வேறெங்கும் காண்டல் அரிது. அவ்வண்மையில் மகிழும் மக்கள் அமைந்த குடும்ப

மும் வேறிடத்தில் காண்டல் அரிது. இராஜா சர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள் சங்ககாலத் தமிழ் வள்ளல்களையே நினைப்பூட்டு கின்ருர்கள். நினைப்பூட்டுகிருர்கள் என்றே சொல்வேன், அவர் அறங்களும், அவர் நினைவும் இன்றும் நிலைபேறுடையனவாக இருத்தலின்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது மணிமேகலை. செட்டிநாட்டரசரின் அறங்களால் எத்துணையோ பேர் உண்டி பெறுகிருர்கள். 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே' என்னும் சிவஞானபோதம். கடவுள் கோவில் கொண்டிருக்கும் இடங்கள் பலவற்றிற்கு அரசரவர்கள் பெருந்தொண்டு ஆற்றினுர்கள். 'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினுயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்' என்ருர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். ஓர் ஏழைக்கு எழுத்தினைக் கற்றுத் தருதற்கு ஏற்பாடு செய்தலே ஆயிரம் சத்திரம் அமைப்பதற்கும், பதினுயிரம் கோவில் கட்டுதற்கும் கோடி மடங்கு சிறந்தது என்ருல், ஆயிரக்கணக்கான மாணவர்கள் முதல் வகுப்பி லிருந்து பல்கலைக் கழக வகுப்புகள்வரை படித்துத் தேர்ந்து பட்டம் பெற்று வாழ்க்கையை வளமுறச் செய்து கொள்வதற்கு உரிய வசதிகளைச் செய்து தந்த பெரியாரின் வண்மையை என்னென்பது!

அறம் முப்பத்திரண்டு வகைப்படும் என்பது மரபு. அம்முப்பத் திரண்டு அறங்களில் காலத்திற்கும் இடற்கும் பொருத்தமானவற்றை ஆராய்ந்து தேர்ந்து அவற்றைச் செவ்வையாகச் செய்தமைத்த செட்டியாரவர்கட்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் செட்டிநாட்டரசர் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்றுச் சீரிய நற்ருெண்டுகள் இருபத்தோரு ஆண்டு களாக ஆற்றிவருகின்றது. இதிலிருந்து வெளியேறிய மாணவர் அனைவரும் பல்கலைக் கழகம் நிறுவிய பெரியாருக்கு வணக்கமும், நன்றியும் செலுத்துதற்கு உரியர். லார்டு கோஷன் 1929-ஜூன் மாதம் 10உ கூறியவாறேபோல் வழிவழியாக வருகின்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் செட்டிநாட்டரசரின் பேருபகாரத்திற்கும் பெருங் கொடைக்கும் நன்றி செலுத்துவார்கள் என்பது உண்மை.

'நன்றி மறப்பது நன்றன்று' என்ருர் தமிழ்ப் புலவர் திருவள்ளுவர். தினையளவு நன்றியும் தமிழனுல் பனையளவாக மதிக்கப்படும் என்று அவரே கூறினுர். அப்படியிருக்க, பனையளவு நன்றியை எத்துணைப் பெரிய அளவு மதிக்க வேண்டும் என்றும் எண்ணிப் பார்ப்போமாக. ஏறத்தாழ நாற்பது இலட்சம் ரூபாய் இப்பல்கலைக் கழகத்திற்கெனச்

செட்டிநாட்டரசர் அவர்கள் வழங்கியிருப்பது தினையளவு நன்றி அன்று, பனையளவு நன்றியேயாகும்.

அந்நன்றியைப் பாராட்டாமல் இருக்கத் திருக்குறள் கற்ற தமிழ்ப் புலவர்களால் இருக்கவே இயலாது. அதனால், ஆண்டுதோறும் தமிழ்ப்புலவர்கள் செட்டிநாட்டரசரை நாள்மங்கல விழாவன்று—பிறந்த நாளன்று—வாயார, நெஞ்சார வாழ்த்தினார்கள். அவ்வாழ்த்துக்களின் தொகுதியே இப்பொழுது வெளியாவது. இத்தொகுதியில் தமிழ்ப் பேராசிரியர்கள் நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டித மணி மகா மகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ, எம். எல்., தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார் ஆகியோரும் பாஷா கவிசேகர மகா வித்துவான் ரா. இராகவ அய்யங்கார், சர்க்கரை இராமசாமி புலவர், திரு. பொன்னோதுவார், நாவலர் மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பெரியோரும் பாடிய செய்யுட்களும் அமைந்திருக்கின்றன. என்னால் பாடப்பட்ட செய்யுட்களும் உள. மேலும், இப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்களாகிய பண்டித, வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. பி. எல்., ஆகியவர்களும், பல்கலைக் கழகப் பதிவாளர் டி. டி. மீனாட்சிசுந்தரம் அவர்களும், பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்களாகிய ஆ. பூவராகம் பிள்ளை, வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை, ஈ. எஸ். வரதராச ஐயர் பீ. ஏ., ச. தண்டபாணி தேசிகர், வி. கே. சேஷாத்திரி ஆசாரியார், எம். ஏ., சுந்தரேச வாண்டையார் ஆகியோரும் பாடிய பாக்களும் உள.

'புலவர் பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே' எனப் பாண்டியன் உக்கிரப் பெருவெழுதியை ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவர் சிறப்பித்தார் எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று (செய்யுள் 21) கூறும். புலவர்களால் பாடப்படுதற்கு உரிய செயல்களைப் புரிந்திருந்தால் புலவர்கள் பாடுவர் என்பதும், அவர்கள் பல்வேறு துறைகளில் பல்வேறு விதமாகப் பாடுதற்கு உரிய செயல்களை அப்பாண்டிய மன்னன் புரிந்திருந்தான் என்பதும் இதனால் அறியப்படும். செட்டிநாட்டரசர் அவர்கள் பாடப் பெறும் பெருமையை உடையவர். பாடுதற்குரிய செயல்கள் பல செய்தவர். அறப்பணிகளில் ஈடுபட்டவர். அமைத்தற்கு அரிய பல்கலைக்கழகத்தை நிறுவி வளர்த்த பெரியார். இயலிசை நாடகத் தமிழ் வளர வகைவழிகள் தேடித் தமிழ் நாட்டினருக்கே ஊக்கம் ஊட்டிய பெரியார். ஆதலால் புலவர்கள் பல்வேறு துறைகளில், பல்வேறு பாவகைகளில் வள்ளல் ஒருவரைப் பாடுதற்குத் தக்க வாய்ப்புப் பெற்றார்கள். அப்புலவர்களின் புலமையைத் துய்ப்பிக்கக் கருதி, அப்புலமையைக் காட்டுதற்குப் பொருளாக இருந்த செட்டி நாட்டரசர்

அவர்களின் பெருந்தகைமைக்கு நன்றி செலுத்துதற்காகவும் இத் தொகுதி வெளிப்படுத்தப் பெறுகின்றது.

இத்தொகுதி முதன் முறையாக 1951 ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப் பெற்றது. அப்பொழுது 1950 ஆம் ஆண்டுவரை அமைந்த செய்யுட்களே பதிப்பிக்கப் பெற்றன. பின்னர் 1954 வரை அமைந்துள்ள செய்யுட்களையும் வெள்ளி விழாவன்று பாடப் பெற்ற வாழ்த்துச் செய்யுட்களையும் சேர்த்து வெள்ளிவிழா நாளில் ஒரு தொகுதியாக வெளியிட்டு வழங்குதல் பெருங் கொடை வள்ளலுக்கு நாம் செய்யத் தக்க நன்றியாகும். 1948 ஜூன் மாதத்திற்குப் பிறகு உயர் திரு. இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களே பல்கலைக்கழகம் புரவலரும் நிறுவுநரும் ஆகியுள்ளார்கள். அவர்கள் தமது அருமைத் தந்தையார் சென்ற நெறியிலே சென்று, பல்கலைக்கழக வளர்ச்சிக்கு உரிய பெருநிதிகளை ஒவ்வோர் ஆண்டும் அளித்து வருகின்றார்கள். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பிற பல்கலைக் கழகங்களின் ஒப்பதும் மிக்கதும் ஆதல் வேண்டும் என்ற விழுமிய நோக்கமுடையராய் அயராது உழைத்து வருகின்றார்கள். அவர்களுடைய தமிழிசைத் தொண்டு மக்கள் தொண்டு, மொழித் தொண்டு, நாட்டுத் தொண்டு, கொடை வளம், பண்புடைமை, அன்புடைமை, நட்பினிமை, காண்டற்கினிமை ஆகியவற்றை நாடு நன்கறியும். 1948 முதல் பாடப்பெற்றுவரும் செய்யுட்களில் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் பாராட்டப் பெற்றுள்ளனர். அவர்கள் தமது தந்தை யாரிடத்து வைத்துள்ள பெருமதிப்பினாலும், பேரன்பினாலும் நிறுவுநர் நாண் மங்கல விழா நாள் (Founder's Day) என்பது தமது தந்தையார் பிறந்த நாட் கொண்டாட்ட விழா நாளாகவே இருக்க வேண்டுமென்றும், தமது பிறந்தநாட் கொண்டாட்ட விழா நாளாக இருத்தல் கூடாதெனவும் பணித்துள்ளார்கள். ஆயினும், அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி 1948 முதல் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களே புரவலரும் நிறுவுநரும் (Founder and Pro-Chancellor) ஆதலால், அவர்களைப் புலவர்கள் பாராட்டித் தத்தம் உளநிறை நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

செட்டி நாட்டரசர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பெயரும் பீடும் நின்று நிலவுக! அவர்களுடைய வழித்தோன்றல் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் மனைவி மக்களொடு பொலிந்து எல்லா நலன்களொடும் இறைவன் அருளால் இனிது நெடுங்காலம் வாழ்க எனத் தமிழ் நாட்டார் அனைவரும் இன்று வாழ்த்துவர் என்பது உறுதி.

# உள்ளுறை


| எண் | பெயர் | செய்யுட்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எஸ். சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்., | 19 | 9 |
| 2. | மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் | 28 | 13 |
| 3. | கே. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., | 3 | 21 |
| 4. | மகாவித்துவான் ரா. இராகவையங்கார் | 36 | 25 |
| 5. | பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | 7 | 33 |
| 6. | தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்., | 3 | 34 |
| 7. | சர்க்கரை இராமசாமிப் புலவர் | 2 | 35 |
| 8. | சு. பொன்னுேதுவார் | 4 | 38 |
| 9. | பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் எம்.ஏ., பிஎச்.டி. | 17 | 39 |
| 10. | பேராசிரியர் பண்டித வித்துவான், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் | 47 | 44 |
| 11. | போராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல்., | 24 | 55 |
| 12. | டி. டி. மீனுட்சிசுந்தரம், பி.ஏ., பி.எல்., பதிவாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் | 12 | 58 |
| 13. | வித்துவான் அ. பூவராகம் பிள்ளை | 10 | 60 |
| 14. | வித்துவான் மு. அருணுசலம் பிள்ளை | 35 | 62 |
| 15. | இ. எஸ். வரதராஜ ஐயர், பி.ஏ., | 101 | 79 |
| 16. | வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் | 5 | 97 |
| 17. | வி. கே. சேஷாத்திரியாச்சாரியார், எம்.ஏ. | 1 | 99 |
| 18. | வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார். | 5 | 101 |

# ராஜா சர் அண்ணாமலை வள்ளல்

## பிறந்தநாள்

# வாழ்த்துப் பாக்கள்

**தமிழ்ப் பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.**

(14—2—1934)

மாறெதுவும் வேண்டாது நலநாடிக் கடனாற்று
மரபில் வந்தோன்
ஆறுதவுஞ் சடையானுக் கன்பாரண் ணாமலைமன்
அறத்து ளெல்லாம்
வீறுதவத் தீதொரீஇ நன்றாய்க்கு மறிவுதரு
மேலாங் கல்விப்
பேறுதவுஞ் சாலையுடன் பெருநகரு நிறுவியிசை
பெருக்கிக் கொண்டான். 1

மானம்விற்றுப் பதவிபொருள் வாங்கிமகிழ் பவர்குழுமி
வாழு மிந்நாள்
தானதவத் துறைதழையத் தாளாற்றி யறந்தருதன்
தனத்தை வாரி
வேணவரை தந்துமட வார்பொறையின் மேல்வன்மை
மடமை நீக்கி
மாணவரை மாணவராக் குவதெனப்பல் கலைக்கழகம்
வழங்கி னான். 2

பத்திமகிழ் தில்லைச்சிற் றம்பலவன் சேவையிலே
பழுத்துத் தூய்தாய்
நித்தமுயர் பெருமரபைத் தன்முதலா வழிமுறையே
நிருப ராநின்
றொத்தபுகழ் அறம்வளர்க்க உயர்த்தினவன் வெள்ளணிநாள்
உவந்து செய்வான்
வித்தகமுத் தையப் பெயரான் தந்தையினும் வீறுபெற
விரும்புஞ் சான்றோன். 3

சால்புடையான் அவ்விளங்கோத் தன்றந்தை வெள்ளணிநாட்
டலைமை தாங்கு
மேல்புடையான் கலைக்கழகத் துணைத்தலைவன் எனவிரும்ப
இறைமை தாங்கி
மால்படையா மதியரங்க நாதனமர்ந் திருக்கவிழா
மாணப் பாரி
நூல்படைமா ராகவநா வலனரங்கில் நுவலநனி
சிறந்த தம்மா. 4

கரணமோர் மூன்றுந் தூய்மை
கனிந்துயர்ந் தொளிரக் கல்வி
யரணமோர்ந் தடுப்பார்க் கெல்லாம்
ஆற்றலும் அறிவு மோங்கப்
பரணமாக் கலைக ளெல்லாம்
பயில்பெருங் கழகந் தன்னைச்
சரணமா யூழி நிற்கத்
தமிழகந் தழையத் தந்தான். 5

வள்ளலண் ணமலை வாழிய வூழி
கள்ளவிழ் தாரவன் கான்முளை வாழி
எள்ளரு நல்லறம் யாவையும் வாழி
வள்ளியன் பல்கலைப் பள்ளியும் வாழி. 6

(12—10—1935)

நண்ணும் போற்ற நலம்புரியா நாளறியா
அண்ணு மலைகழகம் ஆக்கினனல்—எண்ணார்ந்த
எல்லாப் பொருளும் இனிதுதரும் நல்லறிவை
எல்லார்க்கு மேயுதவு மென்று. 7

என்றும் நிலவுபுகழ் யாண்டும் நிறுவுகுணக்
குன்றம் இவன்குடியைக் கொண்டன்றி—நன்றெய்தல்
இன்றென் றிறைமைபுக ஏற்றதனை ஒப்புரவால்
மன்ற அளித்தான் மணந்து. 8

மன்னவர்க்கும் வள்ளன்மை வாய்ப்பரிதால் வள்ளியர்பால்
மன்னுதலை வேண்டுமிறை மாட்சியெனும்—பொன்னுரையைக்
கொள்ளற்குச் சான்ருகும் கோமான்அண் ணமலைமன்
வெள்ளணிநாள் யாமயர்வாம் வேட்டு. 9

வேணவா மிக்குடையார் வெஃகும் பொருளனைத்தும்
மாண உதவ மதித்தமைத்த—மாணவர்தம்
கண்ணேர் கலையனைத்தும் கற்றுயர்கல் லூரிசொலும்
பண்ணேர் புகழுடையான் பண்பு. 10

பழிமேல் வெகுளி பரவு புகழிற்
கழிகாமம் தில்லைக் கடவுள்—வழிபாட்டில்
ஊன்றும் உளமயக்கிம் மூன்றுங் கொடைமடத்திற்
கான்றதுணை அண்ணற் கமைந்து. 11

ஆன்றபுகழ் அண்ணா மலையரசர் வெள்ளணிநாள்
சான்றவிழாக் காண்பரிரு தக்கோர்கள்—ஆன்றகலை
வல்லார் புகழ்சீநி வாசப் பெருந்தகையான்
பல்லார் பரவிளங்கோப் பார். 12

பாரார் அறிஞரெலாம் பாராட்டு மெய்க்கீர்த்தி
சாரேறண் ணாமலைமன் தானுமவன்—பேரார்
கழகமும் கோக்குடியும் கான்முளையும் வாழ்க
நிழலறமும் நீள்வளமும் நேர்ந்து. 13

(30—9—1936)

திறம்படர் செல்வ மோங்கத் தீதெலாம் நீங்க மண்ணில்
வறங்கெட மாந்தர் வாழ்வு வளம்பெற வழங்கும் வாய்மை
நிறம்பட ரறிவார் கல்வி நிறைப்பதே நியம மென்று
புறம்படர் புகழான் பேரார் புலம்வளர் கழகம் தந்தான். 14

அறந்தரு பொருளாற் குன்றா அறந்தலை வளர்த்து நின்றான்
சிறந்தநல் லூரனாற் சீர்த்த செம்மலண் ணாமலைமன்
பிறந்தநாள் பெருகப் பேணிப் பெருங்கலைக் கழகம் நன்றி
மறந்தமை யாத மாண்பால் வழிவழி சிறக்க வாழ்த்தும். 15

தென்னர் தமிழுயரச் செங்கோல் அறம்வளர்த்த
அன்னை கயற்கண்ணிக் கன்புடையான்—மன்னர்
தலைவனண் ணாமலையுந் தன்குடியும் பேரார்
கலைநிலையும் வாழியவே காண். 16

(30—9—1937)

இருமை நீரறிந் தீண்டறம் பூண்டவன்
ஒருமை யுள்ளமொ டொப்பில் முயற்சிதன்
பெருமை பேணிடப் பெட்பொடு மாற்றுதற்
கருமை யாற்றும் அண்ணாமலை மன்னவன். 17

தீது தீர்திருத் தெள்ளறி வத்திருக்
கோது தீர்கல்வி கூட்டும் அறிவிலார்
யாது மில்லவர் என்னுடை யோருமால்
ஈது நற்கலை யென்றறம் எண்ணினன். 18

ஏய பேர்ப்புகழ் எங்கணு மண்டிட
நேயப் பல்கலைப் பள்ளி நிறுவினன்
தோய நல்வளம் தோமற வாழ்கவே
தீய வீழ்கநந் தேயமும் ஓங்கவே. 19

---

# மகாமகோபாத்தியாய
# பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

(12—10—1934)

உலகத் தொருவ னுயர்கொடைக்கென் றேத
மலர்புகழ்சா லண்ணு மலைமன்—நிலவுமியல்
பூண்மங் கலத்தமிழாற் பொற்புறநாம் வாழ்த்துவமிந்
நாண்மங் கலஞ்சிறக்க நன்று. 1

ஒப்புரவே முதலாய உயரறங்கள் பலபுரிந்திவ்
வுலகெ லாந்தன்
மெய்ப்புகழால் விளக்கமுற அப்புகழ்க்கும் அணிகலனாய்
விளங்கு மேலோன்
செப்பமுற அறத்தாற்றிற் பொருளீட்டி யின்பநுகர்
செல்வன் யார்க்கும்
எய்ப்பிடத்து வைப்பனைய இனியவனண் ணாமலையாம்
ஏந்தல் மாதோ. 2

அவஞான மறத்துறந்த பட்டினத்துச் சாமியென
ஆன்றோர் போற்றுஞ்
சிவஞானச் செல்வனுயர் திருமரபின் முத்தையனுஞ்
சீமான் செய்த
தவஞானத் தாலுதித்தோன் பாற்கடலுட் சலஞ்சலமாஞ்
சங்கம் போல்வான்
நவமான மேதையினு லுலகமெலாம் பாராட்டு
நலத்தான் மிக்கான். 3

மகிமைபெறு சலஞ்சலமீன் மணிபலவுட் டலைமைபெறு
மணிமுத் தென்னப்
புகலவுயர் குணநிறைந்த முத்தையனும் இளங்கோவைப்
புதல்வ னக்கொள்
தகவுடையான் றன்மதியாற் செயற்கரிய பலசெய்வான்
சாருங் கீர்த்தி
மிகவுடையான் அஞ்சாத விறலுடையண் ணாமலையா
மேதக் கோனே. 4

நல்லறிஞர் நெடிதாய்ந்து தன்பெயரா னாட்டியவிந்
நகராந் தெய்வ
மல்லன்மிகு திருத்தடத்தின் மலர்ந்தருள்வெண் டாமரைநன்
மலர்போ லோங்கும்
பல்கலைசேர் தனிக்கழகம் நிறுவிய அண் ணாமலைவேள்
பரிசு நோக்கி
எல்லையற வியவாதார் நயவாதார் இவ்வுலகி
லெவரே யம்மா! 5

அந்நாளின் முச்சங்கத் தரசுவீற் றிருந்ததமிழ்
அன்னைக் கென்னோ
இந்நாளி லொதுக்கிடமு மிலதாயிற் றக்குறையை
யிலதாச் செய்வான்
முன்னாநின் றிக்கழகத் துறுசிறப்பி னிடனளித்து
முறையிற் போற்றும்
மன்னாவான் எங்கள்குல மணிவிளக்கண் ணாமலையா
மதிமிக் கோனே. 6

விண்டிகழ்மீன் பலசூழ விளங்குமதி யெனநிலனாள்
வேந்தர் வேந்தன்
கண்டசிறப் பினுக்கேற்பப் பற்பலவாம் பட்டமொடு
கவின மேலாக்
கொண்டளித்த செட்டிநாட் டரசனெனும் பெரும்பட்டங்
குலவப் பெற்றே
யெண்டிசையு மிசைவிளங்க வாழ்பவன் அண்ணாமலையாம்
எங்கள் மன்னே. 7

நல்லறமே தினநாடு நாயகன் அண் ணாமலையா
நங்கள் கோமான்
எல்லையிலாப் பெரும்புகழும் இருநிதியுங் கலையறமு
மினிதி னோங்கி
மல்லன்மனை மக்களொடு சுற்றமெலாஞ் சூழவுயர்
வாழ்க்கை மன்னித்
தில்லைநடம் பயில்கூத்தன் திருவருளா னீடூழி
சிறந்து வாழ்க. 8

மாட்சிமைசா லண்ணா மலைவள்ளல் தன்பெயராற்
காட்சி தருபல் கலைக்கழகம்—ஆட்சி
புரியும் இறையருளாற் பொன்றாதெஞ் ஞான்றும்
தரணிமிசை வாழ்க தழைத்து. 9

## பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

(12—10—1935)

மாநிலச்செங் கோலோச்சு மன்னர்பிரான் மன்னனெனத்
தான்வழங்கப் பெற்ற தனிச்சிறப்பாற்—கோனாகும்
அண்ணா மலைவே ளவனியுறு நாள்விழாக்
கண்ணாரக் காண்பேங் கனிந்து. 10

சீரார்ந் தொளிருந் தனவணிகச்
செல்வ மரபிற் பெருங்குடியாஞ்
செழும்பாற் கடலின் அமிழ்தமொடு
சிறிதுங் கலைகள் குறையாமல்
ஏரார்ந் தொளிரு நிறைமதிய
மென்னத் தோன்றி யுயர்குணத்தால்
இனிய மொழியால் மதிவலியால்
எவர்க்கும் எளிய காட்சியினாற்
காரார்ந் தனைய பெருங்கொடையால்
கருதுங் கருமந் தனைமுடிக்குங்
கருத்து வலியால் எவருநிகர்
காணாப் பெருமை படைத்தவன்பூந்
தாரார்ந் தொளிருந் திருமார்பன்
தகைசால் அண்ணா மலையரசன்
தக்க நாண்மங் கலத்தியையுஞ்
சாறு சிறக்க வாழ்த்துவமே. 11

திருவுக் கொருவன் கொடைக்கொருவன்
தீர நினைந்து துணிந்துபுரி
செயலுக் கொருவன் வாழ்க்கைநலச்
சிறப்புக் கொருவன் புகழ்க்கொருவன்
உருவுக் கொருவன் ஒப்புரவி
னோங்கும் அறத்திற் கொருவனென
உரைப்ப ருலகர் இவ்வனைத்தும்
ஒருங்கு காண்டற் குவமையிலாத்
தருவுக் குரிய பெருவண்மை
சான்ற அண்ணா மலையரசே
தக்கோ னெனநல் லறிஞரெலாம்
சாற்றும் பெருமை தகப்படைத்தோன்
கருவிற் பொலியுந் திருவுடையான்
கவின்சேர் நாண்மங் கலஞ்சிறப்புக்
காணும் பெரியீர்! நலம்வளரக்
கருதி யவனை வாழ்த்துவமே. 12

தான்பெற் றெடுத்துத் தன்பெயராற்
றழைக்க நிறுவுஞ் சருவகலா
சாலைக் குழவி தனைவளர்க்குந்
தலைவர் முதலாம் அறிஞர் இளங்
கோன்முத் தையனே முதலாய
குமரர் மொழிநூற் சுவையையுளங்
கொள்ளும் கிளைஞர் சோதரிகள்
குலவி விளங்கும் இவ்வவையில்
தேன்முற் றியநல் லொழுக்கமெனச்
சிறந்த புலவர் கனிந்துரைக்குஞ்
செய்யு ளுருவா யுரைவடிவாய்த்
திகழும் புகழாம் ஒளிவிளக்கிற்
கான்முற் றியதார்த் திருப்புயத்தெங்
கண்ணர் அண்ணா மலைக்குரிசில்
காட்சி யளித்து வீற்றிருக்குங்
கவினர் நிலையை வாழ்த்துவமே. 13

### வெண்பா.

ஆக்கன் முதலாய ஐந்தொழிற்குந் தான்முதலென்
றோர்க்கும் படிவெளியி லோர்நடனம்—பூக்கும்
அரனருளால் வாழுமுயர் அண்ணா மலைமன்
உரன்வளர்க யாண்டு முயர்ந்து. 14

(30—9—1936)

### (தரவு)

மங்கலமாம் உயரறமும் வான்பொருளும் இன்பமுமே
தங்கியசீர்க் கானாடு காத்தானூந் தனிநகரிற்
செல்வமுயர் வணிககுலத் திருவிளக்கா யொளியுலகு
மல்கவரும் அரசன்அண்ணா மலைவள்ளல் மங்கலநாட்
கொண்டாட்ட மிதுகுறித்துக் குழுமியவொண் புலவீர்காள் !
தொண்டாற்று மாண்புடைய சோதரர்காள் ! சோதரியீர் !

### (தாழிசை)

பீடுறும் அண் ணாமலைமன் பெருமிதத்திற் குறுமேது
நாடுமிடத் தறிஞரவை நாயகமாய் வீற்றிருந்து
கோடுதலில் பொருளுரையாற் குறிப்புணர்த்துந் திறனென்றோ
ஈடரிய வுளத்திண்மை யெனுங்குணமு மொன்றன்றே.

தட்டறவெச் செயலினையுந் தகமுடிக்குந் திறன்வாய்ந்த
ஒட்டியநற் குணநிதியாம் ஒருவனுயர் பெருமிதத்தைச்
செட்டிநாட் டரசனெனத் திசைமுழுது நிறைந்துதிகழ்
மட்டிலாப் பெரும்புகழும் வளர்த்ததெனல் மிகையாமோ.

உலகினுயர் திருவுடையாற் கொத்தபெரு மிதஞ்சிறந்த
தலகில்பல ஒப்புரவாம் அறங்கணனி தழைவதற்கும்
கலைபலவும் வளர்வதற்காங் கல்லூரி நிலைபெறற்கும்
புலவருளங் களிப்பதற்கும் பொருள்வரையா தளித்ததன்றே.

என வாங்கு (தனிச்சொல்)

(சுரிதகம்)

மன்னவன் அண்ணா மலையெனும் வள்ளல்
தன்னிக ரில்லாத் தகவுநனி படைத்தோன்
தொல்லைநற் றவத்தால் எல்லையில் செல்வமுந்
தில்லைக் கூத்தன் திருவருட் செல்வமுஞ்
சேர்தரப் பெற்ற சீரிய வாழ்க்கையன்
அன்னவன் வாழ்க்கை மன்னிய செல்வியும்
உளங்கொளு மன்பின் இளங்கோ வென்னும்
உத்தம குண நிதி முத்தையன் முதலிய
மக்களுங் கேளிரும் ஒக்கலும் இன்புறீஇ
வாழ்கபல் லாண்டு நிலமிசை வாழ்கெனக்
கறைமிட றணிந்த கண்ணுதல்
இறைவன் திருவடி யெண்ணிவாழ்த் துதுமே.

(30—9—1937)

திருவளர் தெய்வத்து உருவளர் செந்தமிழ்
நிலமகள் நுதலில் திலகமா ஒளிரும்
வானாடு செல்வம் மலிதரப் பெற்ற
கானாடு காத்தான் எனும்பெயர் கவினிய
திருநகர்க் கண்ணே வருபெருஞ் செல்வன்
எத்திசை யும்புகழ் முத்தைய னென்னும்
மணிதரும் ஒளியென அணிதரு புதல்வன்
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்னும்
ஆன்றோ ருரைக்குச் சான்றாய்த் திகழ்வோன்
செல்வப் பெருக்கமுங் கொடையின் சிறப்பும்
நல்லியற் புலவர் சொல்லினுக் கடங்கா
எல்லைய வாக இயைதரப் பெற்றோன்
காலமுங் கருவியுங் கண்ணிய இடனும்
நூலோர் முறையின் நுண்ணிதிற் றேர்ந்து
தொடங்குமெக் கருமமும் மடங்க லின்றிச்
செவ்விதின் முடிக்கும் எவ்வமில் திறலினன்
நாடுநன் னலம்பெற நாடிமற் றதற்குக்
கல்வியும் அறிவுங் கவின்பெற வளர்த்தலை
ஒல்லுவ தெனக்கண்டு ஓங்குதன் பெயரால்
நல்லிய லறிஞர் நவின்றுபா ராட்ட

மைந்தரும் மகளிரும் முந்துறீஇப் புகுதந்து
ஆங்கிலத் தொடுதமிழ் அனையபன் மொழிகளும்
இன்னிசைக் கலைகளும் இயல்பிற் பயில்தரப்
பல்கலைக் கழகம் பாங்குற நிறுவியோன்
மட்டிலாப் பெருமையாற் செட்டிநாட் டரசென
மன்னவர் மன்னன் நன்னரின் வழங்கப்
பெற்றவன் நம்மனோர்க்கு உற்றவன் எங்கள்
கண்ணார் மணியெனக் கவின்றரு கீர்த்தி
அண்ணா மலையெனும் அரசுபல் லாண்டு
வாழ்க வாழ்க மண்மிசை வாழ்கென
இப்பே ரவைக்களத்து இயைபெருந் தலைவரும்
புலத்துறை முற்றிய நலத்துறை வோரும்
கலைபயில் மக்களும் நிலைபெற இயைந்து
கூத்துடை யவன்கழ லேத்தி
வாழ்த்துதும் இனிதே வாழ்த்துதும் இனிதே. 16

(30—9—1938)

**உ**லக முவப்பத் தோன்றியிருள்
ஒழியத் திகழும் ஞாயிறென
ஓங்கும் வணிகர் திருமரபில்
உதித்தோன் அறத்தால் உயர்திருவால்

அலகில் உரனாற் பெருங்கொடையால்
அன்பா லளியால் அருஞ்செயலால்
ஆன்ற மதியாற் செட்டிநாட்
டரசென் றரசர்க் கரசருளக்

கலைகள் பலவும் வளர்நிலையங்
கண்டோ னவனெங் கண்மணிபோற்
காண்போன் அறிஞர்க் குயர்சிறப்புக்
கவின வளிப்போன் புகழ்மடந்தை

திலக மெனவாழ் செல்வனலந்
திகழும் அண்ணா மலைக்குரிசில்
சீர்த்தி மிகப்பெற் றிறையருளாற்
சிறந்து நீடு வாழியரோ. 17

**வா**னாடு செல்வ மலிந்திந் திரதிருவிற்
கானாடு காத்தான் கவினவரும்—மாநாடு
மார்புடையான் அண்ணா மலைவேள்நாள் மங்கலத்தின்
சீர்புவியி லோங்க சிறந்து. 18

ஆய்ந்த அறிவும் அழகார் மொழிவளனும்
வாய்ந்த வெழிற்சீநி வாசனெனும்—ஏந்தல்
தலைமையெனும் பேற்றிற் சருவகலா சாலை
நிலவுகபல் லாண்டு நிலைத்து. 19

(30—9—1939)

உலகெலாம் விளங்கத் தோன்றும் ஒண்கதிர்ச் செல்வ னேபோல்
இலகொளி யாண்டுஞ் சூழ இந்நில வரைப்பிற் ரேன்றிப்
புலனிறை செல்வங் கல்வி புண்ணியச் செயலென் றின்ன
மலர்திருப் பெரியோன் அண்ணுமலை யெனும் வள்ளல் வாழ்க. 20

மக்கடம் நலத்திற் கேற்ற வான்பொருள் கல்வி யல்லால்
தக்கதொன் றில்லை யென்னும் உண்மையைத் தகவிற் கொண்டு
பக்குவ மீதென் ருய்ந்து பலகலைக் கழகங் கண்ட
மிக்குயர் செல்வன் அண்ணு மலையெனும் வேந்தன் வாழ்க. 21

தன்மதி வலத்தாற் றன்குடிப் பெருமை தரணியிற் றிகழ்தர வரசாய்ப்
பொன்மழை பெய்து கலைப்பயிர் வளர்க்கும் புட்கலா வர்த்தமே யனைய
நன்மதி சால்அண் ணுமலை மன்னன் நாட்டுமிப் பல்கலைக் கழகம்
என்மதி யுளகா றிந்நிலத் துயர்ந்தே யிதம்பல விளைத்து வாழியவே. 22

தன்னைப் புரக்குந் தலைமகனைக் கொண்டுதமிழ்
அன்னை யுளமுவந்தண் ணுமலைப்பேர்—மன்னவற்கிங்
கெந்நலமு மோங்க இனிதருள்க வென்றவள்தம்
பொன்னடியை வாழ்த்துவமிப் போது. 23

(30—9—1943)

நிலஞ்சார்ந் தொளிரும் அமரர்பதி
நிகர்க்குஞ் செட்டி நாட்டினிலே
நிலவு செல்வம் மிகப்படைத்து
நிகரில் வாழ்க்கைப் பயன்றுய்ப்போன்
வலஞ்சார் மதியால் அறச்செயற்கு
வாரி வழங்கும் பெருங்கொடையால்
மன்ன ரளிக்கும் விருதுகளால்
மண்ணுஞ் சுருங்க வளர்புகழான்
புலஞ்சார் கல்விப் பெருங்கழகம்
புவனி விளங்கத் தனிநிறுவிப்
புரக்கும் பெரியோன் தமிழிசைக்குப்
போந்த இடர்ப்பா டெலாங்களைந்தித்
தலஞ்சார் மக்கள் இன்பமுறத்
தந்தோன் அரசண் ணுமலைப் பேர்த்
தகைசால் வள்ளல் பல்லாண்டு
தழைத்து நீடு வாழியவே. 24

(30—9—1944)

வாணிகத் துறையாற் றிருமகள் நலனும்
மாண்புறு பல்கலைக் கழகம்
பேணிய முறையாற் கலைமகள் நலனும்
பெற்றவன் ஒப்புர வறமே
பூணெனப் பொலியும் நெஞ்சினன் உலகில்
பொருவிலாப் பெருங்கொடை வள்ளல்
சேணுற விளங்குஞ் சீர்த்தியான்எங்கள்
செட்டிநாட் டரசன் வாழியவே. 25

நல்லியற் கவிஞர் நாவினுக் கடங்கா
நலம்பல செறிந்தவன் நாட்டிற்
பல்கிய மக்கள் அகவிரு ளொழிக்கும்
பல்கலைக் கழகமாம் பரிதிச்
செல்வனை யீன்ற புண்ணியத் தந்தை
செழிப்புறத் தமிழிசை வளர்க்கும்
மல்கிய கருணைத் தாயெனும்அண்ணா
மலைப்பெயர் வள்ளல் வாழியவே. 26

உள்ளத் திறலும் ஒழியா அருஞ்செயலும்
தெள்ளத் தெளிந்துரைக்குஞ் செம்மொழியும்—அள்ளியள்ளி
வாரி வழங்குநம் வள்ளல்அண் ணாமலைமன்
பேரிசையும் வாழ்க பெரிது. 27

(30—9—1945)

திருவினால் அறிவாற் பிறர்செயற் கரிய
செயலினால் நிகரிலாச் செல்வன்
அரியநற் புகழின் எல்லையிற் றிகழும்
ஆண்மைசால் செட்டிநாட் டரசன்
பொருவிலாக் கலைகள் பலவளர்ந் தோங்கப்
புரிதரு புண்ணிய மூர்த்தி
மருவிய கருணை யுளநிறை அண்ணா
மலைப்பெயர் வள்ளல் வாழியவே. 28

# தமிழ்ப் பேராசிரியர் கே. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.

(28—9—1941)

திருவளர் தில்லைப் பெருமுதல் வன்தனி
அருமைத் திருப்பணிக் காயிரம் ஆயிரம்
பொற்குவை நல்கிப் பொருவில் கோயில்
அற்புதக் கோபுரம் அணிபெற அமைத்தே
ஆவயிற் பூசனை புரியும் அந்தணர்க்
கீவகை நாடொறு மிருபொழு தன்னம்
அட்டில் படைத்த மட்டில் செல்வச்
செட்டிற் சிறந்த சீர்மிகு பெருங்குடி
ஓங்கும் புகழ்பெற உதித்த வண்ணல்
ஓங்குறு சிதம்பரப் பதிநீர் வேட்கை
தணியத் தீம்புனல் தகுமுறை யுதவிப்
பணிமிகு நகராள் பதவி தாங்கிக்
கலையுயர் பள்ளி கண்டா ரிளவல்
தலைசிறந் தன்பர்க் கருளுந் தகைமை
அங்கயற் கண்ணி அருட்பேர் பூண்ட
சங்கத் தமிழ்க்கல் லூரிச் சார்பாய்
வடமொழிச் சாலை வண்பண் டிதர்பயில்
இடங்களை நிறுவி எழிலார் பதியயல்
அண்ணா மலைநகர் அழகின் அமைத்தே
கண்ணார் கலைவகை கவினப் பெற்ற
தமிழ்த்தாய் வீறுறுந் தனிப்பெரு மாடம்
இமிழ்திரை யுலகில் இஃதொன் றேயென
நாட்டிய சீரோன் நன்மா ணவர்பலர்
காட்டுந் திறமை கதிர்ப்பக் காணம்
அலைகடந் தயற்கலை நாடுவார்க் கருநிதி
புலவர் பாநயம் போற்றும் பொன்வளம்
பல்கலைக் கழகம் பலபா ராட்டும்
பல்வகைப் பண்ணை வெல்லுநர் பரிசுகள்
கூடல் சிரபுரம் குலவிய சென்னை
ஆடல் டில்லி அணித்தாம் டேர்டூன்
காழகப் பதிபல கதித்துள கலையிடம்
வாழ வளமுறு நன்கொடை வழங்கினேன்
தென்மறை வடமறை நூல்பயில் திருத்தலம்

மன்னி யோங்க மாண்பொருள் அளித்தோன்
பெண்டிர் நலம்பெறப் பிள்ளைகள் சீருறக்
கண்டபன் நிலையம் கவினுற உதவினேன்
செஞ்சிலுக் கழகம் கிறித்துவ இளைஞர்
அஞ்சிறைச் சங்கம் அணிதிலை மண்டபம்
இன்னோ ரன்ன எண்ணில் தன்மம்
நன்கு நிலைபெற நற்பொருள் நல்கினேன்
தில்லைக் கோவலன் திகழ்திருக் கோயில்
மல்லல் சிறக்க மாளிகை வகுத்தோன்
இருபெரும் போரிலும் எம்பெரு மன்னர்க்
கரும்பெறல் நிதியீந் தார்வந் திளைத்தோன்
தமிழிசை யெங்குந் தலைமை யெய்த
அமிழ்தெனப் பல்லா யிரம்பொன் னளித்தோன்
கோடியின் மேலாய்க் குவிபொன் பல்லறம்
நாடித் தந்த நல்லரு ளாளன்
திருவுந் தெளிவும் ஒருங்குடை ஒருவன்
பரிவும் பண்பும் பாடறிந் தொழுகலும்
அறிவும் ஆண்மையும் ஆள்வினை யுடைமையும்
செறிவும் பிறங்கிய செம்மல் யாரும்
நண்ணும் புகழ்சேர் அண்ணா மலைப்பெயர்க்
கண்ணா மெங்கள் கலைநல வேந்தன்
இணையில் வண்மை யென்று மோங்க
அணையுறு மறுப தாண்டின் மேலாய்ப்
பல்லாண் டாயுள் பரன்பாற் காதல்
மல்லா ரினநல மாண்பார் மனநலம்
அன்னை செந்தமிழ் அருள்நோக் கவைபிற
மன்னிய வெல்லா மணந்து வாழ
எல்லாம் வல்ல இறைவேண் டுதுமே.

(6—2—1943)

ஞாலத் தோங்கி நாள்பல வாழ்ந்து
சாலச் சிறந்த திருத்தம் பெற்றே
இலக்கண வரம்பும் இலக்கிய வளமும்
துலக்கும் சீர்த்தித் தொன்மை யுற்றுச்
செழிப்புறு கிளைபல தம்பால் உதிப்ப
வழக்கொழி மொழிகள் சிலவுள அவைதாம்
உயர்தனி மொழிகளென் றோதப் படுமே
நயத்தில் அவற்றில் இறையும் நழுவாப்
பழமையும் பண்பும் குறைபா டின்றி
வழக்கின் வீழா வண்மை சான்ற

ஒருமொழி யாதெனில் உலகம் அளந்த
திருமொழி தெய்வத் தமிழ்மொழி என்ப
அம்மொழிக் குரிய அருமைக் கலையகம்
இம்மா நிலத்தில் ஒன்றே முதற்கண்
இயல்வதென் றறிந்ததை நிறுவி யீடில்
செயற்புக ழீட்டித்தன் செம்பெயர் நாட்டி
நாளும் நனிநலம் தழைக்க நடாத்தும்
ஆள்வினை யுடைய அண்ணா மலைமன்
முத்தமிழ் வளர்க்கும் முதன்மைப் பெரியோன்
வித்தக இசையை முற்றிலும் தமிழில்
அமைதிறன் முடிக்கும் அரிய இயக்கம்
சமைமுறை கண்ட சதுரப் பாட்டினன்
திறம்பல நிறைந்த அறம்பல ஆற்றினோன்
தமிழ்வாணர் தம்மைத் தன்சுற்ற மாக
அமிழ்தளித் தாருயிர் காக்கும் அண்ணல்
நீடூழி வாழ நிறைநல மெலாம்பெற
ஆடிய பாதர் அருள்நா டுதுமே. 2

(30—9—1943)

உலகம் போற்றும் உயர்நலம் பலவும்
நிலவிய சீர்த்தி நெடிதுறுந் தோன்றல்
அறத்தா றீட்டிய அரும்பொருள் வளர்க்குந்
திறத்தாற் சிறந்த செழுந்தன வணிகர்
குலத்தினுக் கொருவன் கொடையினுக் கொருவன்
நிலத்தினும் பெரிதாங் கலைத்துறை பலவும்
ஒருங்கே நடமிடப் பெருங்கலைக் கூடம்
தன்பெய ரொடுநிறீஇ யன்பொடு புரக்கும்
பெருந்தகை யாளன் திருந்திய கொள்கையன்
அமிழ்தினு மினிதாந் தமிழிசை முழக்கம்
யாங்கணும் பரவ ஓங்கிய பொன்மழை
பொழிமுகில் அனையான் புத்துயிர் கொடுத்துத்
தமிழ்மொழி வளர்க்குஞ் சால்புடைக் குரிசில்
சூழ்ச்சியுந் துணிவுந் தொடங்குவினை முடிக்கும்
ஆட்சித் திறனும் அமைந்தநல் லறிஞன்
அண்ணா மலைப்பே ரரசன் தமிழர்
கண்ணாய் மிளிர்வான் கருதலர் மடங்கல்
முப்பா னிரட்டிமேல் மூவாண்டு தொடங்கப்
பெற்றனன் இந்நாட் பெருமங் கலவிழாக்
கண்டின் புற்றனங் கறைமிடற் றிறைவன்

அருளால் ஆக்கமும் அயர்வில் ஊக்கமும்
பெருவாழ் நாளும் பிணியிலா உடலும்
எய்தியப் பெரியோன் இரும்பே ரொக்கலும்
மனைப்பெருந் தேவியும் மக்களுஞ் சூழ்தர
எண்ணில்பல் லாண்டுகள் இலங்குக நிலத்தே. 3

சேது சம்ஸ்தான மகா வித்துவான், பாஷாகவி சேகரர்

## *ரா. இராகவையங்கார்*

(12—10—1934)

**அ**றிவ ளிக்குநல் லகவி ருப்பினால்
அளவின் வீறுபன் னிதிய ளித்தனை
நெறிய ளித்தநின் கொடைமை கண்டுமா
நிருபர் தாள்தொழும் பெரிய ஜார்ஜுமன்
தறை யளித்தவுன் புகழ்நி லைக்கமெய்த்
தான வீரனென் றரச ளித்தனன்
இறைய ளித்ததுன் மரபு யர்த்துநீ
யிவண ளித்ததெந் தமிழு யர்த்துமே. 1

**கா**னாடு வண்செட்டி நாடாதல் கண்டாள்
கற்றார்க ளன்வேட்க ளம்மாதல் கண்டாள்
மானாடு வெண்டேர்க் கழிப்பாலை யண்ணா
மலைப்பொன்ன கர்க்கல்வி வைப்பாதல் கண்டாள்
தேனாடு சிற்றம்ப லம்பண்டு மிக்குச்
சீர்மேவு ஞானஞ் செழித்தாடல் கண்டாள்
தானாடி வந்தாள்பு கழ்ச்செல்வி யண்ணா
மலைக்கொண்டல் கையைத் தகப்பற்றி னாளே. 2

**பொ**ய்யா விளக்கம் பொருளென்பர் அப்பொருண்மை
மெய்யாதல் கண்டேனின் வெல்பொருட்கண்—நையா
அகவிருள்கால் சீத்தற்கே யண்ணா மலைநீ
தகவருள்செய் நற்கொடையாற் சார்ந்து. 3

**கோ**டி பலபொன் குவிப்பா ருலகுய்தல்
நாடி யளிப்பாரை நாங்காணோந்—தேடுநிதி
கற்றார் மதிக்கக் கலைக்கருளு நின்போல்வார்
மற்றார்சொ லண்ணா மலை. 4

**எ**ல்லார்க்கு மின்பா யெழில்ஞான சோதிபுவிப்
பொல்லா விருள்சீத்துப் போதரலாற்—பல்கோடி
ஊழிவரைத் தூய உதயகிரி யொப்பாக
வாழியரோ அண்ணா மலை. 5

(12—10—1935)

பண்வ ளர்க்கவும் பௌதி கக்கலை
பலவ ளர்க்கவும் பரவு நற்றமிழ்க்
கண்வ ளர்க்கவும் வடமொ ழிப்பெருங்
கலைவ ளர்க்கவுந் தத்து வம்பொருள்
எண்வ ளர்க்கவும் சரித மோதியல்
பிவண்வ ளர்க்கவும் இனிது பொன்பெய்து
தண்வ ளர்க்கும்அண் ணாமலைப்புயல்
சகமி சைப்புகழ் தழைய வாழியே. 6

உவர்க்கட லெழாதுயர் கலைக்கட லொலிக்க
உளத்தெணியண் ணாமலை நகர்க்கழகம் வைத்த
தவக்கட லண்ணாமலை சனித்ததிரு மூலம்
தரைப்பலறி வின்பயன் றழைக்கவரு மூலம்
சிவப்பரம னோடினி தரிக்கடவுள் பூசை
செழித்தபுலி யூரிடை நிலைக்கவளர் நேரம்
எவர்க்குநல மேவிய தமிழ்ப்புவியின் மேன்மை
யிசைப்பெருமை யோடுல கினிற்பொலியு நாளே. 7

பொன்னாற் பொறையரை மீக்கொண் டிருங்கலை போற்றுதலாற்
றென்னா டளித்த செழியரின் வீறிச் செழித்தவறந்
தன்னால் வளவரை வென்றுவ ராடைத் தரைமடந்தைக்
கிந்நாளிற் றன்புகழ் போர்த்தான் அண்ணாமலை யேந்தனன்றே. 8

(30—9—1936)

நலம்வ ளர்ந்தது பல்க லைத்துறை நயம்வ ளர்ந்தது நற்றமிழ்
நிலம்வ ளர்ந்தது தில்லை யென்றுயர் தலம்வ ளர்ந்தது நெடிதுதன்
குலம்வ ளர்ந்தது மகப திப்பெயர் குணம்வ ளர்ந்தது பலர்கணும்
புலம்வ ளர்ந்ததண் ணாம லைப்புயல் புகழ்வ ளர்ந்தது பொழியவே. 9

சேவேறி நின்ற பெருமா னருளிற் றிருந்துகொடைக்
காவேறி நின்றகை யான்பல் கலைக்கழ கங்கண்டவன்
பாவேறி நின்ற பெயரான் பெரிய பருணிதர்செந்
நாவேறி நின்ற புகழனண் ணாமலை நாயகனே. 10

நத்தி வளர்க்கும் பொருட்கு மரசிற்கு நன்குடிக்குஞ்
சித்தி வளர்க்குமெய் வாழ்விற்குங் கொள்கைக்குந் தெய்வநண்ணி
முத்தி வளர்க்கும் பெருமைக்கு மீதுற்ற மூலமெனப்
புத்தி வளர்க்கக் கொடுத்தானண் ணாமலை பொன்மலையே. 11

சென்னைக் கலைக்கழகச் சீரியரண் ணாமலைக்கு
நன்னர்த் திறமுணர்ந்து நல்லறிஞ—னென்ன
விருதளித்தார் பாரோர் வியந்தளித்தார் கீர்த்தி
அரசளித்தான் வேந்தர்க் கரசு. 12

ஈதருமை யென்றுபுர வலர்வியந் தேத்தினர்
இனியதமிழ் மாதுயர்ந்தாள்
போதம்வளர் நல்லறிஞர் தம்வறுமை போயினர்
புகழ்மக ளிவன்மணந்தாள்
மேதைவளர் தந்ததொளிர் வேந்தர்பெரு மானுதவ
மிகுதன்வழி யரசாயதால்
காதலொடு பல்கலைக் கழகமண் ணாமலைக்
கற்பக மளித்தபொழுதே. 13

தூயகலை வாணி நாவினட மாடத்
தோமில்வழி யாருஞ் சூழமொழி வோனை
மேயகுண சீநி வாசமதி மானை
மேதினியெ லாமும் வீறுபுக ழோனை
நேயம்வளர் ஞான கூடமிதை யாள
நீநிறுவ லானே யாமுன்விர கோர்வம்
பாயவிசை நீடண் ணாமலைவள் ளாலிப்
பார்மிசை யெநாளும் வாழ்கவினி தாயே. 14

(30—9—1937)

தில்லைவன மீதுதிகழ் கல்விநிலை யாகியெழில்
செய்வதெதிர் காணு மென்பார்
தேறுபல நூனிலயம் வீறுவிரு தெய்துநிலை
தெய்வநிலை போலு மென்பார்
நல்லநெறி யிற்கலை பயிற்றுகழ கம்மிதுநம்
நாடுபுரி மேன்மை யென்பார்
நன்குரவர் மாணவியர் மாணவர்கு மூஉ மனைகள்
நண்ணுமுறை பாரு மென்பார்
மல்லனிதி மேவினிது போலவொரு தன்மமிவண்
வாய்வதரி தாகு மென்பார்
மன்னிசை வளர்க்கவுரை செய்யவிளை யாடவென
வைத்தவகை தேரு மென்பார்
எல்லையி லனைத்துமினி தாள்கென வொருத்தமனை
யீந்ததழ காகு மென்பார்
இத்தனை சிறப்புநல் அண்ணாமலை யிழைத்தபய
னென்றுபுகழ் செய்வர் தினமே, 15

வாழ்க நாவலந் தீவநல் வாழ்வினே
வாழ்க செந்தமிழ் நாடு வளம்பெற
வாழ்க பல்கலை மன்றம் வகுத்தவன்
வாழ்க மன்னனண் ணுமலை வள்ளலே. 16

(30—9—1938)

நிதியோங்கத் தனதுகுலம் நிருபர்மர
பெனவோங்க நீள்தன் பேரார்
பதியோங்கப் பல்கலையம் பலமோங்கப்
பருணிதர்பண் டிதராற் பல்லோர்
மதியோங்கத் தான்வருபைந் தமிழ்நாடு
வாழ்வோங்க வண்பொன் பெய்து
துதியோங்க வோங்குவனண் ணுமலைமன்
ஒருவனலாற் சொலயா ருண்டே. 17

இசைமுழங்குவ தொருபுறந்தமிழ் இயல்முழங்குவ
தொருபுறம்
இனிதியைந்துநல் வடமொழிக்கடல் இவண்முழங்குவ
தொருபுறம்
வசையறும்மலை யாளமும்வடு கும்முழங்குவ
தொருபுறம்
வளர்குடக்குள வாங்கிலக்கவி வளமுழங்குவ
தொருபுறம்
நசையுறும்பொரு ணூல்மதங்கணி தஞ்சரித்திர
ஞானவிஞ்
ஞானமோடதி நூல்விலங்கியல் நலமுழங்குமொவ்
வோர்புறம்
மிசைவரும்மினி யோர்புகும் விளையாடலோர்புறம்
உழவுதேர்
விளைவுமோர்புறம் இவையண்ணுமலை வேந்துநன்கொடை
விளைவரோ. 18

தென்றிசைத்திகழ் தில்லை யிற்கலை
மன்று நன்கியை வித்ததோ
செந்த மிழ்ப்பெருநிலையி னைத்தெளி
தந்து செவ்வ னமைத்ததோ
என்று நின்பெயர் நிற்ப தற்கிட
னீதெ னத்தெரி வந்ததோ
இத்தெ னுடு தழைப்ப தற்கிது
வேது வென்றுணர் தந்ததோ
துன்று பல்லறி வாள ரைத்துணீ
தந்து நீதொகை யிட்டதோ

சூழ்ப னூல்நிலை யம்வி சும்பு
தொடக்க லாலயம் நட்டதோ
ஒன்று மிம்முழு தும்பு ரக்கவொண்
சீநி வாசனை யுய்த்ததோ
ஒளிர்பு கழ்க்குரி தெதுகொ லோசொல்வ
முயரண் ணாமலை வள்ளலே. 19

(30—9—1939)

மன்னர் பின்னவ ராய தன்குல
வாழ்நர் மன்னவ ராயதும்
வள்ளல் வேந்திவ னென்று தன்பெயர்
மண்ட லஞ்சொல வந்ததும்
தென்னர் வண்டமிழ் பண்டை நன்னிலை
செய்து நன்குயர் கின்றதும்
தேய மேயபல் கலையெ லாமொரு
சேர வோதவி யைந்ததும்
வன்னி யின்வலி தாம்வ றும்பிணி
மாறி நாவலர் வாழ்வதும்
மாட மாளிகை கூட கோபுர
மாக வேட்கள நீள்வதும்
கன்ன னென்றெவ ரும்பு கழ்ந்தஅண்
ணாம லைத்திகழ் கார்முகில்
காசி னிப்பெய்த பொன்ம ழைப்பயன்
காணு மென்றிசை செய்வரே. 20

ஈவா ரிடைநிற்கு நன்புக ழென்பரவ் வேற்றமெலாம்
பாவா யறிந்த அருமைப் பயனின்றும் பார்த்தனமால்
காவா யுதித்தொரு முப்பா னிலக்கம்பொன் கல்விக்கெனக்
கோவாயண் ணாமலை வள்ளற்பி ரான்செய் கொடைத்திறத்தே. 21

வாயார வுண்டவர் வாழ்த்துவ ரென்பரிவ் வாய்மைநங்கோன்
தாயாய் மகிழ்ந்தஅண் ணாமலைப் பல்கலைத் தண்கழகத்
தாய்வார்பன் மாணவர் நல்லா சிரியரிவ் வாயிரவர்
தூயார்தம் வாயிற் றினங்கண் டுவகை துளும்புதுமே. 22

கல்விக்கு மூலம் கமழ்வெண் கமலத்துச்
செல்விக் குவகை செயுமூலம்—வெல்விக்குந்
தென்னாடு வாழ்மூலம் தேர்வேந்தண் ணாமலையாம்
நன்னா யகன்மூல நாள். 23

(12—10—1940)

தன்பெயரால் நகர்கண்டு தன்பெயர்ப்பல்
கலைக்கழகந் தழைக்கச் செய்தோன்
மன்பெயரான் வழிமுறையை வாழ்வித்து
மதிவாணர் வழுத்த வந்தான்
இன்பெயரண் ணமலைவேந் தென்பரிவன்
வருமூலம் எழிற்றென் னாடு
நன்பெயர்கொண் டுயர்மூலம் நன்மதிக்கு
மூலமென நவில்வம் யாமே. 24

நிதியாக்கி வைத்துத்தம் முள்ளே மகிழு நிருபர் முன்னே
மதியாக்கி வைத்துயிர் வாழ்கென்று பல்கலை மன்றம் வைத்துப்
பதியாக்கி யெல்லா வளனு நிறைத்துப் பரூஉக் கொடையாற்
றுதியாக்கி வாழ்பவன் அண்ணு மலைவள்ளற் றூமணியே. 25

மறங்காக்கும் வேந்தர் பலருள்ள ராகவிவ் வையகத்தே
அறங்காக்க வென்றிவண் வந்தபி ரான்பொரு ளார்தரினித்
திறங்காக்க வென்று பெருஞ்செல்வர்க் கேநெறி செய்துபுகழ்
இறங்காக் கலைமன்றம் வைத்தானண் ணமலை யேந்தனன்றே. 26

பார்செய்த வூரைப் பிறிதோர் தெருவைப் பலர்பிறர்தம்
பேர்செய் துவப்பர் இவர்முன் பெரும்பொருள் பெய்துபெரி
தூர்செய்து பல்கலை மன்றஞ்செய் தேபெய ரோங்கவைத்தான்
கார்செய்த செங்கை யண்ணமலை வேந்தனெங் கண்மணியே. 27

தன்செய னிறைந்துதுயில் தந்ததொரு தெய்வம்
மன்செயன் மகிழ்ந்துநட மன்னுமொரு தெய்வம்
பொன்செயல் விளங்குபுலி யூரினுல கோத
நன்செயல் அண்ணமலை நயந்தகொடை கண்டே. 28

ஒண்முகன் அண்ணமலை யுதித்ததின மன்றில்
சண்முக னமைச்சர்தலை வன்றலைமை சார்ந்து
விண்முகனுங் கீழுநல மேயதிசை நான்கும்
கண்முகனு ளார்சொலிவன் கைப்பெருமை கண்டான். 29

(28—9—1941)

கார்வ ளர்ந்ததுன் கையி லேபல கலைவ ளர்ந்ததுன் கொடையிலே
பார்வ ளர்ந்ததுன் அறனி லேநல பாவ ளர்ந்ததுன் பெயரிலே
சீர்வ ளர்ந்ததுன் செயலி லேமலர்த் திருவ ளர்ந்ததுன் மனையிலே
ஊர்வ ளர்ந்ததுன் அரசி லேபெரி துயரண் ணமலை மகிபனே. 30

காடுபெரு நாடெனவு மாகுமொரு பாலை
காணினிய மாநகர மாகுமொரு பாழும்
மாடமொடு கூடநிறை மாளிகைகள் மேவும்
மற்றவர் வதிந்தபுவி கற்றவர் நிறைக்கும்
ஊடுபுக லில்லதொளி கூடுநெறி யாகும்
ஊணரிய தாயநிலன் மாணவினி தீயும்
தேடுபல ஆதுரர்கள் நீடுசெல்வ ராவர்
சீதரனண் ணாமலையி னாதரவி னின்றே. 31

செந்தமிழ் முழங்கும்வட சொற்கலை வழங்கும்
தேடுகுட பாலறிவு கூடுமொரு பாலே
முந்தமிழ்த மாயவிசை வந்துசெவி கூடும்
முற்றுகுர வோருதவு கற்றமொழி நீடும்
எந்தமழ வுங்குலவு தொந்தமகிழ் செய்யும்
எங்குமினி தேவிழிகள் தங்கிநனி காணும்
இந்தவழ காயகலை மன்றுநிலை செய்தான்
எங்கள்தவ மாகியஅண் ணாமலையென் பாரே. 32

பெண்டி ருக்கென இவண மைத்துள
பெரிய நல்லவை யெத்தனை
பிரச வத்தனி நிலைமு னாகிய
பிணிம ருத்தில்க ளெத்தனை
எண்டி சைக்குள மாண வர்க்கென
இவண ளித்தன வெத்தனை
இவண்வி ருந்தினி துண்டு நெஞ்சம்
இனிக்கு மன்பர்க ளெத்தனை
திண்டி றற்கட வுட்கெ னத்திகழ்
செய்த நற்பணி யெத்தனை
தில்லை யிற்பல் கலைப்பெ ருங்களஞ்
செய்து தந்தன வெத்தனை
அண்டி னர்க்கென இவண ளித்துள
அம்பொ னன்மனை யெத்தனை
அணியண் ணாமலை மன்ன வன்செயும்
அறம ளக்கவு மாகுமோ. 33

கன்னாவ தாரனண் ணாமலை வேந்தனிக் காசினிக்கே
நன்னா வலர்பல ராகக் கலைமன்றம் நாட்டுவித்தான்
அன்னான் பெரும்புக ழெங்கும் பரந்த தவன்பெயர்தான்
எந்நா விலுந்நிலை நின்றது காண்வண்மை யேத்தெடுத்தே, 34

**பொ**ற்குடம் நிறைந்தபுனல் பூசுரர்கள் பெய்தார்
பூமழைகள் ஆசியொடு நாவலர் பொழிந்தார்
நற்குடி நிறைந்தவணி கீசர்மகிழ் கூர்ந்தார்
நானிலவர் யாருமன மாரவினி தார்ந்தார்
தெற்குடன் வடக்கண்வரு செல்வர்புகழ் தந்தார்
தேனமிழ்த மாகவிசை வாணரிசை செய்தார்
விற்குடையண் ணுமலை வியந்தகொடை வேந்தன்
வீறுமறு பான்வருட மேறுவிழ வின்னே. 35

**து**ன்னும் பெரும்பொரு ளீட்டிப் பெருங்கலைச் சூழல்வைத்து
மன்னும் பெரும்புக ழீட்டின னண்ணு மலையரசன்
முன்னந் திகழறு பானுண்டு கண்ட முறைமையைப்போல்
பின்னுந் திகழறு பானுண்டு நன்று பெருகுவனே. 36

---

## பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்

(30—9—1938)

நிலமாரும் புகழ்வளவர் நகரத்தார் நிகழ்தளவர்
கலமாரும் பெருநிதியர் கணக்கிலறம் புரிமதியர்
தலமாரும் பலபணிகள் தமக்கெனவாழ் தனவணிகர்
குலமாரும் தவம்எம்மாற் கூறலாந் தகைமையதோ. 1

அக்குலமாங் கடலிடையே ஆதித்தன் எனத்தோன்றி
மிக்குயரும் அறிவாண்மை விளங்கீகை முதற்பலவும்
தொக்கதொரு வடிவாகித் துகளறுபல் கலைமாடம்
திக்குலவும் புகழாகச் செய்தனன் அண்ணாமலையே. 2

அன்னவன்செய் பேரறத்தின் அருமையர சர்க்கரசன்
நன்னருளம் புகுந்துசெட்டி நாட்டரசன் ஆக்கியசீர்
என்னவரும் எடுத்துரைப்பர் ஏந்துபெயர்க் கலைக்கழகந்
தன்னுடன் அண்ணாமலைமன் தாரணியில் வாழியரோ. 3

(30—9—1939)

மணியாரும் பட்டினத்து வணிகர்குலம் மாண்புறவே
நணியாரும் களிதுளும்ப நலம்பலவும் நிலம்பரவக்
கணியாத செல்வமுடன் கலைவளர வளர்ந்தனன்சீர்
அணியாருந் திணிதோள் அண்ணாமலையாம் ஆண்டகையே. 4

பண்ணரிய நுண்ணறிவும் பழுதிலா வினைத்தேர்வும்
முன்னியவை முடித்திடலும் மூதுலகி லெவரெவர்க்கும்
நன்னயஞ்செய் கடப்பாடும் நன்மனமும் இன்னுரையும்
துன்னியொரு வடிவாகும் தோன்றல்அண்ணா மலைவேளே. 5

அக்குரிசில் செய்திடுசீர் அறங்கள்உலப் பிலஅவற்றுள்
மிக்குயர்அண் ணாமலைப்பல் கலைக்கழகம் விளங்கிடுமால்
அக்கழகம் அத்தியக்க னாஞ்சீநி வாசனெனும்
திக்குலவு புகழாளன் சீருடனே வாழியவே. 6

வித்தகநல் லறிவாண்மைத் திறம்படைத்த வீறுடைய
முத்தையனாந் தோன்றலொடும் கிளைகளொடு மூதுலகில்
எத்தகைய சீர்மையுமுற் றேந்தல் அண்ணா மலைவேந்தன்
நித்தனரு ளால்மன்னி நீடூழி வாழியவே. 7

## பேராசிரியர், வித்துவான், தெ.பொ.மீனுட்சிசுந்தரனுர், எம். ஏ; பி. எல்., எம். ஓ. எல்.

---

(30—9—1944)

ஓதுக்குப் புறத்திருந்த ஒண்டமிழாந் தாய்க்கே
புதுக்கலைக்கோ யிற்கண்டு போற்றி—முதுக்குறைவின்
அள்ளூறிப் பாட அருஞ்செயல்கள் செய்கின்ருன்
உள்ளூறும் அன்பால் உவந்து. 1

அண்ணு மலையரசன் ஆண்டுபல வாழியவன்
மண்ணுடு சீரெல்லாம் வாழியரோ—விண்ணுடும்
ஏத்தெடுக்கும் ஓர்மனத்தின் எண்ணமெலாம் தட்டணைத்தும்
நீத்தொடுங்க வாழ்கநிலை நின்று. 2

(30—9—1945)

காவசைத்த கொடைக்கலைஞன் கருணைஅண்ணு
மலையரசன் கருத்தாய்க் கண்ணுய்
நாவசைத்தும் தலையசைத்தும் கையசைத்தும்
தான்வளர்க்கும் நானி லத்தில்
பாவசைத்த மனமலரக் கலைக்கழகத்
தமிழ்ச்சுடரைப் படைத்திட் டானுல்
பூவசைத்த சொன்மாலைப் புகழிசைத்த
சிறப்புடையான் பொலிந்து வாழி. 3

---

# சர்க்கரை இராமசாமிப் புலவர்.

(10—2—1933)

பூமேவு கற்பகப் பொங்கருளம் வெள்கப்
புகுந்தமரர் தாகநீக்கும்
புதுமைபெறு தெங்கிளம் பொழில்புடை யுடுத்தமரர்
போற்றுமம ராவதியெனப்
புலவர்புக ழளகையென நிலவுநவ நிதியெலாம்
பொலிசெட்டி நாடுமுன்செய்
புண்ணியமெ லாந்திரண் டொருவடிவ மாய்வந்த
புரவலன் சீரகத்தார்
புனைபுயா சலன்மஞ்ஞை மலைமேவு குமரனடி
புந்தியிற் பதியவைத்தோன்
புராணவிதி காசவே தாந்தசித் தாந்தப்
பொருட்டிற னுணர்ந்தெவர்க்கும்
பொன்மாரி பெய்யுமிரு கையினன் தயைவாய்மை
பொறையாதி சீலமுடையான்
புண்டரிக மாதுகுடி கொண்டிலகு சுதர்தமையே
போலிலகு மரமணியுளான்

தேமேவு பதுமத்தி னந்தீன்ற தரளத்
தினைத்தனது முட்டையென்று
சிறையனந் துயில்தடஞ் சேர்ந்துள்ள தில்லையிற்
சிற்சபா நாதர்சபையைச்
செம்பொனல் வேய்ந்துமுன் செய்திருப் பணியலாற்
செங்கண்மால் சந்நிதியின்முன்
செய்யா திருந்தமண் டபமாதி கோயில்
திருப்பணியெ லாம்புரிந்தோன்
தில்லைவா ழந்தணர்க ளாதிநால் வருணத்
தினர்க்குமுப யோகமாகச்
செந்தமிழ்ப் பத்திரிகை யாதிய வெலாம்படித்
திடநகர் மகால்செய்வித்தோன்
தேவரமு தென்னவமு துதவுசத் திரமுடன்
தேவார பாடசாலை
சிற்சபா நாதற்கு நித்தியப் பாவாடை
செய்வித் தவன்கருணையால்

**பா**மேவு முலகமுள வரையில்மா னுடரெல்லாம்
பலகலையு முணரவெண்ணிப்
பயன்றருந் தமிழ்சமஸ் கிருதஞ்சங் கீதமுயர்
பதவிதரு மாங்கிலங்கற்
பணிமிகு தெலுங்குமலை யாளமா தியமொழிகள்
பகர்சர்வ கலாசாலையிற்
படியிலொப் பில்லாத படியமைத் தெளியவர்
படிப்பதற் குணவுமீந்து
பாலனத் துக்களவில் மூலதனம் வைத்திசை
பரப்புவணி கேந்திரன்சீர்
படைத்தரா ஜாங்கசபை யிற்றிலக மாயுளோன்
பாவலர்க் கெய்ப்பில்வைப்பாம்
பண்புள உதாரனு ருணிநீ ரெனத்தேவர்
பகர்தற் கிலக்காயுளோன்
பாங்குபெறு குமாரரா ஜாமேய ராதியாம்
பாலரைப் பெற்றகோமான்,

**மா**மேவு மிரவியொளி யிரவுபக லகலாத
மண்டலமெ லாம்புரக்கும்
மன்னவர்கள் பணியுமைந் தாம்ஜார்ஜெனுஞ்சக்ர
வர்த்தியுள் மகிழ்ந்தொப்பிலா
வணிகர்பெரு மானென மதித்தான ரபில்டாக்டர்
மதிமிக்க ராஜாஸர்நல்
வளமுற்ற அண்ணு மலைச்செட்டி யார்நைட்டு
மாட்சிபெறு எல். எல். டியாம்
வளர்பட்ட மீந்திடப் பெற்றவணி கேசனிம்
மகிதல மெலாமுய்ந்திட
வருசர்வ கலாசாலை தாபித்த ஞாபகமிவ்
வையகத் தோர்க்கிருக்கும்
வகைநினைந் துயர்சென்னை ராஜாங்க கல்வியை
வளர்க்குமந் திரிய வர்களை
வரித்துச் சிறப்புற விழா நடத் தினேன் நன்கு
வாழிபல ஊழிமன்னே.

(12—10—1935)

**ம**தியிற் சிறந்த எட்வர்டு மன்னர் பெருமான் திருமகவாய்
வருமைந் தாஞ்சார் ஜிறையவர்கோன் மகிழ்தந் தரச னெனும்விருது
வாழை யடிபோற் சந்ததிக்கும் வழங்கப் பெற்ற கண்ணியன்கண்
வளர்கோ விந்த ராஜருக்கு மணிக்கற் பணிகள் செய்தமைத்தோன்

கதியிற் புகுத்துந் தமிழும்வட கலையு
மிசையு மாங்கிலப்பல்
கலையும் வளர்க்கும் கழகம்வைத்துக் கலைதேர் வாணர்
களைத்தொகுத்துக்
கதிர்சூழ் ஞான சூரியன்போல் கவினுஞ்
சீநி வாசதயா
கரனை வைச்சான் ஸலராகக் கண்டு
போற்றும் பெருந்தகையோன்

பதியிற் சிறந்த சென்னைநகர் பரிபா லிக்கு மேயரெனும்
பதவி வகிக்கு முத்தையபூ பால னுதி புத்திரசம்
பத்தா லுயர்ந்தோ னடுத்துவரும் பாவல் லோர்க்குப் பாரியன்னன்
பரத கண்ட மனைத்துமிசை பரவ அறஞ்செய் பாக்கியவான்

நிதியிற் சிறந்த லண்டனுக்கு நேரே பல்லோ ருடன்சென்று
நிருபர் பெருமான் றனைக்கண்டு நேயம் பூண்ட ஜெயசீலன்
நினைத்த செயலெ லாமுடிக்கும் நியமன் அண்ணு மலைவள்ளல்
நெஞ்சத் துவகை யென்றும்விஞ்ச நீடூ ழியெலாம் வாழியவே. 2

---

## சு. பொன்னோதுவார்

(14—2—1934)

காரதிகழ நோக்குமயில் காஞடுங் காஞடு
காத்தா னென்னும்
ஏர்திகழுஞ் செட்டிநா டதற்கரசா மியல்பமையு
மேந்த லான
நார்திகழு மனத்தண்ணு மலைமன்னன் றன்பெயரால்
நாட்டி யிட்ட
பார்திகழ்பல் கலைக்கழகப் பான்மையினைப் பாற்படுத்துப்
பகர்வா ரியாரே. 1

அருந்தமிழண் ணுமலைய முனியரசிவ் வவனியிலே
யார வன்றவ்
வருந்தமிழோன் றேயாக அமைத்தனனிக் காலத்தி
லாங்கி லத்தோ
டருந்தமிழா ரியமாதிப் பல்கலையும் பல்கலையுற்
ருர்ந்தி லங்கத்
தருந்தகையண் ணுமலைமன் சீரளவிட் டெவராலுஞ்
சாற்ற லாமோ 2

இருநிதியும் பொருணிதியா மொருநிதியி னியைசோம
னிங்க னெவ்வா
றிருநிதிக்கு முரியஞ மோர்நிதிய ஞகியே
யியைவா னன்றே
பொருணிதியா மதனோடுங் கல்வியெனும் இருநிதியும்
பொருந்தப் பெற்ற
திருமிகுமண் ணுமலைவேந் தனையெவ்வா றவனைத்துத்
திகழ்வான் மன்னே 3

புகழுறுமண் ணுமலைப்பல் கலைக்கழக மெந்நாளும்
பொருந்தி வாழ்க!
தகவுறுமக் கழகத்தா சிரியருமங் கத்தினருஞ்
சார்ந்து வாழ்க
துகளறுநற் குணத்தண்ணு மலைவள்ள லாமரசன்
சுற்றத் தோடுஞ்
சகலவள மும்பெருகச் சார்ந்துமிக மகிழ்ந்திந்தச்
சகத்து வாழ்க 4

## பேராசிரியர், டாக்டர், ஏ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பி எச். டி.

---

பல தாழிசைக் கொச்சகக் கலிப்பா

(28—9—1941)

புகழாய பொருளோடு புலமைசால் நலத்தோடு
தகவுகூர் திறமெய்தித் தணிவில்சீர்த் தாளாற்றி
மகம்பல வாற்றியும் மாணறங்க ளாக்கியும்
அகனமர்ந் தளித்திட்டும் முகனமர்ந் தியம்பியும்
செகமுள்ள திசையெல்லாஞ் செட்டிநாட் டிசைசெல்ல
உகப்புடனே வாழ்தரும் உயரண்ணு மலைமன்னே

(இது தரவு)

1. முன்னொருநாட் பாரிதான் முல்லைக்குத் தேரளித்தான்
இன்னொருநாட் போலவே எந்நாளுஞ் சோறளிக்கும்
நின்வண்மை இருந்தவா தில்லைமூ வாயிரர்க்கே.

2. கரவா திரவலர்க்குக் காரியென்பான் புரவிதந்தான்
இரப்போர்கள் யாவருக்கும் எளிதிற் சோறளிக்கப்
பரம்பரையாய்ச் சத்திரங்கள் பரவுதில்லை வைத்தனையே.

3. ஆலமர் செல்வற்கே யருங்கலிங்கம் ஆயளித்தான்
மேலவாந் தில்லையில் மேவிடுங் கூத்தன்மால்
ஆயிரு பேர்க்கும்மே யறப்பணி வகுத்தனையே.

4. அருநெல்லிக் கனிதன்னை அதிகமான் கொடுத்திட்டான்
தருகலைகள் பலபயிலுங் கழகத்தே புலவருக்கும்
அருங்கலைகள் பயில்வார்க்கும் பலாயிரங்கள் தந்தனையே.

5. உள்ளிவரும் இரவலர்கட் குவந்தீந்தான் ஒருநள்ளி
உள்ளாதே யிருப்போர்க்கும் உவந்தீயும் வேளண்ணல்
தள்ளாத மாணவர்க்குத் தனியுதவி செய்குவையே.

6, பேகனென்பான் பெருங்கனுடன் பீலிக்குப் படாமளித்தான்
ஆகவத்திற் கதிகபணம் அந்நாள்போ லிந்நாளும்
ஆகுலமில் செட்டிநாட் டாரரசே யளித்தனையே.

7. ஆடுவார் மறந்தாரே பாடுதற்கே ஒரியினைப்
பாடல்சொல் பள்ளியினிற் பற்பலரை மன்றுகளில்
ஆடுகொள் நின்பெயர்தான் அடிக்கடியே சொல்லுவரே,

**(இவை ஏழுந் தாழிசை)**

என வாங்கு (இது தனிச் சொல்)

நின்திறம் முற்றும் பாடுநர்க் கடங்கா
அன்னையாந் தமிழை யளிக்கும் வள்ளலே
மன்னரும் விழைசீர் அண்ணு மலையே
துன்னருஞ் சீர்த்தித் துணைவி மக்களொடு
பன்னெடுங் காலம் பாரினுள் வாழ்கவே. 1

**(இது சுரிதகம்)**

(30—9—1943)

சொல்லுள்ளே பைந்தமிழ்ச் சொல்போற் சிறந்தொரு
சொல்லில்லை யென்னுஞ்சொல்
அல்லவே தகவென அண்மையிற் கூறினோர்
அனைவருமே நாணமுறப்
பல்கலையின் கழகத்துப் பற்பல வருணங்கள்
பதங்களே கீர்த்தனைகள்
பல்வேறு கீதங்கள் பைந்தமிழ்ப் படுத்தினோற்
பல்லாண்டு கூறுதுமே. 2

இருபதாம் நூற்றுண்டில் இனியபல ஆராய்ச்சி
இன்றமிழில் வெளியாக்கக்
கருதுவதே தக்கதெனக் கூர்மாவின் நற்பெயரால்
கருவூலங் கண்டபுகழ்த்
தருமமிகு சிந்தைசெயல் தனவணிகர் குடிக்கணியாய்த்
தலம்பலவே சென்றுற்ற
திருவுடையான் வேள்அண்ணு மலைமன்னன் திறுவினோற்
பல்லாண்டு கூறுதுமே. 3

கலைபயிலும் பல்லிடங்கள் கண்கவரும் வனப்புடைய
கடிகமழும் இளங்காக்கள்
விலைமதிக்க ஒண்ணுத நூனிலையம் அதன்மருங்கே
வீரர்விளை யாடிடங்கள்
அலைபோன்ற ஒலியெழுப்பி ஆடுைடுபெண் மாணவர்வாழ்
அழகான தனியிடங்கள்
தொலைவந்து சேர்தபால் மருத்திடங்கள் ஆக்கினோற்
பல்லாண்டு கூறுதுமே. 4

(26—1—1947)

வாழியண்ணு மலைமன்னன் வாழியிந்தக் கலைக்கழகம்
வாழியண்ணு மலைமன்னன் வாழியிந்தத் துணைவேந்தர்
வாழியவன் மக்கள்சுற்றம் வாழியிந்த இளவேந்தர்
வாழியண்ணு மலைமன்னன் வாழியவன் அறச்செயல்கள். 5

கலையெல்லாம் ஓதியதால் கசடற்ற அந்தணனன்
விலையெல்லாம் பகருவதால் வியத்தக்க வணிகமேலோன்
கலனெல்லாம் படைத்துளதால் கருதரிய அரசனனேன்
இலனென்ன உரையாதே நிலன்மல்கு வேளாயோன். 6

**நா**ற்குலமும் ஒருகுலமாய் நயமாகக் கல்விகற்கப்
பார்க்குள்ளே பெரியதொரு பல்கலைசொல் அவையமைத்தோன்
நாற்குலத்துத் தொழிலெல்வாம் நல்லொருவன் பாற்கண்டும்
மேற்குலமும் கீழ்க்குலமும் வேறெண்ணிப் பேசலென்னே. 7

**பூ**ந்தாரான் புன்னகையான் புங்கவர்கள் போற்றுகின்ற
மேன்றலையான் நல்லறங்கள் மேவிச்செய் மேலானேன்
காந்தவர்கள் வியக்குநல்ல கலைக்கழகம் ஆக்கினேன்
ஆந்தலைவன் உயரண்ணு மலைவள்ளல் வாழியவே. 8

(30—9—1947)

**உ**வப்போ டுழைத்துத்தான் செல்வத்தை ஈட்டியபின்
தவப்பெரிய தொண்டாற்றுந் தன்மையினுற் சீர்த்திமிக்கோன்
தவஞ்செய்யான் ஆயிடினுந் தவமுதியர்த் தாழ்விக்கும்
உவமையிலாப் பல்கலைகள் கற்றிடநன் கமைத்தானே. 9

**அ**மைத்தபினும் ஆண்டுதொறும் பல்நிதியும் பாத்தளித்தே
கமையொடு நம்பிக்கை துணிவுடைய இக்கொடிக்கீழ்
நமையெல்லாங் கூட்டுவித்தே நன்மைகள் துய்ப்பிக்கும்
இமையாத அண்ணு மலைவள்ளல் வாழியவே. 10

(5—10—1950)

**அ**ன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
நன்னர்க் கோயில் நானூறு நாட்டுதல்
அன்ன யாவினும் ஆரறம் அன்றே
பன்னருங் கலைபல பயிலச் செய்தலே. 11

**செ**யலாற் சொல்லாற் செப்பரிய மனத்தால்
இயலிசை ஓம்பிய இன்றமிழ் வள்ளல்
உயலாம் வழிகள் உயர்தமிழ்க்குக் கண்டார்
அயலும் விரும்பும் அண்ணு மலைமன்னர். 12

**வா**ழியர் அண்ணு மலையரசின் வண்புகழ்
வாழியவர் பேர்பொறித்த வண்டமிழ்சேர் கழகங்கள்
வாழியவர் மக்கள் வளர்கசீர் முத்தையன்
வாழிபல ஆசிரியர் மாணவரும் வாழியவே. 13

(22—10—1954)

அண்ணுமலைமன்னர் ஆர்வமுடன் படைத்தளித்த
எண்ணுயிரமக்கள் ஏடெடுத்த கலைக்கழகம்
நண்ணும் கானூற்றில் நன்ருக வாழியவே. 14

விண்ணிருந்து காணுகின்ருர் விமலனுடன் பேசுகின்ருர்
அன்ருெருநாள் கண்டகனு அத்தனையும் மெய்யான
என்றுரைக்கும் எம்வள்ளல் எழிலுரையைக் கேளீரோ ? 15

தமிழ்த்துறையும் பிறதுறையும் தகவுடனே காத்தளிக்கும்
அமிழ்தொக்கும் சொல்லுடைய அருந்தலைவர் முத்தையா
தமிழ்நாட்டின் தனிச்செல்வம் தமிழ்போல வாழியவே. 16

## வெள்ளி விழா வாழ்த்து

(9—2—1955)

### பல தாழிசைக் கொச்சகக் கலிப்பா

வேந்தர்க் கொளிபயக்கும் வியத்தக்க நயம்வாய்ந்தோன்
மாந்தர்தாம் பரவியேத்தும் மாணிக்க மலைபோன்ருன்
பாந்தள் இரிந்தோடப் பாலையினைச் சோலைசெய்தோன்
காந்தாரம் தாரமெனக் களிபேச இசைவளர்த்தோன்
சாந்தார் அணிமார்பன் சாரும்அண்ணு மலைவள்ளல்
ஈந்ததனுல் வந்த இக்கழகம் வாழியவே.

### (இது தரவு)

1\. ஆய்ந்த கலைகளினுல் ஆன்றமைந்த முத்தையவேள்
ஈந்தே சிறந்தானுய் இன்றமிழிற் குழைப்பானுய்
வாய்ந்த நிலையெல்லாம் வளமார்ந்து வாழியவே.

2\. நாநலத்தான் நாவலர்கள் நானிலமும் புகழவைத்தான்
நூனலத்தான் நுட்பமொடு நுவலுகின்ற சொல்லாகும்
ஏநலத்தான் எழிலாரும் இராமசாமி வாழியவே.

3\. பற்பலவாம் கலைக்கழகப் பண்டிதன் பார்வியக்கும்
சிற்பங்கள் போற்பேசும் சீருடையான் ஒழுக்கங்கள்
சொற்றகோன் இராதா கிருட்டினனுர் வாழியவே.

4\. ஒருவற்குக் கல்வியெனின் அரசற்கும் வேண்டுமெனக்
கருதியே பட்டமுற்ருேன் கலைவளர்க்கும் கருத்துடையோன்
அரசேறு ஐயசாம ராசேந்திரன் வாழியவே.

5\. நமையன்றிச் சென்னைக்கும் நாதனுய்த் துலங்கியபின்
இமைப்பினிலே லண்டன்போய் இந்தியச்சீர் காத்துவந்த
அமைதிகளுக் குறையுள்ளாம் அரங்கநாத் வாழியவே,

3. ஆதுமென நினையாமல் அஞ்சாமல் அறனுரைத்தே
வாதத்தில் வந்தாரை மதிநலத்தால் வாகைகொள்ளும்
சூதில்லா நற்சோம சுந்தரனர் வாழியவே.

7. ஆளுவதிற் சிறப்புடையார் அறியாமை வேரறுப்பார்
மூளுஞ்சொற் போரினிலே முழுவெற்றி காணுகிற்பார்
ஏலுவன இயற்றிடுவர் இலக்குவனர் வாழியவே.

(இவை ஏழும் தாழிசை)

எனவாங்கு, (இது தனிச்சொல்)

சீர்சால் பெரியார்ச் சிறப்புச்செய் இந்நாள்
கார்போல் அளித்த களங்கமில் வள்ளலைச்
சேர்ந்தே உதவிய சென்னை அரசினை
ஊரார் கூடி உவந்து வாழ்த்துகவே.

(இது ஆசிரியச் சுரிதகம்) 17

## பேராசிரியர், பண்டித வித்துவான், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

(28—9—1941)

அண்ணா மலைவேந் தருபதாம் யாண்டுவிழாக்
கண்ணாரக் கண்டுநனி காதலித்து—விண்ணோர்கள்
கண்ணிமையா ராயினெவர் கண்டறிந் தம்மாண்பை
எண்ணி யுரைப்பார் இவண். 1

செல்வ வணிகன் திகழ்செட்டி நாட்டரசன்
கல்வி மிகுபல் கலைக்கழகம்—எல்லாரும்
போற்ற நிறுவினோன் பொன்மனைவி மக்களொடும்
ஏற்றமிக வாழ்கவினி தே. 2

தில்லைச்சிற் றம்பலவன் சீரருட் செல்வத்தால்
எல்லையில் சீர்த்தி எழிலீகை—கல்வியுரம்
மன்னிவளர் அண்ணா மலைவள்ளல் வாழ்கவுளத்
துன்னியன வுன்னியவா றுற்று. 3

(6—2—1943)

பார்மேல் நிகரிலை யெனப்பலர் பகரச்
சீர்சால் செல்வச் செட்டிநா டதனிற்
கல்வியுஞ் செல்வமுங் கற்றவர்ப் பேணலும்
நல்வினைப் பயனும் பல்வகைக் கொடையும்
நுண்ணிய அறிவும் எண்ணிய செயலை
எண்ணியாங் கியற்றுந் திண்ணிய இயலும்
நண்ணிய வணிகன் அண்ணா மலையெனும்
புண்ணியன் பெருமை புகலற் கெளிதோ
தமிழிசை வளர்ச்சி கருதித் தகைசால்
தமிழ்நா டெங்கணு மமிழ்தெனச் சொற்பொழி
வாற்றியும் பெருநிதி யளித்தும் பழம்பாப்
போற்றியும் புதியன புனையச் செய்தும்
எண்ணரு முயற்சிமேற் கொண்டிடுந் திண்மையே
மண்ணுல கினிலினி மாறாப் புகழ்தரும்
அண்ணா மலைப்பல் கலைக்கழக மவ்வேள்
கண்போற் சிறந்து கலைபல மல்க
ஓங்கிடு மிசைக்குன் றென்ன வுளதால்
மறுவறு சீர்த்தியிம் மன்னவற் கின்புடன்

அறுபத் திரண்டாம் அகவை பிறந்த
தென்ன நிகழும் விழாக்கண் டிருங்களி
துன்னு கின்றதால் தொல்லிறை யருளால்
இன்னும் பல்யாண் டெல்லாம் பெற்ற
நன்னர் வாழியிந் நானிலத் தானே. 4

(30—9—1943)

இசைத்தமிழுக் குயிரளித்துத் திசைபரப்பி
யிசைவளர்த்தே யெங்கும் வன்பாம்
வசைதுடைக்கும் வள்ளல்அண்ணு மலேவேந்தே
நினக்கொப்பா வாரு முண்டோ
அசைவிலுளக் கிளர்வுடை நிற் காண்டறுபத்
திரண்டுநிறை வாமென் றுள்ள
மிசையுவகை மிகுகின்றேன் மனைமக்கள்
சுற்றமுடன் மேன்மேல் வாழி. 5

உண்ணெகிழுங் கருணையினு யுயர்வணிகர்
குலத்துதித்தா யுன்பேர் தன்னுல்
வண்ணமிகு கலேபலவும் வாழ்வுபெறு
கழகமொடூர் வாய்ப்பத் தந்தே
எண்ணரிய புகழினுக்கோ ரெல்லேயென
இலங்குகின்ரு யிறைமை சான்ற
அண்ணலரன் திருவருளா லாண்டுபல
வாழ்கநல மின்ப மார்ந்தே. 6

வாழியண் ணுமலேவேள் வாழியவன்
மரபுமிகு வண்மை பெற்றே
வாழிசீர் முத்தையன் வாழிபல்
கலேக்கழகம் வளர்வுற் றேங்கி
வாழியத னின்றலேமை தாங்கும்இரத்
தினசாமி வளஞ்சேர் கல்வி
ஆழியனே யானென்றும் வாழிநலத்
தமிழ் மூன்று மழிவி லாதே. 7

(30—9—1944)

முத்தையவேள் தவப்புதல்வன் மொழிவளமும்
பொருள்வளமும் முதன்மை யாக
இத்தலத்திற் பெற்றுயர்ந்தான் எல்லேயிலா
நுண்ணறிவும் இவன்பாற் கண்டாம்

எத்திசையும் புகழ்மணக்க எழிற்செட்டி
நாட்டின்கண் இலங்கும் எங்கள்
உத்தமன்அண் ணுமலைமன் ஊழிபல
வாழ்கஅறம் ஓங்க மாதோ. 8

தமிழ்வளர்பல் கலைக்கழகந் தழைத்தோங்கச்
செய்தபெருந் தகைமை யொன்றே
தமிசையே தமிழ்நாட்டிற் குரியதெனும்
உண்மைதனைத் தான்முற் கண்டே
அமிழ்தமெனத் தமிழ்ப்பாட்டை அனைவருமேற்
கொளச்செய்த தருந்தொண் டாமால்
இமிழ்கடல்சூழ் இவ்வுலகில் இவ்வள்ளற்
கிணையாவா ரெவரு முண்டோ. 9

மக்களுளப் பண்பெல்லா மதித்துணர்வோன்
தனவணிக மரபில் வந்தோன்
மிக்கதில்லை யம்பலவன் திருவடியை
மேற்கொண்ட மேலோன் என்றும்
தக்கவின்ன வெனவறிந்து தவருமல்
நிறைவேற்றுஞ் சால்பு வாய்ந்தோன்
மக்களொடும் மனைவியொடும் ஒக்கலொடும்
வாழ்கபெரு மகிழ்வு பெற்றே. 10

திருமகளின் அருளுேக்கஞ் செழித்தபெருங்
கொடையாளன் செட்டி நாட்டில்
அருள்வடிவாய் அமர்அண்ணு மலையென்னும்
அரசர்பிரான் அறிவின் எல்லைக்கு
ஒருவுருவென் றுலகேத்தும் உயர்வுடையான்
பலகலைசேர் கழக மொன்றைப்
பெருமைமிகு தன்பெயரால் நிறுவியென்றும்
பிறர்க்கில்லாப் பேறு பெற்றான். 11

எண்ணுமெங்கள் குலமணியாம் இசைத்தமிழை
வளர்த்தெங்கும் இனிது காக்கும்
அண்ணலிவன் பிறந்ததிரு நாள்விழாக்
கொண்டாட்டத் தழகு கண்டு
கண்குளிர்ந்தேன் உளங்கனிந்தேன் பல்லாண்டுஇக்
கலைவள்ளல் களிப்பு மிக்கு
விண்ணவர்கோன் போல்வாழ்க எனவிறைவன்
திருவடிக்கண் வேண்டு வேனே. 12

(26—1—1947)

அறிவாற்றல் பெறுமொருவன் பிறந்தகுடி
முழுதுமுயர் வடையு மென்னும்
செறிவுடைய பெருவாய்மைக் கிலக்காக
வணிகர்குழாம் செழிக்கத் தோன்றி
உறுதிபெறு திருவாலுங் கொடையாலும்
புகழாலும் ஒருவ னாகி
நிறைவுறுமெம் குலமணியாம் உயரண்ணா
மலையரசன் நீடு வாழ்க. 13

எத்தனையோ பெருஞ்செல்வர் இருந்துமவ
ராலியற்றற் கியலா தான
வித்தகமாம் பலகலைகள் மேன்மேலும்
வளர்கழகம் விரும்பி யாக்கிக்
கைத்தொழிற்சா லையுநிறுவித் தமிழிசையிற்
கருத்தூன்றிக் காக்கும் எங்கள்
உத்தமனும் உயரண்ணா மலைவள்ளல்
நீடூழி உலகில் வாழி. 14

(30—9—1947)

ஊருணிநீர் நிறைந்தாற்போல் ஊர்நடுநன்
மரம்பழுத்தே யுதவு மாபோல்
சீர்மைபெறுந் திருவெய்திச் செம்மைநெறி
யறங்கள்பல செழிக்கச் செய்வோன்
பாரறியப் பலகலைகள் வளர்கழகம்
நிறுவியதைப் பாது காக்கும்
ஏர்பெறும்எங் குலக்கோமான் செந்தமிழின்
இசைவளர்க்கும் எழிலி போல்வான். 15

அறிவாற்றல் ஆய்ந்துசெயும் வினைத்திட்பம்
எண்ணியதொன் றரிய தேனும்
நெறிபிறழா ததுபெறுதல் நேரலரும்
பாராட்டும் நிறைமற் றெல்லாம்
பெறும்உலகப் பெரியாருள் ஒருவனென
நிலைநின்ற பெருமை வாய்ந்தோன்
செறிவுடைய பெருந்திறலோன் எங்கள்அண்ணா
மலையரசன் சிறந்து வாழ்க. 16

அண்ணா மலையரசன் ஆறுபத்தே ழாண்டுவிழாக்
கண்ணாரக் கண்டு களிகூர்ந்தேம்—நண்ணுமிடம்

எங்கும் புகழ்மணமே எல்லோரும் வாழ்த்துரைப்பர்
மங்கலநா ளென்று மகிழ்ந்து. 17

(30—9—1948)

எத்தனையோ பெருஞ்செல்வர் இருந்தார்மற் றிருக்கின்றார்
இவர்க ளெல்லாம்
சித்தமிசை நினைப்பதற்கும் அரியதொரு பேரறமாச்
சிகரத் தின்மேல்
வைத்தசுடர் விளக்கெனவே உலகறியப் பலகலைகள்
வளருங் கோயில்
இத்தரையில் நிறுவியகோ மான்அண்ணா மலைவள்ளற்
கிணைவே றுண்டோ. 18

எந்நாட்டு மக்களுந்தந் தாய்மொழியில் இசைகற்பர்
இயற்கை யஃதே
நந்நாட்டு மக்களதில் வேறுபடு நிலையோர்ந்து
ஞால மெல்லாம்
முன்னாட்டுந் தமிழிசையை முரணின்றி வளர்த்துதவி
முழுதுஞ் செய்தே
இந்நாட்டில் நிலைநிறுத்த எங்கள்அண்ணா மலைசீர்த்தி
என்றும் வாழ்க. 19

திருக்கோயில் முதலாக மருத்துவசா லைகளீருச்
செய்த வெல்லாம்
விரித்தோதில் அளவுபடா விறல்அண்ணா மலைவேந்தன்
விளைத்த நன்மை
கருத்திருத்திச் செயுங்கைம்மா றிலமெனினும் நன்றியுணர்
கடமை யேமென்
றுரைத்திடற்கோ ரறிகுறியா ஓங்குசிலை பலநாட்டல்
உவப்ப தாமே. 20

மன்னன்அண்ணா மலைவள்ளல் தவப்புதல்வன் பலர்புகழு
மாண்பு மிக்கோன்
இன்சொல்லன் அருளாளன் ராஜாசர் முத்தையவேள்
எய்தி னேரைத்
தன்வயஞ்செய் பேரறிஞன் தகைசான்ற மனக்கினிய
தம்பி மாரோ(டு)
இந்நிலத்தில் வழிவழியாய் அறம்வளர்த்து நீடூழி
இனிது வாழ்க. 21

(15—10—1952)

அண்ணா மலைவணிகன் அறச்செயலால்
அரசாயோன் ஆண்மை மிக்கோன்
பண்ணார்ந்த தமிழிசையித் தமிழ்நாட்டிற்
பரவுவதே பண்பா மென்ன
எண்ணார்க்குப் பொருளுணர்ச்சி ஏற்றமுண்மை
எடுத்தோதி எதிர்ப்புத் தாக்க
ஒண்ணாது காத்தவவன் சீர்த்திதமிழ்
உள்ளளவும் ஓங்கு மன்றே. 22

இந்நாட்டிற் செல்வரெலாம் எண்ணரிய
அருட்கொடையால் எழிலார் கல்வி
எந்நாளும் வளர்கழகம் இனிதியற்றிப்
பெரும்புகழின் எல்லை கண்டோன்
தன்னார்ந்த தாளாண்மை நுண்ணறிவால்
தலைசிறந்த அன்னோன் பேரைப்
பொன்னார்ந்த நல்லெழுத்திற் பொறித்துலகம்
நாள்தோறும் போற்று மன்றே. 23

எவ்வுயிருந் தொழுதேத்த இவனுருவச்
சிலைகள்தமை எங்கும் நாட்டி
எவ்வமிலாக் கலைக்கழகம் மண்டபங்கள்
இவன்பெயரால் இலங்கக் கட்டி
இவ்வுலகில் தமிழ்மக்கள் நன்றிமற
வாதவரென்று எவருங் கூறும்
அவ்வுரையை மெய்யாக்கி ஆண்மையுடன்
வாழ்வதுநம் கடமை யாமால். 24

அண்ணா மலைவள்ளல் அருந்தவச்சேய்
அவன்செய்த அறங்க ளெல்லாம்
கண்ணாகப் போற்றரசன் கல்வியறிவு
அரசியலின் கவினார் தொண்டும்
நண்ணாரும் புகழ்குணமும் நனிசிறந்த
முத்தையவேள் நலஞ்செய் தற்கே
உண்ணாடுந் தம்பியரும் புதல்வர்களும்
உவந்தோங்க ஊழி வாழி. 25

இப்பெரிய கலைக்கழகஞ் செய்தவத்தால்
எங்களுளங் கவர்ந்த ஏந்தல்
ஒப்பரிய பேரறிஞன் உலகுபுகழ்
சண்முகத்தைத் துணைவேந் தாப்பெற்று

இப்புவியில் ஓங்கியதால் முத்தமிழ்த்தொண்
டியற்றிடுவோன் எதிர்ப்பி னேரும்
ஒப்புகின்ற நல்லாட்சி செலுத்துமவன்
உளமகிழ்ந்தே ஊழி வாழி. 26

(5—9—1953)

முல்லையிளங் கொடிக்குத்தேர் ஈந்தனனோர்
வள்ளலென்றும் முகில்கண் டேங்கும்
நல்லமயில் நடுங்கியதாப் போர்வையளித்
தானென்றும் நவிலக் கேட்டோம்
எல்லையிலா மக்கள்பயின் றெஞ்ஞான்றும்
நல்வாழ்வுற் றிருக்க எண்ணிக்
கல்வியினுக் களவிறந்த பொருளீந்த
வள்ளலையாம் கண்டோ மன்றே. 27

இந்தியநா டெனும்பரப்பில் இவற்கிணையாச்
சொலத்தக்கார் இன்று காறும்
வந்திலரே பொதுநலத்தில் வாரிவழங்
கியபொருட்கு வரம்போ இல்லை
செந்தமிழின் இசைவளத்தைத் தமிழரெலாம்
செவிமடுத்துத் திளைக்கச் செய்த
மைந்துடையான் தமிழ்அண்ணா மலைவள்ளல்
பெருமையெம்மால் வழுத்தற் பாற்றோ. 28

திருவிளக்குக் கற்கோயில் சிறுநிலம்போல்
வனஅளித்த செல்வர் தம்மை
ஒருசிலையில் செப்பேட்டில் உவந்தெழுதி
வைத்தனரே ஓங்கு கல்விப்
பெருநிலயம் முதலான அரியசெயல்
பலசெய்த பெருமான் சீர்த்தி
இருநிலத்தில் பொன்னெழுத்தால் எழுதுதல்நம்
கடமையன்றோ என்றும் வாழ்க. 29

ஆன்றதமிழ்ப் பெருவள்ளல் ஆம்அண்ணா
மலையரசன் அருளும் மேன்மைத்
தோன்றல்மதி நலங்கல்வி சொல்வன்மை
ஒப்புரவு தூய வுள்ளம்
என்றுபல கலைக்கழகம் இதுபுரப்போன்
அரசியலின் ஏற்றம் பெற்ற
சான்றவனும் ராஜா சர் முத்தையவேள்
வழிவழியாத் தழைத்து வாழ்க. 30

உலகுபுகழ் பேரறிஞன் உரைவலனிக்
கலைக்கழகம் உயர ஆட்சித்
தலைமைபெறு சர் சி. பி. இராமசாமிப்
பெரியோன் தகைசால் தோற்றம்
இலகுமெழி லவன்பல்லாண் டிவண்வாழ்க
இவற்குதவி ஆட்சி ஏற்கும்
நிலவியபண் பாரறிஞன் இராமநாதக்
குரிசில் நீடு வாழ்க. 31

**(22—10—1954)**

நிலனோங்கு கற்பகம்போல் நினைத்தவெலாந்
தருந்திறலோன் நீடு செல்வம்
வலனோங்கு மதிநுட்பம் மனத்திட்பம்
செயலாற்றல் வாய்த்த மேலோன்
குலனோங்கு பொருள்வணிகர் குடிதழைத்துப்
புகழ்பூத்த கொற்ற வேந்தன்
நலனோங்கு சீர்அண்ணா மலைவள்ளல்
பெருமையெம்மால் நவிலற் பாற்றோ. 32

தனக்கிணையா வாரெவரும் இந்நாட்டில்
இலரென்று தக்கோர் கூற
மனக்கினிய பலகலைகள் வளர்கழகம்
தன்பெயரால் மகிழ்ந்த மைத்தவ்
வினைக்குரியார் எல்லோரும் உடனுறைந்து
பணிசெயற்கு வேண்டும் யாவும்
தினைத்துணையுங் குறைவறச்செய் செயல்வீரன்
சீர்த்தியென்றும் திகழ்ந்து வாழ்க. 33

கருவிகள்போற் பொருள்தெரியா மற்கேட்கும்
இசையின்பம் காதிற் கேயாம்
அரியஇசைப் பயனிதன்று சொற்பொருளோ
டகம்புகுந்தங் கறிவுண் டாக்கி
மருவிநின்று நினைதோறும் மகிழ்வித்தல்
வேண்டுமென மதித்திந் நாட்டிற்கு
உரியதமிழ் இசைவளர உழைத்தளங்கள்
மன்னவன்சீர் உலகில் வெல்க. 34

தந்தையார் வழிதழுவி இக்கழகந்
தனைப்புரப்போன் தரணி போற்றும்
மைந்துமலி பெரும்புகழோன் மதிநலஞ்சொல்
வளம்ஆட்சி வன்மை மிக்கோன்

செந்தமிழ்நாட் டண்ணல்எங்கள் ராஜாசர்
முத்தையவேள் சிறந்து தம்பின்
வந்தஇரு துணைவரொடும் மக்களொடும்
நீடூழி வாழ்க மாதோ. 35

உலகறிந்த பேரறிஞன் உரைவல்லோன்
துணைவேந்தன் ஊக்கம் உள்ளோன்
கலைநலந்தேர் சர் சி. பி. இராமசாமிப்
பெரியோன் கதிர வன்போல்
இலகுகஅன் னவற்குதவித் துணைவேந்தாய்க்
கலைப்பணிசெய் இனியன் இந்தத்
தலம்புகழும் பெருங்குணத்தோன் இராமநாதக்
குரிசில் தழைக்க நன்றே. 36

## வெள்ளி விழா வாழ்த்து

(9—2—1955)

மக்கள்உளம் மகிழ்ந்துநல வாழ்வுவளம்
பெறவேண்டின் மன்னுங் கல்வி
மிக்குலகில் அறிவினொளி விளக்கமுற
வேண்டுமெனும் உணர்வாம் வித்துத்
தக்கதிரு வுங்கொடையுந் தழைத்தஅண்ணா
மலையரசர் தகைசேர் நெஞ்சில்
புக்குமுளைத் ததன்பயனே போற்றுமிந்த
வெள்ளிவிழாப் பொலிவென் பேமால். 37

தென்னாட்டுக் குபேரர்முடி புனையாத
பெருவேந்தர் திறல்வண் மைக்கு
முன்னாட்டும் வள்ளல்அண்ணா மலைபதித்த
கல்விவித்து முளைத்தே யைந்து
சொன்னாட்டுங் கல்லூரி யாய்த்தளிர்த்து
வளர்ந்தொன்றாய்த் தொடர்ந்து பின்னர்
எந்நாட்ட வரும்வியப்பப் பலகலைகள்
வளர்கழகம் எனவோங் கிற்றே. 38

ஓங்கியஅண் ணாமலைப்பல் கலைக்கழகம்
எண்ணெழுத்தென் றுரைப்ப தான
நீங்கரிய இருகோடும் பலகிளையுங்
கொண்டுகலை நிழல்ப ரப்பி
ஈங்கறிவு மலர்ந்துபுகழ் மணங்கமழ்ந்தே
ஈழமுதல் இமய மட்டோ
யாங்கணுந்தன் மாணவராங் கனிகளையீந்
தின்புறுத்தல் அறியார் யாரே. 39

தனியொருவர் முயற்சியினாற் செயற்கரிய
கலைக்கழகந் தன்னை நாட்டிக்
கனிமனத்தால் தமிழகத்தார் கலையுயர்வு
பெறச்செய்த கருணை வள்ளல்
மனிதர்களில் தலையான மனிதர்அண்ணா
மலையரசர் புகழ்போல் அன்னார்
இனியதமிழ் இசைவளர்த்த எழிலார்பல்
கலைக்கழகம் இலங்கும் என்றும். 40

இத்தகைய கலைக்கோயில் எண்ணியவா
றியற்றிநின்ற இணையி லாத
உத்தமர்அண் ணாமலைவேள் உலகினுக்குப்
பலநெறியால் உதவி செய்த
அத்தனையும் அறிவாற்றல் அஞ்சாமை
வினைத்திட்பம் அருளன் பாய
வித்தகமாங் குணநலமும் விளம்பலுறிற்
பெருநூலாய் விரியு மன்றே. 41

அருளார்ந்த பேரறஞ்செய் அரசர்அண்ணா
மலைவள்ளல்அணிசேர் சீர்த்தி
உருவான சிலைதிறந்த உயர்குணத்தர்
கலைவளர்க்கும் ஒண்மை மிக்கோர்
மருவாரும் பொழில்புடைசூழ் வளநாடாம்
மைசூர்நா டாளு மன்னர்
பெருமானும் செயசாம ராசவுடை
யார்பகதூர் பெரிது வாழ்க. 42

மன்னும்உல கியலறிவும் வளமான
மொழித்திறமும் மருவும் மேலோர்
தன்னிகரில் குடியரசாய்த் தாயகம்வாழ்
வுறப்பணிசெய் தளராத் தொண்டர்
சென்னைமா நிலம்ஆட்சி செயும்கவர்னர்
பலகலைகள் சிறப்புற் றோங்கும்
இந்நிலையத் தின்முதல்வர் பிரகாசா
நலம்பலபெற் றினிது வாழ்க. 43

காந்தியார் வகுத்தநெறி கடைப்பிடித்துச்
சிறைபுகுந்து கலக்க மின்றிச்
சாந்திபெறத் தொண்டாற்றித் தமிழ்நாட்டுக்
காங்கிரசுத் தலைமை யேற்று

ஏந்துபெரும் புகழாளர் பொறியியல்மா
ணவரில்லம் இவண்திறப்போர்
வேந்தரென முதல்அமைச்சாய் மிளிர்காம
ராசர்நலம் மிக்கு வாழ்க. 44

பேரறிஞர் தலைசிறந்த செயல்வீரர்
ஆட்சிநலம் பேணும் வள்ளல்
சீரியதம் தந்தையெனத் திகழ்அண்ணல்
தமிழ்நாட்டின் திலகம் எங்கள்
நேரியஇக் கலைக்கழகப் புரவலர்நற்
குணக்குன்று நிறைதொண் டாற்றும்
பாரறிந்த ராஜாசர் முத்தையவேள்
பல்லூழி செழித்து வாழ்க. 45

சொல்லாற்றல் நுண்ணறிவு துலங்குசட்டக்
கலைஞானம் தூய பண்பு
நல்லாட்சித் திறமுதலாம் நலங்கள்பல
ஒருங்கமைந்தோர் நற்றொண் டாற்றும்
வல்லாளர் சர் சி. பி. இராமசா
மிப்பெரியோர் மதிக்குங் கல்வி
எல்லாம்மேன் மேல்வளரும் இக்கழகத்
துணைவேந்தர் இனிது வாழ்க. 46

தன்னிகரில் சீர்அண்ணா மலையரசர்
பெருங்கீர்த்தி தரணி யெங்கும்
மன்னுகஅம் மன்னவர்தம் மரபுவழி
வழிப்பெருகி மகிழ்ந்து வாழ்க
துன்னியஇக் கலைக்கழகம் நாளும்
வளர்வுறுக தொடர்ந்து கல்வி
இந்நிலையப் பணிபுரிவோர் எல்லோரும்
இறையருளால் இனிது வாழ்க. 47

## பேராசிரியர், வித்துவான், கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.

(28—9—1941)

**அ**ண்ணா மலையானை யார்வமுடன் கல்விதனை
எண்ணுமை லீத்தளித்த ஏந்தலை—விண்ணுடாய்த்
தில்லை வெளியைத் திருத்தியிட்ட தீரனை
வெல்லத்தான் வேந்துண்டோ வேறு. 1

**பொ**ன்னைக் கொடுத்துப் புகழெய்தித் தாங்கழிவார்
அன்னையாந் தீந்தமிழுக் காதரமாய்—மன்னுங்
கலையளித்த சேவகா கண்ணே சிதையா
நிலைகளித்துப் பெற்றனையே நீ. 2

**கீ**தமும் பாட்டுங் கிளரொளிநற் கல்விகளும்
வேதனும் வெள்கிடும் விஞ்ஞான—ஓதைகளும்
அண்ணா மலைநகரின் அண்ணலே நின்னிசையென்
றெண்ணுருஞ் சொல்வ ரிசைந்து. 3

**பொ**ட்டல் வறுங்களமும் போதரும்பிப் பூத்தளிக்கத்
தொட்டது பொன்னாந் துரையேநின்—னிட்டமகன்
எத்திசையும் போற்ற வினும்பெறுவன் முத்தையா
சித்தங் களித்திடுநற் சீர். 4

**மு**ப்பா னிரட்டி முதுமைய தாகுமெனல்
ஒப்பாமோ சால உரவோய்நீ—எப்போதும்
இப்போதே போல இனிதாக வாழ்ந்திடுக
அப்பாலுஞ் செய்யும் அருள். 5

(6—2—1943)

**த**லையாகப் பூம்புகார்த் தார்வளவற் கொண்ட
நிலையான நற்குடியில் நின்றாய்—மலையா
மதியுடையாய் தேசுற்றாய் மாசற்றாய் நீண்ட
நிதியுடையாய் ஈத்துவக்க நீ. 6

**ம**ன்னர் மதிக்கவும் மாண்புடையோர் போற்றவுந்
தென்னவனே சீராய்த் திரண்டநின்—பொன்னெல்லாம்
நல்கினுய் காரகன்று நல்லொளியே யெங்குமுறப்
பல்கலைகள் எல்லாம் பரந்து. 7

**வ**ணிகர் திலகா வழங்குகொடை யாய்நின்
அணிமா மகன்நின் னடியே—துணிந்தாற்றும்
பேரொளி கொள்ளும் பெருமை பொலிவூட்டுஞ்
சீராக உன்றனையே சேர்ந்து. 8

காளுடு காத்தான் கவின்மா ளிகையுறைவான்
வாளுடு கிள்ளாய் வழியுரைத்தேன்—தானுய்த்
தமிழின் னிசைமகிழ்ந்து தான்கொள்வான் கூவாய்
இமிழ்குரலோ டின்றமிழ்நீ யேய்ந்து. 9

சிறந்தா ருரைக்கும் சிறப்புரையுங் கொண்டாய்
பிறந்தார் பெறும்பேறும் பெற்ருய்—அறந்தான்
உருவாகி வந்தாய் உயர்தமிழிற் கேய்ந்த
கருவாய்நீ வாழி களித்து. 10

(30—9—1943)

தண்ணர் தமிழளிக்குந் தாங்கிக் கலேவளர்க்கும்
பண்ணர் இசையும் பயின்றளிக்கும்—நண்ணரும்
அண்ணு மலேயாய் அணந்தா லளிசெய்யும்
கண்ணளா நின்றன் கரம். 11

அண்ணு மலேயாய்நின் அங்கை மருத்துவனே
நண்ணு துயர்ந்து நலம்பெறவென்—றெண்ணுவேம்
பாட்டிற் பொதிந்து பயில்வேம் நவில்வேமால்
நாட்டத்தி லொற்றி நயந்து. 12

பல்லோர் பணிந்து பழிச்சிடுவார் பல்கலேகள்
வல்லோர் வணங்கி வழுத்திடுவார்—இல்லோரும்
ஒன்றி யடைந்தாரேல் ஓர்பொழுதும் பின்னிரவார்
குன்ருநின் செல்வக் கொடை. 13

முத்துடையாய் சீராக முத்தமிழு நன்குடையாய்
அத்திறத்தாய் பாண்டிவள மார்நாட்டை—ஒத்துடையாய்
விண்ணுட் டினுமுண்டோ வீறிதனே யொப்பதுதான்
அண்ணு மலேயேநீ யாய். 14

(30—9—1944)

எத்தனே எத்தனே எண்ணிறந்த மாணவர்கள்
தொத்திநிற்றேன் உண்ணும் தொகைவண்டின்—மொய்த்துளார்
அண்ணு மலேயான் அருங்கழகத் தாருவின்கண்
உண்ணுறுந் தேனே யுகந்து. 15

சிறுபொருளுங் கூடுமேல் சேர்கல்வி விட்டு
மறுகும் உலகிலிது மன்னும்—உறுபொருளென்
றெண்ணு தளித்திட்டே ஏற்றமுடன் கல்விதொட்டான்
அண்ணுமலேயாம் அரசு. 16

நல்கும் பொருள்களுள் நற்கல்வி நன்றென்னச்
சொல்லிய சொல்லோர்ந்து சோர்விலா—தல்கலும்
பல்கலைக ளோங்கிவளர் பள்ளி பயின்றளித்தான்
வெல்கநம் தாளாண்மை வேந்து‘ 17

சொல்லுவார் சொல்லுகின்ற சொல்லெல்லாந் தன்சொல்லாப்
பல்கிப் பெருகுபுகழ் பாரித்த—வல்லாளன்
வள்ளலண் ணுமலை வாழிய செந்தமிழுக்
குள்ளளவு மோங்க உழைத்து. 18

(30—9—1945)

கடல்கடந்த செல்வங்கள் கைகடந்த வேனு
மடமடவென் றீண்டியதே மன்னு—உடனோர்
பரியினு மாகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 19

வண்மை பிறர்க்கு வரைந்து வழிகாட்டும்
அண்ணு மலையா யரசேநீ—கொண்ட
கடாரத்துச் செல்வங் கை சேர்வது முன்றன்
உதார குணமலவோ ஒது. 20

செங்கையண் ணுமலையாய் செம்மைநற் பண்புடையாய்
மங்காத் தமிழ்க்கலைகள் மாண்புறவே—பொங்கியெழச்
சங்கம் பலகண்டு சான்றோனே நீவாழ்தி
எங்கெழிலென் ஞாயி றெமக்கு. 21

(26—1—1947)

அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப வாங்கே செயலென்ற—நற்குரவன்
வாய்மொழியாற் கல்விதரு வள்ளலண் ணுமலைநீ
தாய்மொழியைத் தாங்குமொரு தூண். 22

கோயில் குளங்காவும் கூவலொடு சத்திரமும்
ஆயினற ஞகா அருங்கல்வி—ஏயுமென
அண்ணு மலையரசே ஆய்ந்தளித்தாய் வாழ்கவுனை
நண்ணும் நத்துவரிந் நாள். 23

அழியாப் புகழ்க்கோவே அண்ணு மலையாய்
வழிவழிநின் பேரோங்கி வாழ்க—பழியிருளைப்
போக்குங் கலைக்கழகம் பொன்றுது நிற்குமுன்றன்
ஆக்கமிகும் பேர்கொளத லல். 24

## திரு. டி. டி. மீனுட்சிசுந்தரம், பி.ஏ.,பி.எல்.,

(பதிவாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.)

---

### வெள்ளி விழா வாழ்த்து

(9—2—1955)

அண்ணு மலையரசர் ஆர்வமுட னேதொடுத்த
பொன்னுன திட்டமெல்லாம் பூத்துப் பொலிவதைக்காண்
பன்னுள் புகழ்கமழப் பாரில் மிளிர்வதைக்காண்
எந்நாளும் நாம்மறவா ஈடில்லா ஈகையைக்காண். 1

கண்ணுக்குப் பேரழகும் காதிற்கோர் இன்னிசையும்
முன்னிற்கும் மாமதியும் மொட்டவிழும் பூஞ்சோலை
வண்ணப் பலகலைகள் வாழும் கலாநிலையம்
அண்ணு மலைநகரில் ஆர்வமுட னேஅமைத்தார். 2

முல்லைக் கொடிபோன்று மேதினியி லேவளர்ந்த
சொல்லுக்குச் சுந்தரராம் தூய தமிழ்மக்கள்
கல்விகொழு கொம்பின்றித் தவித்த தளர்வகற்றச்
செல்வத் திருத்தேரைச் செம்மல் உவந்தளித்தார். 3

முல்லைக் கலைக்கழகம் மெய்ப்பாரி நும் அன்பால்
தில்லைத் திருச்சபையில் திருநடனம் புரிகின்றேன்
எல்லை யிலாக்கருணை இன்ப'மலர்நோக்கில்
பல்லாண்டு பல்லாண்டு புகழோடு வாழியவே. 4

பார்க்கும் இடமெல்லாம் பாரோர் புகழ்ந்தேத்தக்
கூத்துக் கவிதையெல்லாம் கவின்சிற்ப மாயமைந்த
கூத்தன் திருக்கோயில் கனக சபைகண்டோர்
பூத்துக் கலைகுலுங்கும் கலைக்கழகம் இதுகாண்பர். 5

இன்னிசை தமிழில் கேட்டே இன்புற்றிங் கிதனைத் தந்த
மன்னரின் மாண்பு கண்டு மனம்விரிந் தாடு கின்றுன்
புன்னகை முகத்திற் கொஞ்சப்,பொன்கழற் பாதம் தூக்கித்
தன்னிக ரில்லா ஈசன் தாண்டவ மாடு கின்றுன். 6

கனகச் சிலம்பொலிக்கக் கால்தூக்கி ஆடுமீசன்
புவனம் சிறப்படைந்த பெருங்கோயில் கோபுரங்கள்
அகிலம் அழைப்பதற்கே அழகாய் உயர்ந்ததம்மா
அருகில்அண்ணுமலையைக் காணவும் உயர்ந்ததம்மா. 7

மங்காத் தமிழ்வளர்த்த மன்னர் பலரெல்லாம்
சங்கத் தமிழ்கூட்டிச் சீரும் சிறப்பும்உற்றார்
பொங்கும் புகழ்கண்டார் புலவருக்கு மேதந்தார்
அந்தச் சிறப்படைந்தார் அண்ணா மலையரசர். 8

சிற்ப வளம்கொழிக்கும் சிங்காரக் கோயில்கட்டிப்
பொற்புச் சுதைவேலை பொன்னோவி யம்தீட்டிக்
கற்கண் டிலும்இனிய கானஆ டல்கூட்டி
முற்பட்ட வேந்தரெல்லாம் முன்னுபல கலைவளர்த்தார். 9

காவியப்பூஞ் சோலையெனக் கானம் செழித்திடவும்
ஓவியமும் சாத்திரமும் வண்ணமுடன் ஓங்கிடவும்
பாஇயற்றல் பொறியியலின் பாடம் கொழித்திடவும்
ஆவனசெய் தேவளர்த்தார் அண்ணா மலையரசர். 10

அண்ணா மலையரசர் ஆர்வமுடன் காத்துவந்த
அண்ணா மலைக்கழகம் அவர்மைந்தர் அன்பினிலே
முன்னேறி வாழ்வதுகாண் முத்தையவேள் வாழ்க
மண்ணில் வளம்பெருகி மன்னர் குலம்வாழ்க. 11

இன்று துணைவேந்தர் இராமசா மிப்பெரியோர்
நன்றாய் அமைந்திட்ட நாவலர்கள் மாணவர்கள்
இன்ப வளம்பெருகி ஏற்றத் துடன்வாழி
அண்ணா மலைநகரில் அமைந்தோ ரெலாம்வாழி. 12

## வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை

(28—9—1941)

சீரார் வணிகர் குலவிளக்காய்ச் செய்ய தமிழர் தவப்பயனாய்
ஏரார் அறத்தின் தனியுருவாய் இம்மா நிலத்தில் வந்துதித்துக்
கூரார் கொன்றைச் சடைப்பெருமான் கழல்கள் மலருந் திருவுளத்தோன்
பாரோர் புகழண்ணா மலைமன் பண்பின் வாழ்க பல்லாண்டே. 1

நன்றே யென்றும் நினைந்ததனை நன்றே புரியும் அருந்திறலும்
ஒன்றே கூறும் உளத்தெளிவும் உறுதிப் பாடும் தெளிந்தார்கண்
சென்றே ஐயம் கொளாச்சீரும் செறிந்த அண்ணா மலைப்பெரியோன்
இன்றே போலப் பன்னலமும் இசைந்து வாழ்க பல்லாண்டே. 2

கற்பார் விரும்பும் கலையனைத்தும்
கற்கு மாபல் கலைக்கழகம்
பொற்ப அமைத்தஃ தென்ஞான்றும்
பொலிந்து தோன்றப் பொருள்நிறைத்தோன்
நற்பா லறிஞர் புலவருடன்
நாடாள் மன்னர் புகழுங்குண
வெற்பே நிகர்அண் ணாமலைவேள்
விளங்கி வாழ்க பல்லாண்டே. 3

பிறையார் கண்ணி முடிப்பெருமான்
பெருமன் றம்பொன் னணிந்துதுழாய்
நறையார் கண்ணி நாதனுறை
நகரும் நன்கு திருத்தினனால்
முறையான் அறுபா னாண்டுநிறை
முதல்வன் அண்ணா மலைக்குரிசில்
குறையா ஒக்கல் நிறைசெல்வம்
கூடி வாழ்க பல்லாண்டே. 4

இன்பப் பாவாய் உரைவடிவாய் இறைவன் கோயிற் றிருவுருவாய்
நன்மை வளர்அண்ணாமலைப்பல் கழக மாகும் நல்லுருவாய்
இன்னும் பலவாப் பேரறத்தின் எழிலா ருருவாய் இயைந்தபுகழ்
மன்னும் அண்ணா மலைமன்னன் மகிழ்ந்து வாழ்க பல்லாண்டே. 5

(30—9—1947)

பாராளும் மன்னவரும் பாராட்டப் பல்வளனும்
ஏராரும் நுண்மதியும் ஏய்ந்தொளிரும்—சீராளும்
அண்ணா மலைமன் அவனியில் வாழியவே
விண்ணோரும் போற்ற வியந்து. 6

என்றும் தமிழால் இசைவளர்த்தல் நன்றாகும்
என்றே யினிதுணர்ந் தேய்ந்தவெலாம்—என்றும்
குறையா தியற்றும் குணமிக்க வள்ளல்
இறையோன் நலம் பெருக வீண்டு. 7

அண்ணா மலைப்பல் கழகத்தை ஆய்ந்தளித்துப்
பண்ணாரும் இன்தமிழும் பன்மொழியும்—கண்ணார்
தொழில்வளனும் ஓங்கத் துறையமைத்தான் தூய
எழில்வளர் அண் ணாமலைவேள் ஏய்ந்து. 8

நிலையாது செல்வமெனும் நீர்மைதனை மாற்றி
நிலையினதா கச்செய்து நெஞ்சத்—தலைவின்றிப்
பல்லறங்கள் ஆற்றும் பயன்தெரிஅண் ணாமலைமன்
நல்லறிஞர் போற்ற நயந்து. 9

நண்ணாரும் போற்றும் நலமிக்க கீர்த்தியொளிர்
அண்ணா மலைமன்னன் ஆய்ந்தளித்த—கண்ணாகும்
பல்கலைசேர் நற்கழகம் பண்ணார் தமிழ்தழைக்க
மல்கி வளந்திகழ்க வாய்ந்து. 10

## வித்துவான், மு. அருணசலம் பிள்ளை

(30—9—1938)

நிலவோங்கு தமிழகமும் நிலைத்தோங்கு
சிவநெறியும் நீடு செல்வக்
குலவோங்கு பொருள்வணிகர் கொழுங்குடியும்
முத்தையகோ மானுஞ் செய்த
தலவோங்கு தவப்பயனுத் தக்கவரு
ஏறமோங்கத்தான்பி றந்த
வலவோங்கு புயனண்ணு மலைவள்ளல்
மங்கலநாள் வாழ்த்து வோமே. 1

ஆங்கிலநல் லரசர்பெரு மான்மதிப்புக்
கிடனுகி யறிந்து தந்த
ஓங்குபெரும் விருதனைத்தும் உவப்புடன்வந்
தணைதரப்பெற் றுலப்பி லாது
தேங்குபுகழ் கொண்டுலகில் திருவாலுங்
கொடையாலுஞ் சிறப்பி னுலும்
ஈங்கொருவ னெனப்புகல என்றும் வழி
வழியரசும் எய்தி னுனே. 2

சொல்லரிய புலவருளத் தூணுட்டி
மதிபிணித்துச் சூழ்ந்து தாந்தாம்
வல்லதுறை களிற்றிளைத்து வாலுணர்வாம்
அமுதருந்தி வழங்கும் வண்ணம்
எல்லையில்பல் கலைக்கழகம் எனுமொருபாற்
கடலியற்றி யினிதி னீந்த
நல்லவளஞ் சேர்செட்டி நாட்டரசன்
செயல்வியந்து நவிலார் யாரே. 3

எண்ணவிலா அறம்பலவும் எடுத்துரைக்கோ !
ஆள்வினையின் ஏற்றஞ் சொல்கோ !
நுண்ணறிவின் திறம்வியக்கோ ! நோன்மைநிலை
வாற்றலினை நுவல்கோ ! நோக்குங்
கண்ணிணையாற் குறுநகையாற் கனிமொழியால்
உதவியினுற் கலவா ருஞ்சொல்
வண்ணமொழு கிடச்செயும்அண் ணுமலைமன்
பெருமையென்றும் வாழ்க நன்றே. 4

(28-9-1941)

முதுநீ ருலகில் முத்தமிழால்
முரன்று வளைகால் ஒளிர்முத்தால்
மூவா மருந்து நுகர்பதியும்
மொழிய லாகா துவமையெனத்
துதிசேர் வழுதி வளநாட்டில்
தொழிலால் பொருளால் அறச்செயலால்
துகளி லின்பத் தாலிறைவன்
தோழ னகரை வென்றுபுகழ்
கதுவா நிற்குங் கானாடு
காத்தா னெனுநன் னகர்க்கணியாய்க்
கதிர்த்த செல்வன் முத்தையவேள்
கருத்திற் கனிந்து செயுந்தவத்தாற்
புதுநீர் மையதா யறத்தினுருப்
பொலிவுற் றெனவந் துதயஞ்செய்
பூமான் அண் ணாமலையரசன்
புகழ்நீ டூழி வாழியவே. 5

தக்க குணஞ்சால் பொருள்வணிகர்
தழைத்த மரபிற் பட்டினத்துச்
சாமி யுதித்த பெருங்குடியின்
சால்பு வளரச் சைவநெறி
மிக்கு பரவ அருள்பெருக
மேன்மை யறங்கள் குதுகுலிப்ப
விளங்கு கலைமா துளங்குளிர
வியனார் திருவும் பயனுறவே
திக்கெட் டினும்வாழ் பவர்மகிழச்
சிந்தா மணியும் ஐந்தருவும்
திகழுங் காம தேனுவொடு
தெய்வ நிதியுந் திரண்டொருங்கு
மக்கள் வடிவின் வந்தமைபோல்
மன்னிப் பிறந்த நன்னயஞ்சேர்
மன்னன் அண்ணா மலைக்குரிசில்
வண்மைக் கிணையோ மழைமுகிலே ! 6

எண்ணுங் கருமம் எண்ணியவா
றியற்றுந் திறலும் நூலறிவும்
இணையில் சூழ்ச்சி மதிவலியும்
எவரும் போற்றும் பெருந்திருவும்

நண்ணும் பெருமை யுறலாலும்
ஞால முளகா றினிதியலும்
நலமா ரறங்கள் செயலாலும்
நாளு மவைகண் டுளமகிழ்ந்து
கண்ணும் உயிரும் போலுலகங்
காக்கு மரசர் பெருமானூர்
கவினுர் டாக்டர், ராஜா ஸர்
முதலாம் விருது களுமுதவி
விண்ணின் மணிபோல் ஒளிபரப்பு
வித்தா ரெனிலெம் பெருங் குணத்து
வேந்தன் அண்ணு மலைக்குநிகர்
வேரு ருளரிம் மேதினிக்கே! 7

பாண்டி வளநா டாண்டமுடிப்
பைந்தார்ச் செழியர் தமிழ் வளர்க்கும்
பண்பிற் சிறந்தா ரெனப்புலவர்
பலரும் பலகாற் புகழ்ந்தனரால்
ஈண்டு புகழ்அண் ணுமலைவேள்
இயன்முத் தமிழும் வடமொழியும்
இனிய வடுகு மலையாளம்
ஏற்ற முறும்ஆங் கிலமுதலா
வேண்டு மொழியும் உடன்வளர
விழைந்து பலநூ ருயிரம்பொன்
விதைத்து நகர்கண் டறிவணங்கு
மிளிருங் கோயில் பலசமைத்து
யாண்டும் இசைத்தூண் நாட்டினனுல்
யாரே மேலாந் தகையரென
யானே புகல்வேன் புலவீர்காள்
யாவும் பெறுவீர் பாடுமினே. 8

இன்ன தகைசால் பெருமான்நம்
ஏந்தல் அண்ணு மலைவள்ளல்
இருமுப் பானுண் டினிதினுறும்
ஏற்றங் குறித்து நாற்றிசையும்
பன்னற் கரிய மகிழ்பூத்த
பரமன் திருமா மணிமன்றிற்
பாக முடையாள் காணநடிப்
பவன்செய் யருளால் மேன்மேலும்
சொன்ன மலைபோல் நிலைபெற்றுத்
துரிசில் யாக்கை யூக்கம்வலி

தொடர்ந்து வளர நூறாண்டிற்
சுகமா மணமா லையுஞ்சூடி
மன்னும் வாழ்க்கைப் பெருந்தேவி
மக்கள் ஒக்கல் புடைசூழும்
வாழ்வு தழைத்துப் பல்லாண்டு
வாழ்க எனயாம் வாழ்த்துவமே. 9

(6—2—1943)

அருள்பழுத்த கற்பகமே அறிஞர்கள்சிந் தாமணியே
அறத்தின் ஆறே
பொருள்செழித்த வணிகர்குலப் பொருப்பின்மிசைச்
சுடர்விளக்கே புவிவாழ் நர்க்குத்
தெருள்கொழித்த பலகலைகள் திகழ்கழகம்
நிறுவிமதிச் செல்வம் நல்கி
மருளொழித்த கதிரண்ணா மலையரசே
எஞ்ஞான்றும் வாழி வாழி. 10

தமிழர்கள்செய் தவப்பயனே தமிழிசையின்
பெருவாழ்வே தனையொப் பில்லாய்
அமிழ்துறமுந் தமிழணங்கின் ஆருயிரே
நேர்கருத்தே அணியே கண்ணே
கமழுநறும் புகழாள கருணையண்ணா
மலையரசே கவிஞர் வைப்பே
இமிழ்திரைநீர்க் கடலுலகில் இறையருளால்
நிறைநாள்பெற் றினிது வாழி. 11

(30—9—1943)

நாட்டுக் கரசன் நகர்க்கரசன்
நயந்தங் கியபல் கலைக்கழகம்
நயந்து நிறுவு பேரரசன்
ஞாலம் மதிக்குங் கொடைக்கரசன்
ஏட்டில் அடங்காப் புகழ்க்கரசன்
இருமை பயக்கும் பொருட்கரசன்
எண்ணில் அறங்கள் புரியரசன்
இணையில் தமிழின் னிசைக்கரசன்
பாட்டும் உரையுங் கலந்ததமிழ்ப்
பயிரை வளர்க்கும் முகிலரசன்
பண்புக் கரசன் பசுங்கொடியோர்
பாகம் படர்ந்த பவளமலை

ஆட்டம் புரிதாட் கன்பரசன்
அணிசேர் அண்ணா மலையரசன்
அருள்செய் பெருநாண் மங்கலத்தின்
அமைதிக் குவந்து வாழ்த்துவமே. 12

அண்ணா மலைமன்னன் ஆறுபத்தி ரண்டாண்டு
கண்ணாரக் கண்டு களித்தனமால்—உண்ணாடும்
நன்னலங்கள் எல்லாம் நணுகப் பலவூழி
மன்னுகவென் றேவாழ்த்து வாம். 13

**(30—9—1944)**

அருள்மலிந்த பெருங்கொடையான் அரசனெனுந்
திருவுடையான் அணியார் செஞ்சொல்
பொருள்மலிந்த உரைநடையான் புவிமலிந்த
புகழுடையான் பூவா நெஞ்சின்
மருள்மலிந்த இயல்பினரும் மதிமலிந்து
நல்வாழ்வு வாழும் வண்ணம்
தெருள்மலிந்த கலைக்கோயில் செய்தனன் அண்
ணாமலையாம் செம்மல் தானே. 14

கண்பெற்றார் பயிலிளைஞர் கவின்பெற்றார்
கலையறிஞர் கருது நாட்டுப்
பண்பெற்றார் இசைவாணர் பயன்பெற்றார்
தமிழகத்தார் பலரும் போற்றும்
எண்பெற்ற அரசியலில் இடம்பெற்றார்
குலவணிகர் இணையி லாத
வெண்பெற்றத் திறையருள்சேர் வேளண்ணா
மலைபெற்ற மேன்மை யாலே. 15

அறம்பலவு நிலைபெறுக அமைத்திடுபல்
கலைக்கழகம் அரனார் சென்னிப்
பிறங்குபிறை யெனவளர்க பிறநலங்கள்
நனிவாய்க்க பிணிக ளாதி
மறங்கெடுக ஓரூழி ஒருநொடியாப்
பல்லாண்டு வாழ்க வண்மைத்
திறந்திறம்பாச் சீரண்ணா மலைக்குரிசில்
குலமனைத்துஞ் செழிக்க நன்றே. 16

(30—9—1945)

உலகம் போற்றும் பெருங்கொடையால்
உலப்பி லாத கலைக்கழகம்
உறுதி பெறநாட் டியசெயலால்
ஊக்கம் உணர்வு மீக்கொளலால்
அலகில் வினைசெய் மதிவலியால்
ஆட்சித் திறனல் செழுந்திருவால்
அரசர்க் கரசர் பெருங்கேண்மை
யமையுஞ் சிறப்பால் பிறநலத்தால்
பலரும் பாராட் டியசீர்த்தி
படைத்தோன் அண்ணு மலைவள்ளல்
பகலோன் மதியம் உள்ளளவும்
பாரில் வாழ்க பிறர்நலமே
இலகுந் தமது நலமாக்கொண்
டிணையின் றேங்கு மணமக்கள்
எவருந் தழைத்து வாழ்கவென
எல்லாம் ஒருங்கு வாழ்த்துவமே. 17

வானிற் பறக்க மலைதுளைக்க
வையம் அளக்கக் கடல்நீந்த
மாடஞ் சமைக்க யாற்றிலணை
வகுக்கக் கருவி பலவமைக்க
வூனிற் பிறந்த வுயிருணர
உலகப் பொருளின் இயல்பறிய
ஒளிரும் விண்மீன் முதலாய
உற்று நோக்க உளந்தெரியத்
தேனிற் பிறக்குஞ் சுவைபொதுளுஞ்
செய்யுள் யாக்க வுரைவரையச்
செஞ்சொற் பொழிவு செயவல்ல
சீர்சால் மாண வரையாக்கும்
மானத் தொடுபல் கலைக்கழகம்
வகுத்தோன் அண்ணு மலைவள்ளல்
வளரும் பிறைபோல் நீடூழி
மகிழ்ந்து வாழ்க மாநிலத்தே. 18

ஆடும் பெருமான் அருளால் அறுபதின்மேல்
நீடியவைந் தாண்டு நிகழ்நன்னாள்—கூடியதால்
மன்னவனும் அண்ணு மலைவள்ளல் வாழ்கவென
நன்னர் வழுத்துவமே நாம். 19

(26—1—1947)

இருநிலத்திற் பிறந்தவர்கள் எல்லோரும்
மக்களென இயம்ப லாகா
மரைமலரே மலர்த்தொகையுள் முதன்மைபெறும்
அவ்வாறே மதிந லஞ்சான்(று)
உரையாலும் பாட்டாலும் ஓங்குபுகழ்
ஒளிநிறுவும் உயர்பே ரண்ணல்
வரையறையின் றறம்பலவும் வளர்அண்ணா
மலைவள்ளல் வாழ்க மாதோ. 20

தமிழ்நாட்டில் தமிழர்களின் நல்வாழ்க்கைக்
குதவுகற்ப தருவென் பேனோ
தமிழ்நாட்டில் தமிழிசையைக் கருத்தூன்றி
வளர்க்கவந்த தாயென் பேனோ
தமிழ்நாட்டில் தமிழ்மூன்றுந் தலைமைபெறச்
செயுந்தந்தை தானென் பேனோ
தமிழ்நாட்டில் தமிழரசாய்த் திகழண்ணா
மலைவள்ளல் தனையென் சொல்வேன். 21

தன்பெயரால் நகரமைத்துத் தமிழாதி
மொழிபலவுந் தழைக்கும் வண்ணம்
பொன்பொழிந்து கலைக்கோயில் புனைந்துநிறு
வியபெரியோன் புவியோர் போற்றும்
மன்பெயரோன் அருள்அண்ணா மலைக்குரிசில்
பல்லாண்டு வாழ்க வென்று
மின்பொலியுஞ் சடைப்பெருமான் திருவருளை
நாணாளும் வேண்டு வேனே. 22

(30–9–1948)

வள்ளல் அண்ணா மலையரசன் வகுத்தபல
கலைக்கோயில் வாழ்க வாழ்வில்
உள்ளுவதெல் லாமுயர்வே யுள்ளுமவன்
அறங்கள்பல ஊழி வாழ்க
தெள்ளுதமி ழிசையியல்பு சிதையாமல்
நிறுவும்அவன் சீர்த்தி வாழ்க
வெள்ளம்ஒரு நாளாக அவன்மரபு
பல்லாண்டு விளங்கி வாழ்க. 23

செய்ந்நன்றி மறவாத தமிழகத்தீர்
நுமக்கொன்று தெரிப்பேன் கேண்மின்
வையமும்வா னமும்ஆற்றாப் பேருதவி
நம் அண்ணா மலைவேள் செய்தான்
மெய்யாக அதன்பயனை நுகர்கின்றீர்
வருவாரும் விழைந்து துய்ப்பர்
கைம்மாறென் றாற்றகிலீர் கடமைமறப்
பதுநன்றோ கருது வீரே. 24

ஊரமைத்தல் தெருவமைத்தல் தடம்பூங்கா
மன்றமைத்தல் உண்டி யீதல்
பேரமைத்த கலைபயில்வார்க குதவிசெயல்
இன்னஅவன் பெயரா லாக்கிச்
சீரமைத்த நகர்தோறும் உருவப்பொற்
சிலைநாட்டல் செய்தீ ராயின்
பாரமைத்த புகழ்படைத்தீர் நும்நன்றி
யறிவுபுலப் படுத்தீ ராவீர், 25

மகனறிவு தந்தையறி வெனப்புகல்வர்
பெரியர் அது வாய்மை யாக
மிகுபுகழா என்அண்ணா மலையரசன்
பெற்றகுல விளக்குப் போல்வான்
அகனமர்ந்த இன்சொல்லன் அருளாளன்
பிறர்க்குதவி யாற்றி அன்பாய்
முகமலர்வோன் மூதறிஞன் உலகமதித்
திடும்பண்பு முழுதும் வாய்ந்தோன். 26

செந்திருமா துறைமார்பன் ராஜாசர்
முத்தையவேள் திண்டோ ளென்ன
மந்திரிகள் இவரென்ன வாய்த்ததுணைத்
தம்பியரை மருவி யின்புற்(று)
அந்தமில்சீர் அறங்ளெலாம் அணிபெறநன்
காய்ந்துவளர்த் தளவில் காலம்
தந்தைவகுத் திட்டநெறி முறைநின்று
வழிவழியாய்த் தழைத்து வாழ்க. 37

(24—9—1949)

நாடுநலம் பெறவேண்டின் மக்கள் வாழ்க்கை
நனியுயர வேண்டின்வளம் பெருக வேண்டின்
பீடுபெறும் அறிவுமுளைக் கொள்ளல் வேண்டும்
பெருநிலத்தி லெனச்சூழ்ந்து பிறங்கும் எண்ணே

கேடில்விழுப் புகழ்எழுத்தே யென்றி ரண்டில்
கிளைத்துவளர் பலகலைகள் கிளருங் கோயில்
ஈடிலையென் றுரைக்கும்வண்ணம் இயற்றும் வள்ளல்
எழில்அண்ணா மலைகீர்த்தி என்றும் வாழ்க. 28

பார்முதல்ஐம் பூதங்கள் ஆய்வர் பூதப்
பருவுடலைப் பகுத்தாய்வர் உடலி னூடே
ஏருறும்அவ் வுயிராய்வர் உயிர்க்குள் மன்னும்
இறைநிலையும் அரசியலும் இளைஞர் ஆய்வர்
சீர்திகழும் பொருள்பொறிநூல் வரலா றாய்வர்
செந்தமிழா தியமொழியுஞ் சேர ஆய்வர்
ஊருணிநீர் நிறைந்தனைய செல்வன் அண்ணா
மலையரசன் உஞற்றியபே ருதவி யாலே. 29

உலகுசெலும் பொதுநெறியில் இயங்கா தியாவும்
ஓர்ந்துசெயும் வினைத்திறத்தரல் திருவின் மாண்பால்
பலபலநல் அறஞ்செயலால் உயர்ந்த பண்பால்
பண்ணார்ந்த தமிழிசையைப் பரப்பி யாண்டும்
அலகில்தமிழ் மக்கள்உளங் குளிரச் செய்த
அருஞ்செயலாற் பலகோடிக் கொருவ னாகி
இலகியசீர் நிறையண்ணா மலைமன் னன்றன்
இனியபுகழ் வடிவைநினைந் தேத்து வோமே. 30

பொருட்கடலை முகந்துவிண்ணும் மண்ணும் போற்றப்
பொன்மாரி பொழிமுகிலே போல்வான் எங்கள்
அருட்கடலை யன்பருளத் தூறுந் தேனை
ஆலமுண்ட மிடற்றானை யடிவ ணங்கி
மருட்கெடநற் றிருப்பணிசெய் மன்னன் அண்ணா
மலைவகுத்த அறங்களெலாம் வளர்ந்து மன்னி
இருட்கெடுவண் மதிஞாயி றுளநாள் மட்டும்
இவ்வுலகில் வாழ்கவென இயம்பு வோமே. 31

அன்னவன்தான் முன்னைச்செய் தவத்தாற் பெற்ற
அரும்பெறல்நன் மக்களொரு மூவர் தம்முள்
முன்னவன்பல் கலையறிவு பெறுராஜா ஸர்
முத்தையகோ மான்எங்கள் முதல்வ னாவான்
தன்னினிய தந்தையைப்போற் பலர்பா ராட்டுந்
தகுதிமிக வுடையன்தா ளாண்மை மிக்கான்
பன்னலஞ்சேர் தம்பியரை யிருதோ ளாகப்
பார்வையிரண் டெனக்கொண்டு பழகும் பண்பன், 32

தக்கவளந் திகழ்செட்டி நாட்டு மன்னன்
சால்புடையன் முத்தையவேள் தம்பி மாரும்
மக்களுஞ்சுற் றமுநட்பும் நலங்க ளெல்லாம்
மருவிவழி முறைபெருகி வாழ்க அன்னோன்
மிக்கதலை மைப்பதவி பெற்று நாளும்
விளங்குகமேன் மேலென்று விழைந்தி றைஞ்சிச்
செக்கர்முடிப் பெருமானை மன்று ளாடுந்
தேவதே வனைவாழ்த்தல் செய்கு வோமே. 33

(29—9—1951)

**போ**ற்றுவம் வம்மின் ; புலனுடை மாந்தரீர்,
சாற்றக் கேண்மின் ; சாற்றக் கேண்மின் ;
வணிகரிற் பிறந்து வரிசையின் வளர்ந்து
மணிமுடி புனையா மன்னன் என்ன
நீணிலம் ஏத்த நின்றோன் விழாவினைக்
காணிய வந்து கலந்தகேண் மையினீர்
சாற்றக் கேண்மின் ; சாற்றக் கேண்மின் ;
வாஅ ளாண்மைசேர் மன்னரும் மருளத்
தாஅ ளாண்மையிற் றகுபொரு ளீட்டி
மன்னா வுலகின் மன்னுதல் குறித்துப்
பன்னூ றாயிரம் பலப்பல நெறிகளில்
மாரியே போன்மென வழங்கிய தன்றியும்,
நேரிய கல்வி நிலைபெறின் அல்லால்
அகத்திருள் நீங்காது அறிவொளி பரவாது
உகப்பும் மக்கண்மாட் டுறுதென வுணர்ந்து
மலைத்தலை யெழூஉங் கலைக்கதி ரென்ன
நிலத்திடை யாங்கணும் புலத்துறை மலர
மல்கிய திருவளர் பல்கலைக் கழகம்
ஒல்கா தமைத்த செல்வத் தோன்றல் ;
குழலொலி யாழொலி கூத்தொலி போலாது
எழின் மிகு மொழியினுங் கெழுதகு பொருளினும்
உள்ள நற் சுவையறிந் துள்ளம் உவப்ப
அமிழ்தினும் இனிய தமிழிசை வளர்த்துக்
கமழ்புகழ் நிறுவிய காலவன் ; என்றும்
நண்ணார் உட்குநல் அண்ணா மலைப்பேர்
அண்ணலுக் கிணையா அணிவிரன் முடக்கற்கு
யாஅ ருளரே ! யாங்கண் டிலமால் ;
பாரத நாடினிப் பயக்குமேற் காண்குவம்.
அன்னோன் இயற்றிய அரும்பெறல் அறமெலாம்

மன்னுக, வையத்து வாழ்கபல் லாண்டென
நன்னர் மொழிந்து நாம்வாழ்த் துவமே.
இன்னுங் கேண்மின்,
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்நம்
மனக்கினி தியற்றிய வள்ளல் **அண்ணாமலை**
அருந்தவஞ் செய்துபெற் றளித்த பெருந்தகை
திருந்திய பண்புஞ் சிறந்தநா கரிகமும்
அறிவுந் திருவும் மருவிய குரிசில் ;
வறியவர்க் கிரங்கும் மனநல முடையோன்
பல்வகைத் துறையிற் பதவிமேம் பாட்டினன்
செல்வங் கொழிக்கும் செட்டிநாட் டரசன்
தக்கவர் மதிக்குஞ் சால்பினன் ; தந்தைபோல்
இக்கலைக் கோயிற்கு இயைந்த புரவலன்
வித்தகம் நிறைந்த **முத்தைய** கோமான்
உத்தம ராய்த்தம் உடன்பிறந் தாருடன்
வழிவழிப் பெருகி வாழ்கவூ ழியென
மொழிகுவம் ; அன்றியும்; முன்னுறும் இந்நாள்
விழாவினை நடாத்த விழைந்துவந் தெய்தி
வழாஅது அறிவுரை வழங்குபே ரறிஞரும்
இப்பெருங் கழகத் தின்துணை வேந்தரும்
அப்பால் தொடர்புடை யனைவரும்
வாழியர் வாழியர் எனவாழ்த் துவமே.

## வெள்ளி விழா வாழ்த்து

(9—2—1955)

**வா**ழ்க மேன்மேல் வளர்க வளம்பெற்று
ஏழ்கடல் வரைப்பினும் இசைமிக் கோங்குக
வண்மையிற் சிறந்து மாண்புறு மன்னவன்
**அண்ணாமலைவேள்** ஆள்வினைத் திறத்தால்
திருவேட் களமெனும் பெருநிலந் திருத்திப்
பொருளுரம் பரப்பி அருணீர் பாய்ச்சி
மருளறக் களைந்து வல்வாய் மாக்களால்
ஒல்கா வகைகாத் துயிரென வளர்த்த
பல்கலைக் கழகப் பசுந்தளிர்க் கற்பகம்
ஐயைந் தாண்டுகள் அறிவுறக் கிளைத்து
மெய்பெறு **வெள்ளி விழா**வரும் பியது
மேலும் பொன்பூத்து வியன்மணி காய்த்துச்
சாலவும் இன்பக் கனிபல தந்து
விட்புல வர்ணரும் வியப்பப்
பெட்புறு தமிழகப் பெருந்தரு வாகவே,

## அண்ணாமலையரசர் பிறப்பால் உயர்ந்தவை

ஒருவனால் ஒருகுடி உயரும் என்ப
அறிவுந் திருவும் மருவிய பெருமகன்
அண்ணா மலைமன் அயரா முயற்சியால்
எண்ணத்தின் வலியால் இருங்கொடை தன்னால்
பெற்ற பெருங்குடி பீடுசால் செல்வக்
கொற்றவர் குடியாய்க் குலாவத் தழைத்தது
சுற்றம் செழித்தது தொல்குலம் சிறந்தது
நற்றவஞ் செய்த நகருல கறிந்தது
தென்றமிழ் வளர்ந்தது தென்னா டுயர்ந்தது
பொன்றாத் தமிழிசை புத்துயிர் பெற்றது
என்றிவை யெண்ணுங் காலை
ஒருவனால் உலகம் உயருமென் போமே.

## செயற்கரிய செயல்

இரும்பூ துறுவர் எய்துவர் உவகை
நறுந்துணர் வேம்பின் குறுங்கணி யோரே
செந்தமிழ் வடமொழி செப்பிய வடுகுடன்
உந்துகே ரளங்கன் னடம்உரு திந்தி
ஆங்கில முதலாம் அயல்நாட் டவர்மொழி
தேங்கமழ் இன்னிசை திறந்தெரி கருவிகள்
ஓவியம் சிற்பம் ஒண்கலை நாடகம்
காவியந் தெளிதல் கடவுணிலை யுணர்தல்
பொருளியல் விலங்கியல் புன்மரம் இவற்றியல்
வரலா றுடல்நூல் மனநூல் நிலநூல்
எண்ணியல் பலதிறத் தியல்விஞ் ஞானம்
திண்ணிய நிலமலை திரைகடல் யாறிவை
அளத்தல் துளைத்தல் அணைசெயல் ஒளிமனை
சமைத்தல் பிறவும் சார்பொறி யியற்கலை
வாயினுங் கையினும் வகுத்து வரன்முறை
ஆயுங் கல்விகள் யாவையும் அணுகிப்
பயிலவும் பயிற்றவும் பகரும்ஆ யிரவர்
அயிலவும் உறையவும் விளையாட் டயரவும்
பெருங்கலைக் கழகமும் பெட்புறு நகரமும்
ஒருங்குதன் பெயரால் ஊழிதோ றோங்க
நிறுவிய புரவலன் நிறைதிரு வாளன்
வள்ளல் அண்ணா மலையர சனையாம்
உள்ளுதோ றுள்ளுதோ றுவகை யுறுதும்
யாமந் நாணிலைக் கேற்பவோர் முத்தமிழ்

தோமற ஆய்ந்தும் தொகுத்தும் போற்றினேம்
அம்ம இத்துணை அருங்கலை மொழிகள்
இம்மியும் வளர்த்தற் கெண்ணிய நிலையால்
நயக்குமெந் தமிழகம் நன்கு பொலிவுறச்
செயற்கருஞ் செயல்செய் செட்டிநாட் டரசொடு
மயக்கற அணிவிரல் மடக்குதற் கியாருளர்
இயக்குபல் கோடிக் கொருவன் இவனே
வியத்தகு செயலிது வென்பர்
அயிர்ப்பிலா வழுதியர் அடைந்து காணினே.

## ஒப்புரவறிதல்

சொல்லுதற் கெளிதோ சொல்லுதற் கெளிதோ
பல்கலைக் கழகம் பாங்குற நிறுவுதற்
கெல்லையில் பெரும்பொருள் நல்கிய தொன்றோ
மருத்துவ நிலையம் மகளிர் மன்றம்
திருத்தளி பள்ளிகள் செய்தித் தாள்கள்
கழகம் படிப்பகம் கல்லூரி கலந்து
பழகும் பொதியில் பசிப்பிணி மருத்தில்
வெள்ளப் பெருக்கால் விளையா வறுமையால்
துள்ளுபோர்க் கொடுமையால் தொடர்துயர் நீக்கல்
என்றற் றொடக்கத் தியம்புபொது நலங்களுக்
கிந்நாட் டன்றியும் இருங்கடல் கடந்துள
பன்னாட் டகத்தும் பார்புகழ் **வள்ளல்**
**அண்ணா மலைவேள்** அருளிய பொருள்கள்
**ஒன்றரைக் கோடி**யென் றுரைப்பர்
நன்றுநன் றம்ம! நவில்ஒப் புரவே.

## தமிழிசைத் தந்தை

தந்தையென் றுரைப்போம் தந்தையென் றுரைப்போம்
முந்தைநாட் குமரி முதுபெருங் கோடும்
அஃகா வளஞ்செய் பஃறுளி யாறும்
வெஃகாக் கடல்வாய் வீழ்வதன் முன்பே
இயலிசை கூத்தென் றியம்புமுத் தமிழும்
செயல்மேம் பட்டுச் சிறந்தஇந் நாட்டில்
கழகம் இருந்து கடவுளர் ஒப்போர்
பழுதற ஆய்ந்தும் பாடியும் பரவியும்
வளர்த்தது மன்னவர் மாபே ரவைகளில்
திளைத்தது இலக்கியச் செறிவும் வாய்ந்தது
சொல்லாற் பொருளாற் சுவைமிகு பண்களால்

எல்லா ரும்மகிழ்ந் தேர்குந் தகையது
நந்தமி ழிசைஇதன் நயத்தினை மறந்து
வந்தன யாவையும் வரவேற் றமையால்
நடுநிலைத் தமிழிசை நலிந்து மெலிந்தது
நடுநிலை திறம்பியோர் கடையி லொதுக்கினர்
தாயின் இழிநிலை தவிர்ப்பதற் கெழுந்த
மீயுயர் பறவை வேந்தனே யென்னச்
செழுந்தமி ழன்னையின் சிறுமை பொறாஅது
அழுங்கிய உளத்தனாய் அறிஞரைக் கூட்டியும்
இல்லையென் றுரைத்தன எல்லாம் இயற்றுவித்து
ஒல்லையிற் பதித்தும் உயர்பரி சுதவியும்
பள்ளிகள் அமைத்தும் பலப்பல அவைகளில்
எள்ளியோர் நாணுமா றினிதெடுத் தியம்பியும்
தலைநகர் தன்னில் தமிழிசைச் சங்கம்
நிலைபெற நிறுவியும் நீணிதி பொழிந்தும்
இனையபன் முயற்சியால் இசைத்தமிழ்க் குயிரும்
புனைவுறு நூலெனும் புத்துரு வுங்கொடுத்து
அரங்கினும் நாட்டவர் அகத்தினும் உய்த்தே
உரம்பெறு வாகையாம் ஒள்ளிசை மிலைச்சிய
அண்ணா மலையாம் அரசனைத்
தண்ணார் தமிழிசைத் தந்தையென் போமே.

## குறிக்கோள் முதலிய சிறப்புக்கள்

இயற்றல் ஈட்டல் காத்தல் ஈத்தவை
செயற்கரும் செயல்செயல் திருக்கூத் தியற்றும்
இறைவன் அடிமலர் இடையறா தேத்தல்
குறைவறப் பல்கலைக் கோயிலைப் பேணல்
இத்தமிழ் நாட்டில் யாங்கணுந் தமிழிசை
உய்த்துப் பரப்புதல் உவையென் குறிக்கோள்
என்றுரைத் தவ்வா றியாவையும் முடித்து
வென்றி சூடிய வியத்தகு செம்மல்
ஒன்றிய கிளைஞரும் தன்போ லுயர்ந்திட
அருந்தொழிற் பயிற்சியும் ஆக்கமும் ஊக்கமும்
ஒருங்கவர்க் குதவி யுறுதுணை யாகி
முந்நீர் வழக்கம் மகடுவோ டிலையெனும்
அந்நா ளறமின் றமையா தாகும்
கல்வியும் உலகக் காட்சியும் ஆங்குள
பல்வகை இயல்பும் பரவுநா கரிகமும்
மகளிருந் தெரிந்திடல் மாண்புடைத் தாகலின்

தகவுடை யாடவர் தம்மனை வியரொடு
வெளிநாடு சேறல் விலக்கன் றென்றுதன்
ஒளிமிகு தேவியை உடன்கொண் டுலகெலாம்
தெளிதரக் கண்டு திருந்திய பிறரும்
எளிதினிற் செலவழி காட்டியா யிலங்கினேன்
ஆங்கிலப் பேரர சகமகிழ்ந் துதவிய
ஓங்கிய சிறப்பெலாம் உற்றநற் கொற்றவன்
வாணிகம் பொதுநலம் வளர்பொருள் நிலையம்
பேணும் மாநில மன்றெனப் பெயரிய
இடமெலாம் பெருமதிப் பெய்திய தோன்றல்
மக்கட் பிறப்பால் மருவுபே றனைத்தும்
ஒக்கவந் தடைந்த உயர்பே ராளன்
உடலாற் பொருளால் உணர்ச்சியின் உறைப்பால்
கடமைசெய் தொழுகிய கருணை வள்ளல்
அண்ணா மலைமன் அரும்பெருஞ் சீர்த்திகள்
மண்ணினைச் சுருக்கி வானின் உயர்ந்தன
கைம்மறைக் கல்லாக் கதிர்போல்
வையம் உளவரை மன்னுக மாதோ.

### தந்தையே மகன்

தந்தையே மகனெனல் தகுந்தகுந் தகுமே
செந்திரு கலைமகள் எனுமிரு செல்வியர்
உளங்கனிந் தருளும் உயர்திரு வாளன்
இளம்பரு வந்தொட் டிந்நாட் டரசியல்
வளம்பெறு சட்ட மன்றினிற் சிறந்தோன்
சென்னை மாநகர் முன்னுள் முதல்வன்
மன்னிய கல்வியால் மாணவர் உரம்பெறின்
இந்நிலம் உயர்வுபெற் றின்புறும் என்னும்
சிறந்த கொள்கையும் நிறைந்த பண்பும்
விரிந்த நோக்கமும் பொருந்திய மேலோன்
காட்சிக் கெளிமையும் கடுஞ்சொல் இன்மையும்
ஆட்சித் திறனுஞ்சேர் அமைச்சனுய் அமர்ந்தோன்
முன்னையோர் வகுத்த முறைபெறு தொழிலெலாம்
தன்னிரு கண்ணெனத் தாங்குந் தலைவன்
அறத்திற் றிரியா தருள்செயும் நெறியெலாம்
பிறர்க்கென முயலும் பெற்றிமை வாய்ந்தோன்
தந்தையார் தமிழகந் தழைக்க நிறுவிய
இந்தப் பல்கலைக் கழகப் புரவலன்
முத்தமிழ் வளர்ப்போன் மூதறி வாளன்

முத்தைய கோமான் முறைமுறை சிறந்து
மக்களும் துணைவரும் மகிழ்தர
மிக்கபல் லூழிநாள் விளங்கி வாழ்கவே.

### நன்றியறிதல்

கலைபயில் மாணவீர் கற்றறி பெரியீர்
அலகில்லைப் புரவில் ஆர்வம் உடையீர்
பலதொழி லாற்றும் பண்புடை மாந்தரீர்
சிலமொழி கூறுதும் செவிசாய்த் திடுமின்
உலகிலெத் துணையோ உயர்பெருஞ் செல்வர்
இலைமறை காய்போல் இருந்து மறைந்தனர்
அவர்தம் பெயரும் அறிகிலம் அவர்போல்
ஞாலமென் னாகிலென் யாமே வாழ்குவம்
சாலத் தொகுப்பேம் தகுபொருள் எனாது
செந்தமிழ் நாட்டுச் செல்வத் தோன்றல்
அந்தமில் பெருமை அண்ணா மலைமன்
நந்நாட் டியாவரும் நலம்பெறற் பொருட்டுப்
பன்னா றாயிரம் பசும்பொன் வழங்கி
அமைத்தனன் பல்கலைக் கழகம் அதன்பயன்
நமக்கே யுரிமையா நாம்பெறு கின்றேம்
பின்னாள் நந்தம் பிறங்கடை பெறுகுவர்
இன்னபே ருதவிக் கியாஞ்செயுங் கைம்மா
றென்னதும் இலையோ எண்ணிப் பார்மின்
உப்பிட் டவரையும் உளங்கொள் கென்று
செப்புதல் நந்தம் செழுந்தமிழ் வழக்கே
ஆயும் பல்கலைக் கழகம் அமைத்தல்
யாவரும் எளிதிற் செய்வதொன் றன்றே
ஆதலின் அப்பெருந் தகைநிலை வாக
யாதும் நும்மால் இயன்றது செய்ம்மின்
காவளர்த் திடலாம் கயந்தொட் டிடலாம்
பாவுரை நடைகளாற் பனுவல்யாத் திடலாம்
படிப்பகம் திறக்கலாம் பள்ளிகள் அமைக்கலாம்
படிப்பவர்க் குதவலாம் பரிசுகள் வழங்கலாம்
திருவுடை நகர்தொறும் சிலைகள் நாட்டலாம்
தெருப்பெய ரிடலாம் சிற்றூர்ப் பள்ளியில்
உருவப் படம்வைத் துவகை கூரலாம்
இதனால்,
மடமை யகற்றிநன் மக்களை வையத்து
இடம்பெறச் செய்யும்! இக்கலை மன்றமாம்

தாயை மறவாத் தன்மையு மாகும்
இன்னணம் யாதொன் ருயினும் இயற்றின்
மன்னும்நும் பெயரும் வரலாற் றினிலே
ஒன்றுஞ் செய்தல் ஒல்லா தாயின்
ஒன்றிய பல்கலைக் கழகம் வாழ்க
நன்றுசெய் மன்னவன் நற்புகழ் பரவுக
வென்றிசேர் அவன்குலம் விளங்குக
என்று வாழ்த்துமின் இதுவும் நன்றே.

### வாழ்த்து

வாழ்க தமிழகம்! வளர்க முத்தமிழ்!
வாழியர் தமிழர்! மகிழ்க வையகம்!
பல்கலைக் கழகம் பருதியின் விளங்குக!
மல்கிய மாணவர் முதலாம்
எல்லோரும் வாழியர்! இறையரு ளாலே. 35

## இ. எஸ். வரதராஜ ஐயர் பி. ஏ.

(30—9—1938)

பொன்னகரைந் தருவென்பார் கண்டறியோம்
பற்பலரும் புகலக் கேட்டோம்
அன்னதரு வறிவுரைகேட் டகமலரா
வரிசையறிந் தறிவுக் கேற்பக்
கன்னனெனக் கனகமழை பொழிந்துயர்பல்
கலைக்கழகங் கண்டிந் நாளில்
தன்னிகரண் ணுமலையாம் நல்லரசித்
தரணிதனிற் றழைப்ப தம்மா. 1

மமரறுக்குந் தொல்கேள்வி வல்லுநர்பால்
அளவளாஅய் மருவு மின்பம்
அமரருக்கு மெய்தரிதென் றறைதருநூல்
கற்றுயர ஆசை பூண்டோர்
தமரருக்க னெனவொளிரண் ணுமலையார்
கலைக்கழகம் தனிலெய் துற்றார்
குமரருக்கு முதியவர்க்கு மித்தகைய
இன்பங்கை கூடே யன்றோ. 2

பொருள்படைத்தா னப்பொருளைப் புகமெய்து
நற்றுறையிற் புகுத்து நல்ல
தெருள்படைத்தா னறிவறிந்த செல்வ மக்கள்
தமைப்படைத்தான் செல்வர்க் குற்ற
மருள்படைத்தா னிலன்கல்வி வல்லவர்கள்
புகழுரைகள் வனைந்தா னில்லார்க்
கருள்படைத்தான் உயரண்ணு மலையரசு
வாழ்கபல ஆண்டு நின்றே. 3

(12—10—1940)

பாரகத்தார் ஏத்தும் பரிதி யெனஒளிரும்
சீரகத்தார் மார்பன் திருமகனும்—நாரகத்துக்
கொண்டானண் ணுமலைமன் கோதில் கலைக்கழகங்
கண்டான் புலம்வளரக் காண். 4

புலம்பெருக்கிக் கற்றார் புகழ்பெருக்கி ஞான
நலம்பெருக்கிப் பல்கலையும் நாடும்—குலம்பெருக்கல்
உற்றானண் ணுமலைப்பேர் ஒள்ளியோன் நீணிதியம்
பொற்றுரு வென்னப் பொழிந்து, 5

நிதிபடைத்தான் அந்நிதியை நீளறத்திற் காக்கு
மதிபடைத்தான் கல்விவலார் வாழ்த்துந்-துதிபடைத்தான்
தண்ணார் அமுதனையான் தக்கோர் புகழ்கொடையான்
அண்ணா மலைப்பே ரரசு. 9

கலையாம் பயிர்வளரக் கற்றார் குழாங்கள்
உலையாத வின்புற் றுயர—நிலையாகத்
தேனு வெனப்பொருட்பால் சீராகப் பெய்தனனால்
மானவனண் ணாமலைப்பூ மான். 7

ஆங்கிலமுஞ் செந்தமிழு மாரியமு மாந்திரமும்
பாங்குபெறும் விஞ்ஞானப் பல்கலையும்—ஓங்கிசையும்
கற்பார்க் கெனப்பல் கலைக்கழகங் கண்டனனால்
பொற்பாரண் ணாமலையிப் போது.

மூவாப் பெருங்குடியில் மூலந் தனிலுதித்தோன்
பாவாணர் போற்றுமுயர் பண்பினனான்—மாவாரு
மார்பன்ண் ணாமலைமன் வாழ்கபல் லாண்டுகுலச்
சீர்பரவ நாளுஞ் சிறந்து.

வாழிமனை மக்களுடன் வள்ளலண் ணாமலைமன்
வாழியவன் பேரான் வளர்கழகம்—ஆழி
யிடங்கொண்டோன் காண எழிற்றில்லை மன்றுள்
நடங்கொண்டோன் தண்ணருளால் நன்கு. 10

**(28—9—1941)**

பூமன்னர் போற்றும் புகழான் புலவர் புரவலனும்
காமன் வியக்குங் கொடையான் வணிகர்தங் காவலனும்
வாமன் சுகுணன் வரோதயன் பேரருள் வாரியுயர்
பாமன்னர் பாடிடும் பண்பனண் ணாமலைப் பார்த்திபனே. 11

செய்தார் அறம்பல சேயிழை பாகன் திருத்தளிக்கட்
பெய்தார் வணிகர் பெரும்பொரு ளேனும் பெருமநின்போல்
வெய்தா மடமை வறுமை யிவற்றை விலக்கினரார்
மொய்தா ரணிபுகழ் அண்ணா மலைப்பெயர் முன்னவனே. 12

நற்பா லுயிரொடும் புக்கேழ் பிறப்பும் நலமுதவிப்
பொற்பா ரறிவைப் புகட்டிடுங் கல்வி புனிதமென்றே
அற்பா னிதிகொண் டருங்கலைக் கூடம் அமைத்தளித்தே
இப்பார் புகழ இருந்தானண் ணாமலை யேந்தனன்றே. 13

உற்றூர்க் கருள்வோ னுழையோர் களைகண் உயர்தமிழ்நூல்
கற்றூர்க் குதவுங் கனமுகில் பாவலர் காவலனும்
நற்றூர் நிருபரும் நாடும் அறிவன் நயனுடையான்
வற்றுத் திருவின் அரசனண் ணுமலை வாழியவே. 14

பெற்றுய் பெரும்பொருள் அப்பொருள் தன்னைப் பெருமைபெற
வற்றுத கல்வி வளர்ப்பா னுதவும் வரகுணனே
கற்றூர் புகழ்பெறுங் காவல நாவல கைவண்மையாற்
பொற்றுரு வேங்கப் புறங்கொளண் ணுமலைப் புண்ணியனே. 15

கண்ணு மெனப்புக லெண்ணே டெழுத்துங் கவின்செறியப்
பண்ணு ரிசையும் வளர்ப்பான் விரும்பிப் பருநிதியம்
விண்ணுர் தருமெழில் தேனுவைப் போல மிகப்பொழியும்
அண்ணலண் ணுமலைப் பேரர சேயுயர் அற்புதனே. 16

தேனுர் செழுந்தமிழ் ஆரிய மாதிய செம்மொழியும்
ஆனுப் பெருமை யிசையும் வளர வவாவிமட
மானுரு மாடவர் தாமும் பயில மகிழ்ந்தளித்தான்
கானு ரலங்கலண் ணுமலை நூற்கழ கத்தினையே. 17

அறத்தா றிதுவென் றுலகோர் அறிந்திட வார்ந்தஅன்பின்
திறத்தாற் கலைகள் வளரப் பொருள்தெரிந் தீந்தனமா
னிறத்தாள் விழையும் நிதியனண் ணுமலை நேர்மையனே
பெறத்தா னரிய பெரும்பேறு பெற்றுப் பிறங்குகவே. 18

உற்று னறிவ தறிந்துயர் மக்களை யொண்ணிதியம்
பெற்று னறம்பல பேணிநின் றுன்கலைப் பேற்றினுயர்
க்ற்றூர்க் குதவும் ஒருவன் பெரியன் கலைமகிபன்
நற்று ரணிபுகழ் அண்ணு மலைப்பெயர் நற்றவனே. 19

சீரம் பலவன் நடமார் திருத்ில்லைச் செம்பதியிற்
பேரன் பொடுநின் பெயரா னமைந்த பெருங்கழகம்
பாரம் புலிகதிர் போலென்று நின்று பயன்றரவே
நாரம் பயில்சடை வானவன் பேரருள் நாடுவனே. 20

எப்பா வலரும் விரும்பும் பெரும்புக ழேற்றுலகில்
முப்பா னிரட்டி யகவை முடித்தனை மொய்யறங்கள்
தப்பா துஞற்றினை அண்ணு மலைப்பெயர்த் தண்ணளியோய்
ஒப்பா ருனையெவர் வாழிபல் லூழி யுளஞ்சிறந்தே. 21

(6—2—1943)

பண்ணார் தமிழிசைக்கும் பாவார் தமிழனைக்கும்
கண்ணா மெனச்சொல் கலைகட்கும்—விண்ணணைத்
தண்ணார் முகிலிற் றனிநிதியம் பெய்துயர்ந்தான்
அண்ணா மலைப்பே ரரசு, 22

செய்யாள் உறைதரு மார்பன் சுகுணன் செழுங்கலைக்கு
மெய்யார் தருவின் மிகுநிதி பெய்து விரிந்தகொடைக்
கையான் தனது பெயரா னுயர்ந்த கலைக்கழகம்
மொய்யாருந் தில்லையிற் கண்டானண் ணுமலை முன்னவனே. 23

சீராரும் பெருங்குடியிற் செல்வத் தினகரன் போல்
ஏராருங் கலைபலவும் ஏற்றமுற வந்துதித்தோய்
தாராரு மரசெனவே தாரணியர் போற்றுமுயர்
பேராள பண்பார் பெருந்தகையே நீடுநினைந்
தாராயி னின்னெப்பார் அரும்புவியி னெருசிலரோ. 24

தொடர்ந்துயிரைப் பலபவத்துந் துணையாகப் படர்தலினுற்
கொடையதனி லுயர்கல்விக் கொடைசிறந்த தெனவறிந்தே
விடையவன்ருள் இணைமறவா வேந்தேநீ வேட்களத்தின்
இடையுவந்து கலைக்கழக மினிதாக நிறுவினையே. 25

ஓரிகளும் வசைக்குரலும் ஓவாத வேட்களத்து
நாரிகளும் இசைக்குரலும் நன்குலவ நல்கினையே
மூரிவன சரிதர்களு முருடர்களும் மறைந்தொழியச்
சீரியநல் லறிஞர்பலர் சிறந்தொளிரச் செய்தனையே. 26

இரும்பனையும் பேராந்தை யிடுகுரலும் இரிந்தொழியப்
பெரும்பொழிலு மின்னியமுங் பெரிதொலிக்கப் புரிந்தனையே
கரும்புதலும் பெரும்பாம்புங் கலந்துறைந்த இடம்புலவர்
விரும்புபெரு நகரமென விளங்கவருள் கூர்ந்தனையே. 27

அதனால்

நின்னறி வின்றிற நிகழ்த்துதல் எளிதோ
இன்னலம் பலதழீஇ யினிதுபல் லாண்டு
பொன்னியின் மணலினும் பலவா
மன்னுக வண்ணா மலைப்பெய ரரசே. 28

(30—9—1943)

குலத்தாற் சிறந்து பலர்புகழுங்
குணத்தான் மிகுந்து கொழுநிதியின்
நலத்தா னிறைந்து நிலவுலக
நடையா னுயர்ந்து நயமிகுந்த
புலத்தாற் றெளிந்து மலர்த்தொடையற்
புலமா மகளுக் குறுதுணையாம்
வலத்தாற் கனிந்த கொடைவீர
வள்ளா லண்ணு மலையரசே. 29

இம்மைப் புகழு மறுமையினி
விரும்பே ரின்பு மினிதருளி
மம்மர் அறுக்கு மருந்தெனவே
அறிவோர் புகழும் அருங்கல்விக்
கொம்மைப் பயிர்க்கு நிதிபொழியுங்
கொண்டால் வண்டா ரலர்மார்பா
செம்மை யுளத்தோய் வணிகர்குலச்
செம்மால் அண்ணு மலையரசே. 30

பண்ணுர் தமிழு மறிவியனூல்
பலவு மிசையும் பயின்றறிஞர்
அண்ணுந் துயர வோர்கழகம்
அமைத்தா யுன்றன் அரும்பெயரான்
எண்ணு ணப்பல் லறமுஞற்று
மேந்தால் வணிகர் குலமணியே
அண்ணு மலையென் றவனிபுகழ்
அரசே நிலஞ்சார்ந் தவிர்தருவே. 31

ஆரமு தேய்க்கு மருந்தமிழ் மொழியும்
அகத்திணை யுருக்கிடு மிசையும்
ஏரம ரறிவுக் கலைகளும் பிறவும்
எழில்மட மகளிரா டவர்கள்
நாரமொ டியைந்து நலமுறப் பயில
நற்கலைக் கழகமொன் றளித்தான்
சீரமர் வணிகர் திருக்குலத் துதித்த
செல்வனண் ணுமலை யரசே. 32

தெய்வத் தமிழு மிசையும் திகழ்கலையும்
உய்வைப் பெறவந்த உத்தமன்—கைவண்மை
மிக்கவண் ணுமலைமன் மேன்மேற்பல் லாண்டுமனை
மக்களொடும் வாழி மகிழ்ந்து. 83

(30—9—1944)

நிதியா னளகை நிருபன் உலகியல் நேர்ந்தொழுகு
மதியா னுயர்பொன் வளமார் கவிஞர் மகிழ்ந்துபுனை
துதியான் பெருங்குடித் தோன்ற லுயர்தில்லைத் தொன்னகர்வாழ்
நதியார் சடையரற் கன்பனண் ணுமலை நற்றவனே. 34

பெற்றுன் பெருநிதி யந்நிதி தன்னைப் பெருக்கநினைந்
தற்ருர் பசியை யவித்தான் கலைதழைத் தாக்கமுறப்
பொற்ருரு வென்னப் பொழிந்தே நிதியம்தன் பொற்பெயரால்
கற்ருர் புகழ்பல் கலைக்கழ கம்வைத்த காவலனே. 35

முயற்கறைதீர் மதிமுகத்தார் முருகனையா
ரொடுமியைந்து முதிரார் வத்தோ
டியற்கலையு மிசைக்கலையு மினிமையுறப்
பயிலிடங்கள் இலங்கக் கண்டோர்
வியக்கவருங் கலைக்கழக மினிதமைத்தான்
தன்பெயரான் விழைவ வெல்லாம்
பெயற்கமைந்த சுரர்சுரபி நிகரண்ணு
மலைப்பெயர்சால் பெரியோ னம்மா. 36

பண்ணு ரிசைத்தமிழ் பாரிற் பரவப் பயில்புலவர்
கண்ணுங் கலைதழைத் தோங்கச் சுரர்தங் கவின்மணிபோல்
தண்ணுர் நிதிய மிகப்பெய் தரும்புகழ் தாங்கினையால்
அண்ணல்அண் ணுமலை வேந்துபல் லாண்டுபல் லாண்டுனக்கே. 37

பொற்பார் மணியும் புலமார் தருசுதரும்
இப்பார் புகழு மெழினலமும்—ஒப்பாரில்
வாழ்வுறுசீ ரண்ணு மலையேபல் லாண்டொளிர்க
தாழ்வகன்று போகம் தழைத்து. 38

(30–9–1945)

பொன்காட்டும் அருநெறியிற் புலங்காட்டும்
வழிபிடித்துப் புரவ லோரும்
வென்காட்டும் வகைநிதியம் மிகத்திரட்டிக்
கலைவளர்க்கும் விதமன் ஞர்க்கு
முன்காட்டும் நல்லறிஞ உயரண்ணு
மலையர்சே முரல்வண் டார்த்துத்
தென்காட்டும் வேட்களத்துக் கலைக்கழகம்
நிறுவியிசை சிறந்த வள்ளால். 39

அளிக்கின்ற கொடைக்கரத்தான் அலர்மகள்வாழ்
தருமுரத்தான் அளிக்குந் தோறுங்
களிக்கின்ற திருவுளத்தான் கணிப்பரிய
பெருவளத்தான் கற்றோர்க் காணின்
தளிர்க்கின்ற மகிழ்ச்சியினான் தகவுடையோர்
புகழ்ச்சியினான் தனதன் றானும்
ஒளிக்கின்ற நிதிக்குவையான் உயரண்ணா
மலைப்பெயர்சால் உரவோன் தானே. 40

நிலஞ்சார்ந்த கற்பகமோ நினைந்தவெலாம்
அளித்தருளுந் தேனு தானோ
புலஞ்சார்ந்த சுரகுருவோ பொருள்சார்ந்த
நிதிபதியோ என்று போற்றி
வலஞ்சார்ந்த பேரறிஞர் வாயார
வாழ்த்திட நல் வணிகச் செல்வர்
குலஞ்சார்ந்த கோமகனா முயரண்ணா
மலைப்பெயர்கொள் குரிசி லம்மா. 41

விளியாது நின்றிருமை விழுப்பயனை விரைந்துதவும்
வித்தை தன்னை
அளியாரு முளந்திகழ வருநிதியம் பொழிந்துதவி
யறிஞர் பல்லோர்
களியாரு மனத்தினராய்க் கலைபயிலப் பெருங்கழகம்
கண்டான் தேன்செய்
துளியாரு மதுத்தொடையல் துயல்புயனண் ணாமலைப்பேர்த்
தோன்ற லன்றே. 42

கொடையிற் சிறந்தான் பலருவக்குங்
குணத்திற் சிறந்தான் குவலயத்தோர்
நடையிற் சிறந்தான் மிகுநிதிய
நலத்திற் சிறந்தான் புலவர்புகழ்த்
தொடையிற் சிறந்தான் அறிவறிந்த
சுதரிற் சிறந்தான் வணிகர்பலர்
இடையிற் சிறந்த புகழ்சான்ற
ஏந்தல் அண்ணா மலையரசே. 43

விண்ணிற் றருவும் வியன்பசுவும்
மின்னும் மணியும் பின்னுறவே
கண்ணிற் றிகழும் எண்ணெழுத்துங்
கலையும் வளர வலகில்நிதி

தண்ணென் முகிலின் றகப்பெய்த
தனிகன் வணிகர் புனிதமகன்
அண்ணல் அண்ணு மலைப்பெயர்சால்
அரசற் கறைதும் பல்லாண்டே. 44

பொன்மனையும் நற்புலமார் புத்திரரும் நீணிதியும்
தன்ம நெறியோர் தருமுளமும்—பன்மகிபர்
போற்றுஞ் சிறப்பும் பொருந்தியஅண் ணுமலைசீர்
சாற்று மளவினதோ தான். 45

(26-1-1947)

நலமா ருழைப்பு நனிகொண் டளகையி னுதனெனப்
பொலமார் நிதியந் தொகுத்தனை கல்விப் புலம்வளர
வலமார் பொருள்மழை பெய்திசை பெற்றனை வைசியர்தம்
குலமார்அண் ணுமலைக் கோவே நிலத்திற் குளிர்தருவே. 46

இம்மைப் பவத்தின் எழுபிறப்பின்
இயைந்தே கல்வி யுதவுமென
இசைத்த புலவன் பொருளுரையை
யினிதி னுளங்கொண் டுலகுவப்பச்
செம்மை மனத்திற் கலைபலவும்
செழிப்பப் பொழிந்து கனகமழை
சீரார் கழகம் தன்பெயராற்
றிகழ அமைத்த திருவினன்காண்
கொம்மைப் பசுவைக் குளிர்தருவைக்
கோதின் மணியைப் புறங்காணும்
கொடையான் உலக நடையுணரும்
குணவான் வணிகர் குலதிலகன்
மம்மர் அறுக்கும் மருந்துபலர்
மருவி மகிழ மனங்களிக்கும்
மதிமான் வணிக வள நாட்டு
மகிபன் அண்ணு மலையரசே. 47

அரும்பொருளைப் பெறவேண்டிக் கடல்கடப்பர்
ஆடவர்பண் பஃதா லென்னும்
இரும்பொருணூ லுரைமேற்கொண் டிருநிதியம்
தொகுத்தறத்தி னேற்ற மெண்ணிப்
பெரும்பொருளை யெழுமையினும் பயனுதவு
முயர்கல்வி பெருகப் பெய்தான்
சுரும்பொலிக்குஞ் சீரகத்தார்த் தொடைபுனையண்
ணுமலைப்பேர்த் தோன்ற லம்மா. 48

**அ**ந்நாளிற் செந்தமி ழாரணங் கைப்புரந் தாதரித்த
மன்னாதி மன்னரும் வள்ளலு மாண்டு மறைந்தொழிய
வின்னாமை கொண்டுழ லன்னைக்கிந் நாளி லினிதுதவுங்
கன்னாவ தாரஅண் ணாமலைப் பேர்கொண்ட கண்ணியனே. 49

**ஆ**யுந் தமிழ்ப்பயி ரோங்கப் பொழிமுகி லன்பருளம்
பாயு மிசைப்பவர் மேவிப் படர்தரு பல்கலையென்
றேயுந் தருவள ரூருணி யாழ்புல மெய்தினருக்
கீயுஞ்சிந் தாமணி யென்பரண் ணாமலை யேந்தலையே. 50

**பெ**ய்தார் வணிகர் பெரும்பொருளைப்
பிறங்குங் கோயிற் றிருப்பணிக்குச்
செய்தார் அறங்கள் உணவூட்டும்
திருமா டங்கள் பலசமைத்தார்
ழெய்தா னெனினு மெழுமையினு
மியைந்தே யுதவும் வித்தைதனை
யைதாக் கழக மமைத்துனைப்போல்
அளித்தா ராரண் ணாமலையே. 51

**து**த்திப் பணியும் புலியும் பணிதில்லைக் தோன்றலுக்கே
நித்திய சேவை நிகழ்த்திடு முத்தைய னேர்தவத்தான்
நத்தும் வலம்புரி முத்தெனத் தோன்றினன் நன்கொடையான்
எத்திசை யும்புகழ் அண்ணா மலைப்பெய ரேந்தலன்றே. 52

**கா**னந் தழைப்பக் கலைத்தமிழ் ஓங்கிடக் கல்விவலார்
மானஞ் சிறப்பக் கலைமாட மொன்று மகிழ்ந்தளித்தான்
வானம் பயிலு முகிற்குங்கற் றாவிற்கு மாமணிக்குந்
தானம் பயிற்றிடுஞ் சீலன் அண் ணாமலைத் தார்ப்புயனே. 53

**உ**ற்றறியு முல்லைதனக் குருள்சகட மளித்துயர்ந்தான்
ஒருவன் என்பர்
கற்றறியு மாறறிவா ருயிர்க்குதவுஞ் சிறப்புணர்ந்தே
கருணை யோங்கிப்
பொற்றருவென் றுரைபரவக் கலைபெருக வறிஞருயப்
பொன்செய் மாரி
நற்றரணி தனிற்பொழியு நலமார்அண் ணாமலைப்பேர்
நல்லோய் வாழி. 54

(30—9—1948)

நிலஞ்சார் தருவென் றவனிமிசை
நிலவும் புலவர் புகழறத்தின்
நலஞ்சார் அண்ணல் நவநிதியத்
தலைவன் வளமார் தனவணிகர்
குலஞ்சார் அண்ணா மலைப்பெயர்சால்
குணவான் கொடையில் விண்ணகத்து
வலஞ்சார் முகிலை வலங்கொண்டோன்
மாயாப் புகழை வழுத்துமினே. 55

ஊக்கஞ் சான்ற உளத்தோடும்
உலையா துழைத்துப் பலவழியும்
ஆக்கம் பெருக வரும்பொருளா
னடையும் பயனை யடைந்தறத்தின்
நோக்கம் படரக் கலைப்பயிர்க்குத்
தொகுத்த நிதியந் தனைப்பொழிந்தோன்
கோக்கள் புகழண் ணாமலைப்பேர்க்
குரிசில் அவன்பேர் வாழியரோ. 56

விண்ணோர் தருவும் வியன்பசுவும்
வீறுர் மணியும் பின்னாகத்
தண்ணார் முகிலிற் கலைப்பயிர்கள்
தழைக்கப் பொழியுந் தனிநிதியோன்
அண்ணா மலையென் றவனிபுகழ்
அரசன் பயந்த முத்தையவேள்
பண்ணார் மதியின் வளர்பிறையிற்
பாரோர் புகழ வாழியரோ. 57

அலையிற் பயிலும் வலம்புரியின்
றருளுந் தரள மெனவுரைப்பார்
மலையிற் பருமுத் துதித்ததென
மருள மாந்தர் உயரண்ணா
மலையென் றுரைக்கும் தனவணிகர்
மகவாய் வந்த முத்தையவேள்
கலையின் களைகண் அறம்வளர்க்கும்
கரத்தோன் வாழ்க பல்லாண்டே. 58

இத்தரையில் வண்சீர் இனிதிருத்தி விண்படர்ந்த
உத்தமனண் ணாமலைமால் ஒண்புதல்வன்—முத்தையவேள்
ஆட்சியினில் அண்ணா மலைப்பல் கலைக்கழகம்
மாட்சிமிக வாழ்க வளர்ந்து. 59

(24—9—1949)

நிதியாற் பெரியன் உயர்வுள்ளும்
நினைவாற் பெரியன் சுரகுருபொன்
மதியாற் பெரியன் உயரண்ணா
மலைப்பேர்க் குரியன் கலைஞர்புகழ்
துதியாற் சிறந்தோன் வணிகர்குலத்
தோன்ற லுயர்செஞ் சடையணிந்த
நதியான் கோயிற் பணிபலவும்
நயந்து புரிந்த நலத்தகையே. 60

வற்றா வளனுங் குறையாது
வளரு நிதியு நிறைமதியும்
கற்றார் புகழுங் கனக்கொடையும்
அதனா னெய்துங் கவின்புகழும்
பெற்றான் அண்ணா மலைப்பெயரோன்
பிறங்க அமைத்த கலைக்கழகம்
நற்றா ரணிவான் உள்ளளவும்
நல்லோர் புகழ வாழியவே. 61

தன்னை யடைந்தோர் விழைபொருளைத்
தகவே யுதவுந் தருவென்ப
அன்ன தருவைக் கண்டறியோம்
அறிஞ ருரையிற் கேட்டறிவோம்
மன்னு முலகிற் பொன்மாரி
மலியப் பொழிந்த நிலத்தருவாம்
கன்ன நிகரண் ணாமலைவேள்
கவினார் மக்கள் வாழியரோ, 62

கொடையிற் சிறந்த தருங்கல்விக்
கொடையென் றுணர்ந்து பொருளற்றார்க்
குடையும் உணவு முதவியறி
வுயரப் புரிந்தோன் உலகியலார்
நடையிற் சிறந்தோன் வணிகர்குல
நல்லோன் சுகுணன் சீரகத்தார்த்
தொடையிற் றிகழண் ணாமலைதன்
துகள்தீர் புகழைச் சொல்லுதுமே. 63

தூய கலைகள் செழித்தோங்கத்
துகடீர் தமிழும் பலமொழியும்
நேயப் பான்மை யுடன்வளர
நிலவும் கலைஞர் நிலையுயரத்

தேயம் புகழ்அண் ணுமலைமன்
சிறப்ப வமைத்த கலைக்கோயிற்
காய பணிகள் புரிதருமுத்
தையற் கறைதும் பல்லாண்டே. 64

கண்ணு மெனஅறிஞர் காட்டுங் கலைவளரத்
தண்ணர் முகிலிற்பொன் தான்பெய்தோன்—அண்ணு
மலைக்கழகம் நாளும் வளரப் புரிக
கலைக்களைகண் முத்தையவேள் கை. 65

வலம்புரிநே ரண்ணு மலையரசன் என்ற
சலஞ்சலநேர் முத்தையப்போர்த் தக்கோன்—நலம்புரியும்
பொற்கலைக் கோயில் புரந்துயரப் பெய்கவருள்
நற்கனக மன்றினடத் தான். 66

(5—10—1950)

தேனுர் தமிழுந் திசைமொழியும்
சீராங் கிலமுந் திகழிசையும்
ஊனுர் உயிர்நூல் உளநூலும்
உயர்வான் ஒருபல் கலைக்கழகம்
வானுர் முகிலின் வழங்கிநிதி
வகுத்தான் அண்ணு மலைவணிகர்
கோனு தரித்தன் ஞன்புகழுட்
கொண்டிந் நாட்கொண் டாடுவமே. 67

வினையா னிகழும் வியனுடலம்
விளியும் புகழான் விளைசடலம்
தனையார் பெறுவார் அவர்சதுரர்
எனுஞ்சொற் கிணங்கத் தலத்தருவே
யனையான் உயரண் ணுமலைமன்
அறிவ தறிந்தோன் அருட்கொடையான்
கனையார் கலிசூழ் புவிமாட்டுக்
கவின்சீர் உருவில் நின்ருனே. 68

எடுக்கும் பிறவி யொடுங்கூட
இயைந்தே தொடரும் எழிற்கல்வி
கொடுக்கும் பயனை நினைந்துகலைக்
கூடம் நிறுவி வறிஞர்தமக்
குடுக்க வுடையும் உணவுமளித்
துயர்வார் கல்வி யுறவுதவி
அடுக்கும் புகழ்முப் புவிகேட்க
அமைந்தான் உயரண் ணுமலையே. 69

வாளா ரரவும் மதக்கயமும்
வசம்செய் இசையின் வகைபலவும்
கோளார் தமிழும் பலவாகக்
குழுமு மொழியும் கொழித்தோங்கத்
தாளாற் றந்த பெரும்பொருளைத்
தனிமா முகிலிற் பொழிந்தளித்த
வேளாம் உயரண் ணுமலைதன்
வியனூர் புகழை விளம்புமினே. 70

உலையா முயற்சி தனைப்பெருக்கி
உவர்நீர் கடந்து நிதிபலவும்
மலையாக் குவித்து மற்றதனை
வளமார் அறத்தின் வகைக்குதவித்
தலையாம் கொடையான் நனியுயர்ந்தோன்
தகவார் அண்ணு மலையளித்த
கலையார் கழகம் பலர்பயிலக்
கவினுர்ந் தொளிர்க பல்லாண்டே. 71

வலம்புரி யீன்ற மணிமுத்த மென்ன வளர்கலைக்கு
நலம்புரி யண்ணு மலைவேள் அளித்திட்ட நற்புதல்வன்
தலம்புரி சீரன் உயர்வார்முத் தையனின் ருதரிக்கப்
பொலம்புரி அண்ணு மலைக்கழ கத்திசை பொங்குகவே. 72

தேடி நிதியைத் திரட்டிக் கலைவளர்ச்சி
நாடியவண் ணுமலைப்பேர் நன்கொடையான்—நீடுகன்னன்
அன்னுன் பெயர்கொண் டவிர்கழக முத்தையவேள்
தன்னு தரத்தொளிர்க தான். 73

(29—9—1951)

பிறந்தான் வணிகர் பெருங்குடி வாழப் பிறந்தொழுக்கம்
சிறந்தான் புவிநடை தேர்ந்தான் நிதியம் திரட்டுமுயர்
திறந்தா னறிந்து பலகோடி யீட்டித் தெளிந்துமனம்
அறந்தான் புரிந்து மறைந்தான் புகழொடண் ணுமலையே. 74

இம்மை மறுமை வீடென்னு
மிவற்றை யுதவு மியல்பினதாய்
மம்மர் அறுக்கு மருந்தென்ன
வல்லோர் வகுத்த கலைச்செல்வம்

பொம்ம லுறப்பல் கலைக்கழகம்
புரிந்தே யமைத்தான் வணிகர்குலச்
செம்ம லுயரண் ணாமலைப்பேர்ச் 75
செல்வன் அவன்சீர் பரவுதுமே.

மந்தா ரப்பே ருயர்தருவும்
வானோர் பசுவும் வளம்பொழியும்
சிந்தா மணியுங் கொடைத்திறத்தைத்
தெரிய வுணர்த்துங் கொடைவள்ளல்
சிந்தா தேவிக் குயர்நிலையம்
சிறப்ப வுதவித் தன்பெயரான்
நந்தாப் புகழென் றறையுடலம்
தரித்தான் அண்ணா மலையரசே. 76

கானாடு காக்குமா கண்டலனாட் டுத்தருநேர்
கானாடு காத்த கவினரசன்—நூனெறியோர்
பாவணிந்து போற்றப் பலகலைக்கூ டங்கண்ட
மாவணிகன் அண்ணா மலை. 77

தந்தாற் குரிய தனயன் புரியத் தகுமுதவி
பிந்தா தியற்றிநின் றன்னான் கலைதேர் பெருந்தளியை
முந்தார்வங் கொண்டு புரக்கும் புகழ்கொண்ட முத்தையவேள்
அந்தா ரணிமிசைப் பல்லாண்டு வாழ்க வருள்சிறந்தே.

(15—10—1952)

நலமார் கல்வி யெழுமையினும் நன்மை பயக்கும் எனவுணர்ந்தே
நிலமார் தருவி னிதிபொழிந்து நிறுவி நிகரில் கலைக்கழகம்
தலமார் புகழை நிலைநிறுத்தித் தணந்தான் புவியைத் தனவணிகர்
குலமார் உயரண் ணாமலைப்பேர்க் குரிசில் அவன்சீர் கூறுமினே. 79

எண்டகு கல்வி யெழுமைக் குதவு மெனவகத்துக்
கொண்டே புலமை பெருகக் கலைகள் கொழித்துயரக்
கண்டனன் பல்கலைச் சாலையண் ணாமலைக் காவலனும்
தண்டமிழ் வாழ்தரப் பொன்மாரி பெய்த தனிக்கொண்டலே. 80

விண்டார் அறிஞர் நடுவண தெய்த விருமருங்கும்
உண்டா மெனவதை யுண்ணினைந் தேகட லோடிநிதி
கண்டான் அதுகொண் டிழைத்தான் நிகரில் கலைக்கழகம்
கொண்டான் பெரும்புகழ் அண்ணாமலைப் பெயர்க் கோமகனே. 81

பாட்டும் கலையும் பலமொழிப் பாடமும் பாங்குறவே
யூட்டும் உயர்கலைக் கூட மமைத்திசை யுற்றனன்விண்
நாட்டுத் தருவிற்கும் நன்கொடை யீயும் நலமுறையைக்
காட்டிய வண்கொடை யண்ணுமலைப் பெயர்க் காவலனே. 82

கலத்தாற் பெருநிதி யீட்டிச் சிறந்த கனவணிகர்
குலத்தான் பெரும்புகழ் அண்ணுமலைக் கலைக் கூடமதி
தலத்தார் புகழ்தரு முத்தைய வேளா தரவினிற்பன்
னலத்தால் ஒளிர்க கலைகளுயர்ந்து தழைப்பதற்கே. 83

(5—9—1953)

நிலமார் தருவென் றினிதிசைக்கும்
நிகரில் கொடையான் நீள்வணிகர்
குலமார் அண்ணுமலைப் பெயர்சால்
கோமான் கல்விக் கூடமதைப்
புலமார் அறிஞர் பலர்கூடிப்
புகரில் ஆய்வு செயப்புரிந்தோன்
பலமாண் புகழை யவர்க்கினிதாய்ப்
பகரிந் நாளிற் பரவுதுமே. 84

பெற்ற நிதியம் திரைகட லோடிப் பெருநிதியை
அற்றுற் குதவி யறம்பல வாற்றி யருங்கலைகள்
கற்றோர் மகிழக் கலைக்கூடங் கண்டநற் காவலனும்
வற்றுப் புகழ்கொண்ட அண்ணு மலையினை வாழ்த்துவமே. 85

கண்ணுகு மெண்ணு மெழுத்தும் மவைதமக் காதரவாய்
விண்ணுர் முகிலி னிதிபொழிந் தேபுல வோர்தழைக்கப்
பண்ணுர் கலைக்கிளை யோங்கிட வின்பம் பழுத்தொளிர
அண்ணுமலைதரு கல்லூரி வாழ்கபல் லாண்டுகளே. 86

காட்சிதனக் கினியவரன் கலைபலவுங்
கற்றுயர்ந்த கனவான் சீர்சால்
ஆட்சிபுரிதரு டாக்டர் ராமசாமிப்
பெயர்சால் அறிஞர் கோமான்
மாட்சிமிகு துணைவேந்த னெனவமர்ந்தான்
அறிவுரைகள் வழங்க வல்லான்
தாட்சியுண்டோ வினியண்ணு மலைக்கழகந்
தனக்கதிட்டம் தழைத்த தம்மா. 87

கற்பார் மகிழக் கலைகள் வளரக் கயமையற
அற்பா ருளத்திற் கலைக்கூடம் கண்டவண் ணாமலையாம்
பொற்பார் வலம்புரி யீன்ற முத்தைய புரவலனூர்
நற்பார்வை யிற்கலை பல்குக நாளும் நனிசிறந்தே. 88

(22—10—1954)

பூந்தருவி னீந்து புகழாரண் ணாமலைப்பேர்
ஏந்தல்நன் னாளை யினிதேத்தித்—தீந்தமிழிற்
பாடுவேன் அன்னான் பருப்புகழும் மற்றவன்றன்
ஈடில் கொடைப்பண்பு மே. 89

மடியான் வருவ திலம்பாடு மற்று மடியின்மையான்
முடியாப் பொருளில்லை யென்றுணர்ந் தான்முது நீர்கடந்தான்
படியார் புகழும் நிதிபடைத் தானறப் பான்மையினால்
ஒடியாப் புகழ்பெற் றுயர்ந்தஅண் ணாமலை யுத்தமனே. 90

எண்ணில் நிதிமழை காசினித் தேனு வெனப்பொழிதந்
தண்ணலண் ணாமலை தந்தான் கலைக்கூடம் ஆங்கதனைக்
கண்ணினைக் காக்கும் இமையிற் புரந்தனன் கல்விசெல்வம்
எண்ணரும் சீர்த்திகொள் முத்தைய வேளெனும் ஏந்தலன்றே. 91

தண்டமி ழொருபால் வடமொழி யொருபால்
தகவுறு மாங்கில மொருபால்
கொண்டலின் முழங்கும் இன்னிசை யொருபால்
குலவுபல் கலையொலி யொருபால்
எண்டகு மரபி னோவியம் ஒருபால்
எழில்விளை யாட்டுகள் ஒருபால்
மண்டிய புகழார்ந் தெழில்வளர் அண்ணா
மலைக்கலைக் கூடத்தின் மாண்பே. 92

பன்னாட்டு மொழிபயின்றான் ஆங்கிலமும்
வடமொழியும் பரிந்து கற்றான்
தன்னாட்டுச் சட்டமுடன் பிறதேசச்
சட்டமுணர்ந் தறிஞர் மன்றில்
முன்னாட்டும் திறம்படைத்தான் ராமசாமிப்
பெயர்சால் முதிர் ஞானத் தோன்
தன்னாட்சி தனிப்பண்ணா மலைக்கழகம்
வளர்பிறையிற் றழைத்து வாழ்க. 93

வாழ்கவுய ரண்ணு மலைப்பல் கலைக்கழகம்
வாழ்கவவன் அன்பார் மணமக்கள்—வாழ்க
கலைபலவு மற்றவற்றைக் கற்குநர்கற் பிப்போர்
அலகில்சீர்க் கூத்தனரு ளால். 94

## வெள்ளிவிழா வாழ்த்து

(9—2—1955)

பிறந்தான் வணிகர் பெருங்குடிதன்னிற் பிறங்கறிவிற்
சிறந்தான் பெருநிதி சேர்த்தான் உலகியல் தேர்ந்துநின்றான்
அறந்தான் சிறந்ததென் றோர்ந்தான் கலைபல வாங்குயரத்
திறந்தான் கழகம் வணிகன்அண் ணாமலைச் சீரியனே. 95

விண்ணார் தருவும் உயர்தே னுவும்விண் மிளிர்மணியும்
கண்ணாரக் கண்டிலம் கேட்டறிந் தோமினிக் காசினிக்கண்
பண்ணார் தருவி னிதிபொழிந் தான்கலை பற்பலவும்
எண்ணாட் பிறையின் வளரஅண் ணாமலை யேந்தலன்றே. 96

அருத்தமுற விருதலையு மெய்திடலாம்
எனுமுரைகேட் டயர்ந்து வாளா
இருத்தல் பிழை யென்றுணர்ந்தான் இருங்கடலைக்
கடந்துபொருள் ஈட்டி யுள்ளக்
கருத்தினிடைக் கலைவளர்ச்சி கொண்டதற்கா
வனபுரிந்தான் கனத்த வண்மைக்
கொருத்தனெனப் புவிபுகழ வுயர்அண்ணா
மலைப்பெயர்சால் உரவோ னம்மா. 97

வாடிநின்ற வியற்சாலி வளமிழந்த
விசைக்கரும்பு மற்றும் தண்ணீர்
நாடிநின்ற மடமையெனும் சுடுநெருப்பால்
நலிந்தகலைத் தாவ ரங்கள்
பாடிழப்ப வவைதளிர்ப்பான் அளிப்புனல்கொண்
டொளிர்நிதிமின் பரிந்து காட்டி
நீடுபுகழ் கொண்டெழுந்த தெழில்அண்ணா
மலைப்பெயர்சால் நிறைகா ரம்மா. 98

அற்றார்க்கூ ணுடையுதவி யறச்சாலை
பலநிறுவி யால யத்தின்
சுற்றாலை பலவுயர்த்தி யிசைக்கழக
மமைத்துவளர்ந் தோங்கக் கல்வி

பொற்றுரு வென நிதியம் பொழிந்துகலைக்
கழகமருள் புரிந்து செல்வ
முற்றுர்க்கு வழிகாட்டி யென்பர்அண்ணு
மலையரசை யுலகத் தோரே. 99

தந்தை மகற்காற் றிடுநன்றி
தக்கோர் நிறைந்த பேரவைக்கண்
முந்தி யிருக்கப் புரிவதென
மொழிந்தார் அந்த முதுமொழிக்கோர்
நந்தா வெடுத்துக் காட்டாக
நன்கு விளங்கும் முத்தையனு
வந்தா தரிக்கக் கழகமகள்
வளர்ந்து சிறக்க பல்லாண்டே. 100

அண்ணு மலைவேள் அருளீன்ற
வணியார் கல்விக் கலைக்கழகப்
பெண்ணு ளகவை யையைந்து
பெற்றுள் அவள்தன் வெள்ளிவிழாக்
கண்ணுற் கண்டோ மற்றவள்பொன்
வயிரச் சாறும் கண்காணப்
பண்ணுர் மொழியா லக்கழகப்
பாவைக் கிசைப்போம் பல்லாண்டே. 101

## வித்துவான், ச. தண்டபாணிதேசிகர்

### வெள்ளிவிழா வாழ்த்து

(9—2—1955)

பொன்படைத்தார் பலருண்டு புவியெங்கும்
தன்னாட்சி பொருந்திக் குன்று
மன்படைத்தார் பலருண்டு மண்படைத்தார்
பலருண்டு மக்கள் நெஞ்சில்
நன்மாண்பு படைத்திட்டே என்றென்றும்
அறிவொளியாய் நாளுஞ் சாரும்
பன்மாட்சி புகழ்அண்ணா மலையரசர்
போற்பெருமை படைத்தார் யாரே. 1

வெள்ளிவிழாக் கொளுமிந்த வீறுபெறு
கலைக்கழகம் விருப்பஞ் சேர்ந்த
உள்ளமுடன் தமிழ்நாட்டுக் கழகமா
ஒண்டமிழ்க்கோர் கொழுகொம் பாகத்
தெள்ளியபல் லாராய்ச்சி செவ்வியநல்
விலக்கியங்கள் சேர நல்கி
ஒள்ளியர்தம் முள்ளத்துக் குடியிருந்தே
ஒப்பில்லா தென்றும் வாழ்க. 2

சுருதிபோற் பிழையாத சொல்லுடையான்
உதவிசெயும் தூய்மை யாளன்
கருதியது முடித்துவக்கும் கருத்துடையான்
முத்தையவேள் கண்போற் காக்கும்
பெருமைபெறு மிக்கழகம் சுக்கிரனார்
திசைகெழுமிப் பிறங்கித் தோன்றும்
திருவுடனே உறுதிபெறும் உழைப்பினையும்
சேர்ந்துநிதம் செழிக்க மாதோ. 3

ஞாயிறுபோற் பலர்போற்றத் திங்கள்போற்
கலைபரப்பிச் செவ்வாய் போல
வாயுறுவார் வாயடக்கி வளர்புதனாய்
வியாழன்போல் விளங்குஞ் சான்றோர்
தாயுறவே கலைப்பாலைக் காளையர்க்குத்
தந்துவக்குங் கல்வி மன்றம்
மீயுயரும் வெள்ளிவிழா மேவியதால்
பொன்வயிரம் மேவி வாழ்க. 4

தனவணிக குலவிளக்காய்த் தாழ்சடையான்
திருவருட்குத் தனியிலக்காய்
மனமகிழ உதவிபுரி மலைவிளக்காய்
மன்னர்முதல் மக்கட் கெல்லாம்
தனமுதல தந்துவக்குந் தனிச்சிந்தா
மணிவிளக்காய்த் தழைக்கும் பூமான்
தினகரனேர் முத்தையவேள் சீர்த்தியைப்போல்
இக்கழகம் செழித்து வாழ்க. 5

## சிரோமணி-வித்துவான்
## வி. கே. சேஷாத்ரியாச்சார்யார் எம். ஏ.

(12—10—1940)

அறஞ்செய் வகுப்பென் றறிவோ ரேத்தும்
காரண விடுகுறிப் பெயரா விளங்கும்
சிரேட்டிமார் குலத்திற் சீர்மிகு பெரியோன்
கருவிற் றிருவுடன் கவினிசை எய்திய
முத்தைய வள்ளல் முந்தைத் தவத்தால்
சான்ருேர் புகழத் தோன் றிய புதல்வ
அறமிகும் உலகினில் அறமிக வோங்கி
அறவோர் மலிய அவனி சிறப்புறப்
பல்வகை யுருவுடன் பார்தனில் தோன்றுவன்
யானெனப் போர்முறைத் தேர்மு னிருந்து
பார்த்தனுக் குரைத்த பரம்பொரு ளாங்கணன்
தனிப்பெருஞ் சிறப்புடன் தயங்கும் பொருள்களில்
கூறுடன் யானே குறுகிநிற் பேனெனக்
கூறிய முறையே கூறுடன் பொலிவோய்
பாரியே முதலாப் பாருளோர் புகழும்
எழுவர் பூண்ட ஈகைப் பண்புடன்
குணதிசைக் குடதிசைக் கல்வித ளொருங்கே
கனியப் பல்கலைக் கழகமு நிறுவிக்
" கட்டுரை யிற்றம் கைத்துள போழ்தே
யிட்டிசை கொண்டற னெய்துக " வென்ற
நெறியோர் நல்லுரை நெஞ்சினிற் கொண்டு
பல்வகை யறமும் பாங்கினி லோங்கப்
பார்தனிற் பல்வகைப் பணியு மியற்றினை
சிற்றின மொதுக்கினை சீலம் பொருந்தினை
இன்முக முடையை இனிய வுயினை
கொடைக்கடன் பூண்டு குறைவிலை யாயினை
எதிர்நிகழ் கழிவினும் எம்மிறை நின்போல்
அனைத்து மொருங்கே யமைந்த ஒருவற்
காண்ட லரிதென் ருன்றே ரேத்த
வானுறு நெடுவரை வயங்கிய பேரிசை
நீயுந் தகைசால் நின்கலைக் கழகமும்
யாண்டுக டோறும் ஈண்டு வாழியவே

நின்னுயர் மைந்தரு நின்நற் சுற்றமும்
நின்கலைக் கழகத் திலகுறு புலவரும்
நின்னுயர் பிறப்பாற் சிறப்புறு திருநாள்
யாண்டுக டோறும் பூண்டமே தகவால்
நின்னை வாழி வாழிபா டுவமே.

## வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்

### வெள்ளி விழா வாழ்த்து

(9—2—1955)

கொங்கினிற் சிறந்த பொன்வகை கொண்டு
குலத்தினிற் சிறந்தவர் சோழர்
மங்கைபங் காளன் செம்பொனம் பலத்தை
மண்ணுறுத் திட்டன ரெங்கள்
பங்கினிற் பாண்டித் திருநெடு நாட்டுப்
பழம்புகழ் புதுக்குவ னென்றே
அங்கணர் சபைபொன் வேய்ந்தமுத் தையவேள்
மைந்தர் அண்ணமலை அண்ணல். 1

அழகியல் செட்டி நாட்டரசுஎன்ன
அரசினர் வழங்கிடு பட்டம்
மழகளி றென்ன ஏற்றவர் தமது
மதிநிகர் முகவசீ கரமும்
பழகியார் பக்கல் இரங்குறும் பண்பும்
பகையையும் மாற்றுநற் குணனும்
கழகமெண் ணிலவற் றுதவிடு கொடையும்
கண்டவர் உளத்தினிற் பதிப்பார். 2

பலர்பலர் சேர்ந்து சிறுதொகை யுதவப்
பலதுளி பெருவெள்ள மாகி
உலகினி லெங்குங் கலைவளர் கூடம்
உரைபெற நிறுவினர் பிறரே
பலகலைக் கழகம் தமதுநீ ணிதியம்
பயன்பெறத் தொகைமிக வழங்கி
உலகுள துணையும் நிறுவிய இவர்போல்
உண்டென நாநிமி ரும்மோ. 3

தண்டமிழ் நாட்டுப் பழுநிய நீர்மைத்
தமிழிசை பேணிடர் மக்கட்
கண்டுள மிரங்கித் தமிழிசை வளர்க்கக்
கங்கணந் திருக்கையிற் பூண்டு

பண்திறந் தேவா ரந்திருப் புகழும்
பலவிசைப் பாக்களு முழங்க
மண்டலம் புகழப் புத்துயிர் இசைக்கு
வழங்கினர் புகழ்மிகப் பெரிதே. 4

மலர்புகழ் அண்ணு மலைப்பெயர் அரசர்
வண்புகழ் வாழ்க நீடூழி
பலகலை தழைக்க அன்னவர் நிறுவும்
பல்கலைக் கழகமும் வாழி
இலகுபொன் மன்றி னெந்தையா ரருளால்
இன்பமும் செல்வமும் பெற்றே
குலமுதல் மணியாய் நம்தவப் பயனுய்க்
குலவுமுத் தையவேள் வாழி. 5

---